
சாட்சி நம்பர் 3 நாவல்
இந்த இதழில் ஆரம்பம்
கல்கி
KALKI 6-3-1977 75 காசு

கல்கி
1977 மார்ச் 6
நள ௵
மாசி 23



ராஜாஜி சிந்தனை

வெகுமதி வேண்டாம்!

சிறையிலிருந்த போது ஒருநாள் எனக்குத் தந்தி வந்தது. என்னுடைய சிற்றன்னை இறந்து விட்ட செய்தி. மனம் பதற அந்தத் தந்தியைக் கொண்டு போய் ராஜாஜியிடம் காண்பித்தேன். அதைப் படித்த ராஜாஜி மிக்க அனுதாபத்துடன் அந்த ஆத்மாவின் அமைதிக்காகப் பிரார்த்தித்தார். ஆனால் நான் போய் இறந்தவரின் உடலையாவது பார்த்துவிட்டு வரலாமா என்று கேட்டதற்குக் கண்டிப்பாக அனுமதி மறுத்து விட்டார். சொந்தக் காரியங்களுக்காகச் சிறையிலிருந்து வெளியே எந்தக் காரணம் கொண்டும் போகக் கூடாது என்பது அவரது கட்டளை. நாட்டுக்காகச் சிறை செல்வதன் புனிதமே அதனால் கெட்டுப் போகும் என்பது அவர் தீர்ப்பு.

சிறையில் தண்ணிச்சைப்படி நச்சுப் பாம்புகள் நடமாடும். ஒரு சமயம் நான் நாலைந்து நச்சுப் பாம்புகளை அடித்துக் கொன்று விட்டேன். இதனைப் பாராட்டும் வகையில் சிறை அதிகாரிகள் என்னுடைய சிறைத் தண்டனையைப் பத்து நாட்கள் குறைத்தார்கள். இது ராஜாஜிக்குத் தெரியவந்த போது அதை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று சொல்லி விட்டார்! கடமையாகச் செய்த தொண்டுக்கு வெகுமதியாக எதையும் பெறக் கூடாது. எதையாவது செய்து அதிகாரிகளின் தயவைப் பெற்றுத் தண்டனையைக் குறைத்துக் கொள்வது என்று வந்து விட்டால் சிறைக்கு வந்த தன் நோக்கமே அடிபட்டுப் போய் விடும் என்பது ராஜாஜி கூறிய அறிவுரை.

டி. ராமலிங்க ரெட்டியார்
(அரக்கோணம், ராஜாஜி உருவச்சிலைத் திறப்பு விழா நினைவு மலரில்)

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

மின்சார வளர்ச்சியால் மிகுந்த சக்தி பெற்றது தமிழ்நாடு

என்று மில்லா
அளவுக்கு
மின் உற்பத்தியில்
உயர்வு

தமிழ்நாடு இன்று முழு சக்தி பெற்று விளங்குகிறது. 1976-ம் ஆண்டில் பருவ மழை பொய்த்ததால், மின் உற்பத்திக்கு உதவும நீர்த் தேக்கங்கள் வறண்டு போயின. ஆயினும், 20 முதல் 30 சதவிகிதமே மின் வெட்டு இருந்தது. 1974, 1975-ஆம் ஆண்டுகளில் முறையே மின் வெட்டின் அளவு 60, 75 சதவிகிதமாகும். ஆனால் 1976-ம் ஆண்டின் மின்சார வெட்டு மிகக் குறைவானதேயாகும். மேலும் இவ்வாண்டின் மின்சார வெட்டு முக்கிய தொழில்களையோ, சிறு தொழில் துறையினையோ பாதிக்கவில்லை. மின் இணைப்பினை சீரிய முறையில் நிர்வகித்ததாலும், அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தியைப் பெருக்கியதாலுமே இந்நிலை சாத்தியமாயிற்று.

812 மில்லியன் யூனிட்டுகளாக இருந்த என்னூர் மின் நிலைய உற்பத்தி 1840 மில்லியன் யூனிட்டுகளாக உயர்ந்தது.

பேசின் பிரிட்ச் நிலையத்தில் நீண்ட காலமாக உபயோகத்திலிருந்துவரும் பழைய கொதிகலன்களிலிருந்தே கடந்த ஆண்டைவிட 20 மெகாவாட் அதிக மின் உற்பத்தி செய்யப்பட்டது.

கடந்த முழு ஆண்டிலும் நெய்வேலி அனல் மின்நிலையத்தில் 1987 மில்லியன் யூனிட்டுகளாக இருந்த உற்பத்தி இந்த நடப்பு ஆண்டின் 9 மாத காலத்திலேயே 1941 மில்லியன் யூனிட்டுகளாக ஆயிற்று.

மின் கம்பிகளில் ஏற்படும் மின்சக்தி இழப்புகளும், மின்சாரத் திருட்டுகளும் தீவிர நடவடிக்கைகள் மூலம் கட்டுப்படுத்தப்பட்டன. இதுவகையில் நடைபெற்ற சோதனைகள் 1975-ல் 1.84 இலட்சமாக இருந்தவை

1976-ல் 5.57 இலட்சமாகப் பெருகின. 1975-ல் சோதனையிடப்பட்ட 'சர்வீசுகள்' 1.05 இலட்சம். ஆனால், 1976ல் இது 4.67 இலட்சமாக உயர்ந்தது. முந்திய ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட மின்சாரத் திருட்டுகள் 313; இந்த ஆண்டில் அவ்வெண்ணிக்கை 606. இதனால் கிடைத்த கூடுதல் வருவாய் ரூ. 20 இலட்சத்திற்கும் அதிகமாகும்.

பல்வேறு இடங்களில் நிறைவேறி வரும் திட்டங்கள் தமிழ்நாடு மின் சக்தி பெருகியுள்ள மாநிலமாக மாறுவதை எடுத்துக்காட்டும். 1976-ல் என்னூர் அனல் மின் நிலையத்தில் நான்காவது யூனிட் செயல்படத் துவங்கியது.

நீலகிரியில் நடுவட்ட நீர்த் திருப்புத் திட்டம், கன்னியாகுமரி மாவட்டத்தில் குட்டியாறு குழாய் நீரேற்றுத் திட்டம் ஆகியவை 1976-ல் செயல்படத் துவங்கின.

1977-78	குந்தா IV வது நிலையின் கீழ், மேலும் இரண்டு மின் நிலையங்கள்.
1978-79	மதுரை மாவட்டத்தில் சுருளியாறு மின் திட்டம்.
	தூத்துக்குடி அனல்மின் திட்டத்தின் முதல் யூனிட் துவக்கம்.
	கல்பாக்கம் அணு மின் திட்டம்.

விவசாயத்திற்கும், சிறு தொழில்களுக்கும் அதிக மின்சார சக்தி வழங்கப்பட்டது. கடந்த ஆண்டு மின் இணைப்பு அளிக்கப்பட்ட பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 29,280. இவ்வாண்டு இணைப்பு பெற்றவை 36,000. 8000 குறைவு மின் அழுத்தத் தொழில்களுக்கும் மின் தொடர்பு அளிக்கப்பட்டது.

1976-77ல் மின்சாரத்திற்கான முதலீடு 70.18 கோடியாகும். கடந்த இரண்டாண்டுகளில் செய்யப்பட்ட மொத்த முதலீட்டுத் தொகையைவிட இது அதிகமாகும். இந்த அதிகரிப்பு தொழில் வளர்ச்சி வேகத்திற்கும், மக்கள் வாழ்க்கைத் தர உயர்விற்கும் எடுத்துக்காட்டாகும். 1977-78ல் இந்த முதலீட்டின் அளவு 90 கோடி ரூபாய்க்கும் அதிகமாக இருக்கும்.

வோல்டேஜ் (மின் அழுத்த அளவு) ஏற்ற இறக்கங்களைக் குறைக்க அரசும், மின்சார வாரியமும் அவர்களால் இயன்றதனைத்தையும் செய்ய முயன்று வருகின்றன. உயர் அழுத்த மின் வழிக் கம்பிகளும், துணை மின் நிலையங்களும் அதிகமாக நிறுவப்பட்டு வருகின்றன.

மின் உற்பத்தியைப் பெருக்கி, மின்சார வெட்டைத் தவிர்க்க முன்னேறி வருகிறது தமிழ்நாடு

EP. DIPR-7072/77-1

நகர்வலம்

கோலாப்பூர்

புனாவிலிருந்து தெற்கே போகும் வண்டியில் இரவு ஏறிப் படுத்துக் கொண்டு விடியற்காலை ஆறு மணிக்குக் கண் விழித்தீர்களானால் உங்கள் கண்ணில் படுவது கோலாப்பூர் ஸ்டேஷன் பெயர்ப் பலகை. ஸ்டேஷனைப் பார்த்தீர்களானால் இறங்குவதற்குத் தயங்குவீர்கள். அவ்வளவு, பழங்காலத்து ரயிலடி. எவ்வித முன்னேற்றமும் இல்லாமல் இருக்கிறது. ஊருக்குள் போனாலும் அப்படி ஒன்றும் விசேஷ முன்னேற்றமடைந்து விட்டதாகத் தோன்றாது. இதற்கு அரசியல் ரீதியான காரணம் அளிக்க வேண்டுமானால், இது பரம்பரையாக எதிர்க் கட்சி அங்கத்தினரையே சட்ட சபைக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பி வந்திருக்கிறது என்று கூறலாம். ஆனால் காங்கிரஸ் ஆட்சியில்தான் 'சிவாஜி யுனிவர்சிடி' என்ற புதுப் பல்கலைக் கழகம் இங்கு ஏற்பட்டுள்ளது என்பதையும் மறப்பதற்கில்லை.

காண்டேகர் இந்த ஊரில் வசித்துத்தான் பல அற்புத நவீனங்கள் எழுதி ஒரு லட்ச ரூபாய் மதிப்புள்ள ஞான பீட இலக்கிய விருது பெற்றார். ஆகவே, கோலாப்பூரில் இறங்கியவுடன் முதன் முதலில் செய்த பணியே அவர் வசித்த வீட்டுக்குச் சென்று அவர் நினைவுக்கு அஞ்சலி செலுத்தியதுதான். நண்பர் என்னைப் புதிதாகக் கட்டப்பட்ட வீட்டின் மாடிக்கு அழைத்துச் சென்றார். அந்த மாடிப் போர்ஷனில் தங்கித்தான் தமது இலக்கியப் படைப்புக்களை உலகத்துக்கு அளித்து வந்தார் காண்டேகர். எங்களை ஒரு பெண் — அரையில் ஒரு ஸ்கர்ட்டும் மேலே ஒரு சட்டையும் அணிந்த பெண்மணி வரவேற்றார். வயது இருபத்திரண்டு இருபத்து மூன்று இருக்கும் என்று எண்ணினேன். என்னை அந்தப் பெண்மணிக்கு அறிமுகப்படுத்திவிட்டு, ''இவர்தாம் காண்டேகர் அவர்களின் மகள்'' என்றார் நண்பர். சிறிது நேரம் தமிழகத்தில் அவர் தந்தையாருக்கு இருக்கும் நற்பெயரையும் புகழையும் பற்றிப் பேசினேன். அவரும் ஏதேதோ சொன்னார். புறப்படும் சமயத்தில் ''உங்கள் பெயரை நான் தெரிந்துகொள்ளலாமோ?'' என்று கேட்டேன்.

''மந்தாகினி!'' என்றார்.

''தங்கள் கணவர்...?'' என்று இழுத்தேன்.

''எனக்குக் கல்யாணமே ஆகவில்லை'' என்றார் அவர்.

''ஏன்?'' என்றேன்.

''நான் கல்யாணம் செய்து கொண்டிருந்தால் என் அப்பாவை யார் பார்த்துக்கொண்



⌘ உழைத்துச் சம்பாதித்தபடியே படிக்கும் மாணவர்கள்



⌘ சிவாஜி பல்கலைக்கழகம் முகப்புத் தோற்றம்

டிருப்பார்கள்?'' என்றார். எனக்குத் திகைப்பு ஏற்பட்டது.

''இனி நீங்கள் கல்யாணம் செய்து கொள்ளலாம் அல்லவா?''

''எனக்கு இப்பொழுது வயது என்ன என்று நினைக்கிறீர்கள்? முப்பத்தாறு ஆகி விட்டது'' என்றார்.

எனக்கு என்ன சொல்வது என்று தெரிய வில்லை. விடைபெற்றுக் கொண்டு படி யிறங்கினேன். 'சுடரின் ஒளியினை அனுபவிப் பவர்கள் மெழுகு கரைவதைக் கவனிப்ப தில்லை' — இப்படி நினைத்துக் கொண்டே நடந் தேன் — காண்டேகர் விட்டு விசேஷம் போலும்!

நண்பருடன் ஜீப்பில் ஊரைச் சுற்றிய போது பெரிய பெரிய பழைய கட்டடங்கள் காணப்பட்டன. கோலாப்பூர் ஒரு காலத்தில் சுதேச சமஸ்தானமாக இருந்ததால் அந்த நாளிலேயே கம்பீரமான கட்டிடங்கள் கட் டப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட கட் டடம் ஒன்றினைச் சுட்டிக் காட்டி, ''இங்கு தான் கலெக்டர் ஆபீஸ் இருக்கிறது!'' என்றார் நண்பர்.



✕ சத்ரபதி சாஹு மகாராஜ்

''யார் உங்கள் கலெக்டர்?'' என்று கேட்டேன்.

''உங்கள் ஊர்க்காரர்தான். D.T. ஜோஸப், ஐ.ஏ.எஸ்.'' என்றார்.

நம்ம ஊர்க்காரர் என்றவுடன் எனக்கு அவரைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை உந்தித் தள்ளியது.

கலெக்டர் ஜோஸப் என் அறிமுகக் கார் டினைப் பார்த்தவுடன் உள்ளே அழைத்தார். நான் வந்த நோக்கத்தைச் சொன்னவுடன் ''அரை மணி நேரம் இருங்கள். என்னைப் பேட்டி காண வந்திருக்கும் கிராம மக்களை விசாரித்து அனுப்பி விட்டு உங்களோடு பேசு கிறேன்'' என்றார். அரை மணி நேரம் அவர் அறையிலேயே இருந்தேன். ஒவ்வொரு கிராம வாசியாக அவரவர் குறைகள், விண்ணப்பங்க ளைக் கூறினர். பதில்களும் சமாதானங்களும் சொல்லி அனுப்பி வந்தார்.

நண்பர் ஜோஸப் முப்பது வயது இளைஞர். சென்னை கிறிஸ்துவக் கல்லூரி ஆங்கில இலக்கியப் பட்டதாரி. அசாத்திய சுறு சுறுப்பு. தமது வேலையில் அளவுகடந்த பற்றுதல். காலை ஏழரை மணிக்கே அவர் வேலையில் இறங்கி விடுகிறார். இதனால் அவர் இளம் மனைவி அவரைப் பற்றிக் குறைப் பட்டுக் கொள்கிறார். எனினும் அவரும் பல பொது நலப் பணிகளில் ஈடுபட்டிருக் கிறார். ஜோஸப் அவர்கள் தாம் இப்படி வேலை செய்வதன் நோக்கத்தை வெகு அழகாகக் குறிப்பிட்டார். ''கிராம மக்க ளுக்குக் கலெக்டர் என்றால் தனி மதிப்பு இருக்கிறது. இந்த அபரிமிதமான நல்லெண் ணத்தை நாட்டு நலனுக்குப் பயன்படுத்த வாய்ப்பிருக்கும்போது இந்த இளம் வயதில் செய்யவில்லை என்றால் எப்போது செய்யப் போகிறோம்?''

ஜோஸப் எவ்வளவு புத்திசாலியோ அவ் வளவு புத்திசாலிகள், கடும் உழைப்பாளிகள் கோலாப்பூர் மக்கள் என்பது அவர்களைப் பற்றி ஜோஸப் கூறிய விவரங்களிலிருந்து தெரிந்தது.

கோலாப்பூர் நிலப் பகுதி மேடும் பள்ளமு மான பகுதி. வருஷத்தில் கணிசமான அளவு மழை பொழிகிறது. ஐந்தாறு ஆறுகள் ஓடுகின்றன. மண் வளம் உதிரியான காற்றுப் புகத் தக்க மண்ணாக இருப்பதால் கரும்புச் சாகுபடிக்கு மிக ஏற்ற நிலமாகும். தண்ணீர் ஆற்றுப் படுகையிலிருந்து பம்பு வைத்து மேட்டுப் பகுதிக்குத்தான் இறைக்க வேண்டும். மேட்டு முனைக்குப் போய்ப் பின் சரிவிலிருக்கும் வயலுக்கு நீர் இறக்கக் கூடாது. தவறி இப்பக்கத்திலிருந்து அப்பக்கத்தில் உள்ள வயலுக்குத் தண்ணீர் இறைப்பார்க ளானால் சர்க்காருக்கு அபராதம் செலுத்த வேண்டும். இங்கு விவசாயிகள் அபராதம் செலுத்தத் தயங்கவே மாட்டார்கள். மேல் பகுதிக்கு நீர் இறைக்க ஆகும் செலவு அதிகம். ஆனால் அபராதமோ கிடைக்கும் லாபத்தில் ஒரு சிறு பகுதிதான்!

கோலாப்பூர் சமஸ்தானம் 1949ல் மகா ராஷ்டிர மாநிலத்துடன் இணைந்தது. சத்ர பதி சாஹு மகாராஜ் என்ற மன்னர் மிக முற்போக்கான எண்ணங்களும் சீர்திருத்தக் கருத்துக்களும் கொண்ட மன்னராக இருந்

எஸ்.வி.எஸ்



மாலா: கல்யாணமான மூணுவது மாதமே தனி வீடு, பார்க்கிறியே தனிக் குடித்தனமா?
கலா: இல்லே. அந்த மாதிரிக் காரியமெல்லாம் நான் செய்ய மாட்டேன்.
மாலா: பின் எதற்கு வீடு பார்க்கிறுய்?
கலா: என் மாமனுரையும் மாமியாரையும் தனிக் குடித்தனம் வைக்கத்தான்.

லலிதா செல்லப்பா

தார். அவர் காலத்தில் போகவதி நதியில் அணை கட்டி விவசாயத்தைப் பெருக்கினர். தொழிலகங்கள் ஏற்படுத்தினர். கூட்டுறவு சங்கங்கள் உருவாக்கினர். எல்லா சாதி மக்களுக்காகவும் தனித் தனியாக ஹாஸ்டல்கள் நிறுவி, எல்லா வகுப்பாருக்கும் கல்வி வசதி அளித்தார். மக்கள் வீரர்களாக வாழ வேண்டும் என்று மல்யுத்தப் போட்டிகளுக்கு ஊக்கம் அளித்தார். ஒரு சமயம் டில்லியில் சர்க்கஸ் சிங்கம், சர்க்கஸ் முதலாளியைத் தின்று விட்டது என்று கேள்விப்பட்டு, அந்த ரோஷமான சிங்கத்தைத் தாம் விலை கொடுத்து வாங்கி, அதைப் பழக்கிச் சமாதானப்படுத்தினர். அருமையான குதிரைகள் வளர்த்தார். அவர் வளர்த்த ரெட் ரூபஸ் — ராதா பியாரி என்ற குதிரை தம்பதியருக்குப் பிறந்த வாரிசுகள் பாரத நாட்டின் எல்லாக் குதிரைப் பந்தயங்களிலும் வென்றிருக்கின்றன. சாஹூ மகாராஜ் காட்சிக்கு எளியவராக விளங்கினர். மக்கள் தங்கள் குறைகளை மன்னரிடம் தெரிவிக்க விரும்பினல் தம்மை எளிதில் அணுகுவது சாத்தியமாக வேண்டும் என்பதற்காகப் பெரும்பாலான நேரம் மரத்தடியிலேயே தர்பார் நடத்துவார்! தாம் சாதி சமய வேறுபாடற்றவர் என்பதற்காக எல்லாச் சாதியாருடனும் சமபந்தி போஜனம் செய்வார். தமது காரின் டிரைவராக ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவரை வைத்திருந்தார். நல்ல படிப்பாளி என்ற பெயர் எடுத்தவர். மற்ற மன்னர்கள், ஆங்கில வைஸ்ராய்கள், உத்தியோகஸ்தர்கள் ஆகியோரின் மதிப்புக்குப் பாத்திரமானவர். இப்படிப்பட்ட பரந்த நோக்கம் கொண்ட சாஹூ மன்னர், குறுகிய மதி படைத்த பிராமண புரோகிதர்களின் அவமதிப்புக்கு உள்ளாக நேர்ந்ததால் அதனை எதிர்த்து இயக்கமே நடத்த வேண்டியிருந்தது. அவ்வகையில் அந்த நாளில் சென்னை ராஜதானியில் தோன்றிய ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களான சர் டி. சங்கரன் நாயர், ஸர் தியாகராச செட்டியார், சர் ஏ. ராமசாமி முதலியார் ஆகியோருடனெல்லாம் அவருக்குத் தொடர்பிருந்திருக்கிறது. கோலாப்பூர் நகர மக்கள் இன்றும் அதாவது சத்ரபதி சாஹூ மகாராஜ் மறைந்து ஐம்பதாண்டுகளுக்கு மேலாகியும்— அவருடைய ஈகைகளையும் சாகசச் செயல்களையும் கல்விப் பணியையும் மெய்யுருகிச் சொல்கிருர்கள். அந்தக் காலத்தில் சுதேச சமஸ்தானத்து மன்னர் என்ருல், மது, மாதர் இரண்டும் இருக்க வேண்டும். அவ்விரண்டினையும் தொடாதவர் என்பதையும் இன்றும் நினைவுகூர்ந்து மக்கள் மகிழ்கிருர்கள். அவருடைய பிராமண எதிர்ப்பு இயக்கத்தை முற்றும் மறந்து விட்டார்கள். மக்கள் மறந்தாலும் ஆராய்ச்சியாளர் மறப்பார்களா? சிவாஜி சர்வகலாசாலையில் சரித்திர — சமுதாயத் துறைப் பேராசிரியர்கள் என்னைப் பார்த்ததும் தமிழ் நாட்டு ஜஸ்டிஸ் கட்சியின் வரலாற்றைப் பற்றி என்னைக் கேட்க ஆரம்பித்து விட்டனர்!

1962ம் ஆண்டில் தொடங்கப் பெற்ற சிவாஜி பல்கலைக் கழகத்தில் ஷோலாப்பூர், ஸதாரா, ஸாங்கலி, கோலாப்பூர் ஆகிய ஜில்லாக்களைச் சேர்ந்த 87 கல்லூரிகள் இணைந்துள்ளன. இந்த சர்வகலாசாலையில் என்னைப் பெரிதும் கவர்ந்த ஒரு விஷயம் ஏழை மாணவர்கள், சர்வகலாசாலையைச் சேர்ந்த வயல்களில், அச்சகத்தில், புத்தகாலயத்தில் வேலை செய்து சம்பாதித்துக் கல்லூரிக் கட்டணங்களைச் செலுத்திக் கொண்டே படிக்க வசதி அளித்திருப்பதுதான். புத்தகாலயம் பதினெட்டு மணி நேரம் திறந்திருப்பதால் மாணவர்கள் விரும்பிப் படிக்க வசதி இருக்கிறது. இங்கு பட்டப் படிப்புக்குப் பின் போஸ்ட் கிராஜுவேட் கோர்ஸ்—பத்திரிகைத் தொழிலில் இருப்பதால் இத்துறைப் பேராசிரியர் என்னைத் தங்கள் மாணவர்களுக்கு மறுநாள் காலை உரையாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அது கல்விப் பத்திரிகைக்கும் அத்துடன் தொடர்பு கொண்டிருந்த, கொண்டிருக்கிற பெரிய மனிதர்களுக்கும் அவர் அளித்த கௌரவம்.


கோலாப்பூர் ஒரு புனித க்ஷேத்திரமும் கூட. லக்ஷ்மி தேவிக்கு ஓர் அருமையான கோவில் இருக்கிறது. ஏராளமான பக்தர்கள் தினம் குழுமுகிருர்கள். இந்தக் கோவிலைப் பற்றி ஒரு ரசமான ஐதீகக் கதையுண்டு.

திருப்பதி சீனிவாசப் பெருமாள், பத்மாவதி தேவியாரிடம் தமது கவனத்தைச் செலுத்தவே, திருமகள் பெருமாளிடம் ஊடிக் கொண்டு கோலாப்பூரில் குடியேறி விட்டாளாம்!

இந்தக் கர்ண பரம்பரைக் கதையைத் தவிர கோவிலைப் பற்றி நான் அங்கு சென்றிருந்த போது வேறு எவ்விதத் தகவலும் இடைக்கவில்லை. இந்த என் ஆற்றுமையை ஜோஸப்பிடம் தெரிவித்ததும் ''இக்கோவிலின் தர்மகர்த்தாவாக இருக்கும் திரு பி. பி. ஸாலுங்கி, எம். எல். ஸி. அவர்களைச் சந்தியுங்கள். பல விஷயங்கள் தெரியக் கூடும்'' என்று சொல்லி உடனே போன் மூலம் எனக்கு அவரைச் சந்திக்க வாய்ப்பும் ஏற்படுத்திக் கொடுத்தார்.

திரு ஸாலுங்கி எடுத்தவுடன் சொன்ன விவரமே தலை கிறுகிறுக்கச் செய்தது. ''இது பூர்வத்தில் சமணர்கள் கோவிலாக இருந்திருக்க வேண்டும். பிறகு ஹிந்துக்கள் புகுந்து லக்ஷ்மிதேவி கோவிலாக மாற்றி விட்டார்கள் என்று ஊகிக்க இடம் இருக்கிறது'' என்ருர்.

நான் அவரிடமும் கோலாப்பூரிடமும் விடை பெற்றேன்.


இப்பொழுது!
1000கி
எக்கானமி
பாக்கெட்
Point
DETERGENT WASHING POWDER
for sparkling white and brilliant colour washes
Point
Net Weight 1000 gms
for sparkling white and brilliant colour washes
NEW!
1000g
ECONOMY PACK
பாயிண்ட்
உயர்தரமான
டிடர்ஜண்ட் சலவைப் பவுடர்

விருப்பு வெறுப்பற்ற சாட்சியங்கள்

க. சந்தானம்

திரு ஜெகஜீவன்ராம் அவர்களின் ராஜினமா எவ்வளவு பெரிய அதிர்ச்சியை அளித்ததோ அதே அளவுக்கு அதிர்ச்சியை ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் அவர்களின் அறிக்கையும் காங்கிரஸ் வட்டாரத்தின் புத்திசாலிகளுக்கு அளித்திருக்க வேண்டும். ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி முதிர்ந்த அறிவுடையவர். அவர், தாம் எந்தக் கட்சியிலும் சேரப் போவதில்லை என்றும், மக்கள் சபைத் தேர்தலுக்கு நிற்கப் போவதில்லை என்றும் தெளிவாகக் கூறிவிட்டார். நெருக்கடி நிலைப் பிரகடனத்தை அவர் நேரடியாகவும், அழுத்தமாகவும் கண்டித்திருக்கிறார்: ''சுதந்திரத்துக்குப் பின் நாம் பல ஆண்டுகளில் வளர்த்து வந்துள்ள ஜனநாயக அமைப்புக்கள் ஒன்றன் பின் ஒன்றாக மூச்சுத் திணற அழிக்கப்பட்டுள்ளன; சட்டபூர்வமான ஆட்சிக்குக் குழி பறிக்கப்பட்டிருக்கிறது; நீதித் துறையின் சுதந்திரத்துக்கு முடிவு ஏற்பட்டு விட்டது; பத்திரிகைத் தணிக்கையும் அமலாகி விட்டது.'' அவர் குத்தல் மொழியில் மேலும் சொல்கிறார்: ''இவற்றை யெல்லாம் ஜனநாயகத்தைக் காப்பதற்காகவும் உள்நாட்டுப் பாதுகாப்புக்கு ஏற்பட்ட ஆபத்தைத் தடுப்பதற்காகவுமே செய்ததாக வேறு சொல்லிக் கொள்கிறார்கள்!''

இந்திய ஜனநாயகம் உருவாவதில் முக்கிய பங்கு வகித்த ஒருவரது விருப்பு வெறுப்பற்ற சாட்சியம் இது. பல நாடுகளில் இந்தியாவின் தூதராகவும் ஒரு முறை ஐ. நா. சபையின் தலைவராகவும் இருந்து பணியாற்றியுள்ளவரின் கருத்து.

இந்தச் சாட்சியம், மக்கள் சபைத் தேர்தல் நடக்கும்போதுகூட நெருக்கடி நிலைப் பிரகடனத்தை ரத்து செய்யாமல் இருப்பது இந்திய ஜனநாயகத்தைக் கேலிக்குள்ளாக்கியுள்ளது என்பதைச் சுதந்திர சிந்தனையுடைய எவருக்கும் புரிய வைக்கும்.

நீதித் துறை நிபுணரும் அரசியல் ஞானியுமாகிய திரு எம். சி. சாக்ளா வாக்காளர் முன் உள்ள உண்மையான பிரச்னையைப் பிட்டு வைத்திருக்கிறார். அவர் கூறுகிறார்: ''ஒரே ஒரு பிரச்னை தான் நம் முன் இன்று உள்ளது. நமக்கு ஜனநாயகம் வேண்டுமா? அல்லது சர்வாதிகாரமா? அடிமைப்பட்ட சமூகமா? சுதந்திர சமூகமா? சுதந்திரமான பத்திரிகைகளா? கட்டுப்படுத்தப்பட்ட பத்திரிகைகளா? சுதந்திரமான நீதிமன்றமா? ஆட்சிச்சார்புள்ள நீதிமன்றமா?''

ஜனநாயகம் என்ற வார்த்தையைத் துஷ்பிரயோகம் செய்வதற்கு முடிவு கட்ட வேண்டும். மக்களின் அடிப்படைச் சுதந்திரங்கள், சட்டபூர்வமான ஆட்சி, குறித்த கால இடைவெளியில் தப்பாமல் நடக்கும் சுதந்திரமான, நியாயமான தேர்தல்கள், சுதந்திரமான பத்திரிகைகள் ஆகியன ஜனநாயகத்தின் முக்கியமான அம்சங்கள். இவற்றில் எதைக் கட்டுப்படுத்தினாலும் அது ஜனநாயகத்துக்குத் தீங்கு விளைவித்ததாகவே ஆகும். காங்கிரஸ் வேட்பாளர் ஒவ்வொருவரையும், அவர் மக்கள் சபைக்கு நின்றாலும் சரி, அல்லது கேரளத்தில் போல் மாநில சட்ட மன்றத்துக்குப் போட்டியிட்டாலும் சரி, மேலே குறிப்பிட்ட முக்கியமான விஷயங்களில் தமது கருத்தை விளக்குமாறு மக்கள் கேட்க வேண்டும்.

கல்கி மலர் 36 இதழ் 32
தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற — எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

அவர்கள், விசேஷமான சூழ்நிலைகள் நெருக்கடி நிலைப் பிரகடனத்துக்கு அவசியத்தை ஏற்படுத்தின என்றும், ஜனநாயகம் முழுமையாகச் செயல்பட இன்னமும் போதிய அளவு சுய கட்டுப்பாடு இங்கு ஏற்படவில்லை என்றும் சொல்லித் தப்பிக்கப் பார்ப்பார்கள். இந்த வாதங்கள் முழுப் பொய். இவற்றை யாரும் நம்பி ஏமாறக் கூடாது. அயல் நாட்டுப் படையெடுப்போ அல்லது உள்நாட்டில் ஆயுதம் தாங்கிய பலாத்காரப் புரட்சியோ ஏற்பட்டால்தான் நெருக்கடி நிலைப் பிரகடனம் நியாயமுள்ளதாகும். இவற்றைத் தவிர்த்து வேறு எவ்வளவுதான் காரணங்களைக் கூறிப் பலமாக வாதாடினாலும் நெருக்கடி நிலைப் பிரகடனத்தை நியாயப்படுத்தவே முடியாது.

ஜனநாயகத்தில் ஆட்சியில் உள்ளவர்கள், எதிர்த் தரப்பினரின் குற்றச்

சாட்டுக்களையும், சாத்துவிக இயக்கங்களையும் சந்திக்கத் தயாராக வேண்டும். வற்புறுத்தல், பதில் பிரசாரம் இவற்றின் மூலம் எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டும். திரு ஜெயப்பிரகாஷ் நாராயணனும் திரு மொரார்ஜி தேசாயும் வேறு பலரும் பிரதமமந்திரிக்கு எதிராகப் பிரசாரத்தைத் தொடங்கினார்கள் என்ற ஒரே காரணத்துக்காக ஆயிரக் கணக்கான மக்களை விசாரணையின்றிச் சிறையிலிடுவது ஜனநாயக உரிமைகளை மறுப்பதாகும்; வடிகட்டின சர்வாதிகாரமுமாகும்.

திரு சாக்ளா குறிப்பிட்டுள்ள முக்கிய பிரச்னையை மக்கள் மன்றத்தில் வைத்து, சக்தி வாய்ந்த முறையில் அவர்கள் அதனை உணரச் செய்ய முடியுமா என்ற சந்தேகம் எழும். அகில இந்திய ரேடியோவும் ஆட்சிக்கு அடிமைப்படுத்தப்பட்ட பத்திரிகைகளும் விடாமல் செய்த, செய்து வருகிற பிரசாரங்களைக் குறுகிய காலத்தில் ஈடு கொடுத்து அடியோடு சக்தி இழக்கச் செய்துவிட முடியாது. என்றாலும் வேறு பல காரணங்களுக்காகக் காங்கிரஸுக்கு வோட்டுப் போட நினைப்பவர்களிடம் கூட ஓர் ஆரோக்கியமான மன மாற்றத்தை ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட், திரு சாக்ளா ஆகியோரின் விருப்பு வெறுப்பற்ற சாட்சியங்கள் ஏற்படுத்தும் என்பதில் எனக்குஐயமில்லை. (சுயராஜ்யாவில்எழுதியது)

பொன்னியின் புதல்வர்

அமரர் கல்கி அவர்களின் நாவல்களை எவ்வளவு ஆர்வத்துடன் படித்தார்களோ, அதே அளவு ஆர்வத்துடன் கல்கி வாசகர்கள் பொன்னியின் புதல்வரையும் படித்து வந்தார்கள்.

வாழ்க்கை வரலாற்றுத் துறையில் இது போன்ற ஒரு தரமான நூல் தமிழில் இன்றளவும் எழுதப்படவில்லை என்றும் ஓர் எழுத்தாளனுக்கு இவ்வளவு விரிவான வாழ்க்கை வரலாற்று நூல் இந்தியாவின் வேறு எந்த மொழியிலும் அமைந்ததில்லை என்றும் பல வாருகப் புகழ் பெற்றது 'சுந்தா'வின் பொன்னியின் புதல்வர்.

கல்கியில் தொடராக வெளிவந்த போதே இவ்விதம் பாராட்டுக்களைப் பெற்ற நூல் இப்போது புத்தக வடிவில் பிரசுரமாகியுள்ளது. மார்ச் ஐந்தாம் தேதி சனிக்கிழமை மாலை மயிலை ராஜேசுவரி கல்யாண மண்டபத்தில் வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெறவிருக்கிறது.

ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலட்சுமி அவர்களின் பிரார்த்தனை கீதத்துடன் விழா தொடங்கும். தமிழக ஆளுநரின் ஆலோசகர் திரு கார்த்திகேயன் தலைமை தாங்குகிறார். சென்னை உயர்நீதி மன்ற முன்னாள் நீதிபதி திரு எஸ். மகராஜன் முதல் பிரதியைக் கல்கி ஆசிரியர் திரு சதாசிவம் அவர்களிடம் வழங்குகிறார். திரு ம. பொ. சிவஞானம், தினமணி கதிர் ஆசிரியர் திரு சாவி, திரு சோமு, ஸ்ரீமதி சிவசங்கரி முதலியோர் விழாவில் பங்கு பற்றிச் சொற்பொழிவாற்றுகிறார்கள்.

இந்த விழாவை முன்னிட்டே திரு ம. பொ. சி., தமது சிலப்பதிகாரத் தொடர் சொற்பொழிவை ஒருநாள் முன்னதாக வெள்ளிக்கிழமை 4-ந் தேதி மாலை பாரதிய வித்யா பவன அரங்கில் நிகழ்த்துகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.


வானதி பதிப்பகத்தின் பிரசுரமான பொன்னியின் புதல்வர் நூல் வெளியீட்டு விழாவுக்குக் ''கல்கி'' அன்பர்களை மகிழ்வுடன் வரவேற்கிறோம்.


முதல் சீடர்

தியாகராஜ சுவாமிகளின் முதல் சிஷ்யரான வேங்கடரமண பாகவதரின் ஜெயந்தி விழாவை அவர் பிறந்த ஊரான அய்யம் பேட்டையில் அண்மையில் டாக்டர் வே. ராகவன் தொடங்கி வைத்தார். தம் துவக்கப் பேச்சில் அவர் வேங்கடரமண பாகவதர் மூலமாக நமக்குக் கிடைத்திருப்பதும் தற்போது மதுரை சௌராஷ்டிர சபையில் இருந்து வருவதுமான வாலாஜாபேட்டைச் சுவடிகளின் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்கினார். முப்பது ஆண்டுகள் தியாகய்யரைத் தினந்தோறும் கண்டு அவருடைய உருப்படிகளை யெல்லாம் எழுதி அவருடைய வாழ்க்கைக் குறிப்புக்களையும் சேர்த்து இச் சுவடிகளைத் திரட்டினார் பாகவதர். பின்னால் அவர் வாலாஜாபேட்டையில் வந்து தங்கியிருந்ததால் வாலாஜாப்பேட்டை வேங்கடரமண பாகவதர் என்று வழங்கப்பட்டார். தியாகய்யரையே அனுசரித்துத் தானும் தாம் வழிபட்டு வந்த அய்யம்பேட்டை ஸ்ரீ ராஜகோபால ஸ்வாமியின் பேரிலும் மற்ற தெய்வங்கள் பேரிலும் பல உருப்படிகளை ஸம்ஸ்கிருத, தெலுங்கு மொழிகளில் இயற்றியிருக்கிறார். இவற்றில் சுமார் நூற்றி ஐம்பது உருப்படிகள் கிடைத்திருக்கின்றன. இவர் ஜெயந்திக் குழுவினரே சுமார் ஐம்பது உருப்படிகளை ஸ்வரத்துடன் வெளியிட்டிருக்கின்றனர். இவ்வுருப்படிகளில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவை தம் குருவான தியாகய்யரைப் பற்றி அவர் இயற்றியிருக்கும் மூன்று உருப்படிகள்.

விழாவில் பங்கெடுத்துக் கொண்ட வித்துவான்களும் விதூஷிகளும் வேங்கடரமண பாகவதரின் ஸாஹித்யங்களைப் பாடினார்கள்.

இன்னும் நாலு வருஷங்களில் வரப்போகும் வேங்கடரமண பாகவதரின் இருநூறாவது பிறந்த தின விழாவுக்குள் வாலாஜாபேட்டை சுவடிகளை யெல்லாம் யோக்கியதை உள்ளவர்களைக் கொண்டு முழுதும் ஆராய்ந்து அதிலுள்ள அரிய பொருள்களைப் புத்தகங்களாக வெளியிட வேண்டும் என்று டாக்டர் ராகவன் சபையோரைக் கேட்டுக் கொண்டார்.


நான் மட்டுமல்ல. தேசத்
தின் தலைமையை ஏற்க
காங்கிரஸில் பலர் இருக்-
கிறார்கள்!
ஐயா. ஐயா!
ஆதாரம்:- இந்திரா பேச்சு
ஹிந்து - பிப் 21.
?
இந்திராவின் தலைமையே
என்றும் நீடிக்கும்!
ஆதாரம் :- பகுகுணா பேச்சு
ஹிந்து - பிப் 24
எதிர்க்கட்சியினர்
என்னை முதுகில்
குத்தப் பார்க்கின்றனர்!
காங்கிரஸ்
- கட்சியில்
குழப்பங்கள்


பசுவும் கன்றும் கொடுத்து விட்டேன்!
பாத்திரம் வழிய பால் கறந்து
கொடுப்பது உங்கள் சாமர்த்தியம்!!
டில்லி
மேலிடம்
தமிழ்நாடு
இ. காங்கிரஸ்

“ஆஷ்கால்” ஸ்தோத்திரம்

10

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி
காமகோடி
சங்கராசாரிய சுவாமிகள்



ஆசாரியாளின் 'ஸௌந்தரிய லஹரி' முடிவில் 'ஸரஸ்வத்யா லக்ஷ்ம்யா' என்று ஒரு சுலோகம் வருகிறது. அந்த சுலோகத்திலிருந்து அம்பாள் படிப்பு, பணம், மன்மதாகாரமான சரீர சம்பத்து முதலான ஐஹிகமான (இக உலகத்து) பெருமைகளைக் கூட ஆரம்ப காலத்தில் தந்து படிப்படியாக பசு–பாச பந்தத்தைக் கத்திரித்துப் பரானந்தத்தைத் தருகிறாள் என்று தெரிகிறது. ஆகையால் ஒரு 'ஸ்டேஜ்' வரை லௌகிகமாகப் பிரார்த்தனை பண்ணினாலுங்கூட அது தப்பில்லை என்று ஏற்படுகிறது.

பிரார்த்தனை பண்ணுகிற வழக்கம் எப்படியோ ஒரு விதத்தில் ஏற்பட்டு விட்டால் தானாகவே அது காலக்கிரமத்தில் ஆத்மாபிவிருத்திக்காக மட்டும் பிரார்த்திக்கிற நிலைக்குக் கொண்டு விட்டு விடும். ஐஹிகமாக நாம் பிரார்த்தனை பண்ணுவதெல்லாம் நமக்குக் கிடைத்து விடுகிறதா? இல்லை. சில பிரார்த்தனை நிறைவேறுகிறது. சில நிறைவேறாமல் போகிறது. ஆனால் நிறைவேறவில்லை என்பதற்காக நாம் பகவானை விட்டு விடுவதில்லை. பக்தியை விட்டுவிடுவதில்லை. வேறே பலனுக்காக பக்தி பண்ணினாலும் ஏதோ நாம் செய்கிற துளித் துளி பக்தியிலும் அதற்கென்றே ஒரு சுகம் நமக்குத் தெரிவதால், நாம் வேண்டின பலன் கிடைக்காவிட்டாலும் பக்தியை விடுவதில்லை. என்னிடமே ரொம்பப் பேர் வருகிறார்கள். ஏதோ ஒரு கஷ்டம் தீரவேண்டும், பெண்ணுக்குக் கல்யாணம் ஆக வேண்டும், பிள்ளைக்கு வேலை கிடைக்க வேண்டும், வியாதி போக வேண்டும், கேஸ் ஜயிக்க வேண்டும் என்று இப்படிப்பட்ட பிரார்த்தனைக்காக வருகிறார்கள். எல்லாருக்கும் எல்லாப் பிரார்த்தனையும் நிறைவேறுகிறதா? இல்லை. ஆனாலும் அதற்காக அவர்களுடைய அபிமானம் போய்விடவில்லை. தொடர்ந்து வந்து கொண்டேதான் இருக்கிறார்கள். நாம் பிரார்த்திப்பதெல்லாம் நமக்குக் கிடைத்துத்தானாக வேண்டும் என்று எதிர்பார்க்க நமக்கு அருகதையில்லை என்று உள்ளூற நமக்கே ஏதோ ஒரு தினுசில் தெரிந்திருக்கிறது. அதனால் நம் பிரார்த்தனை நிறைவேறாவிட்டாலும் பகவானை விடுவதில்லை.


பிரார்த்தனை நிறைவேறாததற்காக நாஸ்திகர்களாகப் போனவர்கள் ரொம்ப ரொம்பக் குறைச்சல்தான். அநேகமாக ஸ்வாபாவிகமாகவே (இயற்கையாகவே)தான் நாஸ்திகர்கள் அப்படியிருக்கிறார்களே தவிர, பக்தி பண்ணினதால் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை என்கிற தாபத்தால் நாஸ்திகராவதென்பது ரொம்பவும் அபூர்வம்தான். லௌகிகமான பலனை உத்தேசித்து ஏதோ கொஞ்சம் பக்தி பண்ண ஆரம்பித்துவிட்டால்கூட சரி, அது ஒருபோதும் அணைந்து போய்விடுவதில்லை. வளராமல், பக்குவமாகாமல் வேண்டுமானால் போகலாம். ஆனால் அடியோடு இல்லாமல் போய்விடுவதில்லை.

இதனால்தான் கிருஷ்ண பரமாத்மா, ''நீ ஞானியாகவோ, ஜிக்ஞாஸுவாகவோ இல்லாவிட்டாலும் சரி; ஆர்த்தனாகவோ அர்த்தார்த்தியாகவோதான் என்னிடம் வருகிறாயா? அதுவும் சரி. ஏதோ காரணத்துக்காக என்னை நம்பி வந்து விட்டாய் அல்லவா? அதனால் நீயும் பக்தன்தானப்பா'' என்று பரம கருணையோடு இவர்களையும் பக்தர்களோடு சேர்த்துக் கொள்கிறார். லௌகிகத்தில் நமக்கு எந்தப் பிரார்த்தனை இருந்தாலும் இருக்காவிட்டாலும், 'நமக்கு ஒரு குறையுமில்லை; ஒன்றுக்காகவும் நாம் பிரார்த்திக்க வேண்டியதில்லை' என்ற நிறைந்த நிலையை நாம் நிஜமாக அடைகிற வரையில் ஆத்ம சிரேயஸுக்கானவற்றைப் பகவானிடம் பிரார்த்தித்துக் கொண்டிருந்தால் அப்படிப் பிரார்த்திப்பதே நமக்கு ஓரளவு தாப சாந்தியாக இருக்கும். நம் ஆத்மாபிவிருத்திக்கு எதெது தேவை என்று பகவானுக்கே தெரியும், நாம் கேட்காமலே அவன் கொடுப்பான் என்பதெல்லாம் வாஸ்தவமானாலும்கூட, நம் குறைகளை அவனிடம் நாமே வாய் விட்டுச் சொல்லிக்கொள்வதில் நமக்கு ஓர் ஆறுதல் கிடைக்கத்தான் செய்கிறது. இந்த ரீதியில் நாம் ஆத்ம சிரேயஸுக்காக என்னென்னவற்றைப் பிரார்த்திக்க வேண்டும் என்பதை ஆசார்யாள் ''ஷட்பதி'' முதல் சுலோகத்தில் சொல்கிறார்.

(தொடரும்)

[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது]

குடிநீர்



1976-ம் ஆண்டின் தொடக்க மாதங்களில் தமிழ்நாட்டு மக்கள் பயங்கரமானதொரு சோதனையைச் சந்திக்க வேண்டி வந்தது. திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை மாவட்டங்களின் பெரும்பாலான பகுதிகளில் தொடர்ந்து இரண்டாண்டுகளுக்குப் பருவமழை பொய்த்துவிட்டது. இப்பகுதிகளில் பல இடங்களில் நிலவிய கடும் வறட்சியின் காரணமாக வலுவான பனைமரங்கள் கூடப் பட்டுப்போயின. அப்பகுதி வாழ் மக்கள் பட்ட துயர் சொல்லில் அடங்கா. இத்தகைய நிலையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு, தனி முன்னுரிமை அடிப்படையில், குடிநீர் வழங்க வேண்டியது இன்றியமையாததாயிற்று.

1976 கோடையில் கிணறுகள் தோண்டுகின்ற பிரம்மாண்டமான செயலினை தமிழ்நாடு குடி நீர் வடிகால் வாரியம் மேற்கொண்டது. கிணறுகளைத் தோண்டுவதாலோ அல்லது இருக்கின்ற கிணறுகளை ஆழப்படுத்துவதாலோ மட்டும் இப்பிரச்சனைக்கு தீர்வு கண்டு விட முடியாது. நீரை வெளிக் கொண்டு வரநிலத்தினுள் 300-400 அடி துளையும் இட வேண்டியது அவசியமாயிற்று.மக்களின் துயர் துடைக்க குடிநீர் வடிகால் வாரியம் அதி வேகத்தில் செயல் பட.வேண்டி வந்தது. தக்க நேரத்தில் எடுக்கப்பட்ட முயற்சிகளின் பயனாக, இப்பணியானது, குறித்த காலத்திற்குள் செய்து முடிக்கப்பட்டது. குடிநீர் வடிகால்-வாரியம் குறிப்பிடதக்க சாதனைகளை இவ்வாண்டில் முடித்துள்ளது. மேலும் மேலும் கடமை உணர்வுடனும், உறுதியுடனும் வாரியம் பணியாற்ற இச்சாதனைகள் உறுதுணையாக அமைந்துள்ளன.



இலட்சக்கணக்கான மக்களின் குடிநீர் தேவை நிறைவு பெற...

- 175 துளைக்கருவிகள் சேகரிக்கப்பட்டன. சில வாரியத்தினுடையவை; சில வாடகைக்கு பெறப் பட்டவை! கர்நாடகம், உத்திரப்பிரதேசம், மகாராஷ்டிரம், குஜராத் போன்ற மற்ற மாநிலங்கள் பல துளைக்கருவிகளை தாராளமாக கடன் கொடுத்து உதவியுள்ளன.

- 1976-ம் ஆண்டு கோடைக் காலத்தில் எட்டே மாதங்களில் வறட்சிப் பகுதிகளில் 6,700 ஆழ் துளைக் கிணறுகள் இறக்கப்பட்டுள்ளன. கடந்த 5 ஆண்டுகளில் இறக்கப்பட்ட மொத்தக் கிணறு களின் எண்ணிக்கையைவிட இது அதிகம்.

- 1977-ம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் மேலும் 1000 ஆழ் துளைக் கிணறுகள் இறக்கப்பட்டுவிடும்.

- 1976-77-ம் ஆண்டில் 8,671 கிராமங்களில் குடிநீர் வழங்கும் திட்டத்தை வாரியம் செயல் படுத்தியுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை 7,587 தான்.

- குழாய் கிணறுகளை நல்ல முறையில் பேணிப் பாதுகாக்க ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிலும் பராமரிப்பு அமைப்பொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- திருநெல்வேலி, இராமநாதபுரம், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் பலபகுதிகளில் ஆழ் கிணறுகள் இறக்குவது சாத்தியமானதல்ல; ஏனெனில் இங்கு கிடைக்கும் நீர் உவர் நீராக உள்ளது. ஆகவே 40 கிலோ மீட்டர் தொலைவிலிருந்தும் குழாய்கள் மூலமாக குடிநீர் கொண்டுவர திட்டங்கள் துவக்கப்பட்டுள்ளன. குளங்களில் உள்ள நீரை உபயோகிப்பதால் பல நோய்கள் பரவுவதைத் தடுக்கவும் இத்திட்டம் உதவுகிறது. இத் திட்டங்களைச் செயற்படுத்த 1977-ம் ஆண்டில் ஆகும் செலவு 3 கோடி ரூபாய் திருநெல்வேலி மாவட்டத்தில் ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 44 கிராமங்களும், இராமேஸ்வரம் தீவில் 5 சிற்றூர்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே பயனடைந் துள்ளன.

- 86 நகராட்சிகள், 5 நகரியம் பேரூராட்சிகள் 86 ஊராட்சி ஒன்றியங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. 299 ஊராட்சிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் ஆய்வில் உள்ளது.

- குடிநீர் கிணறுகளோ அல்லது வேறு வகை குடிநீர் வசதியோ இல்லாத 4,916 சிற்றூர்களுக்கும் குடிநீர் மூலம் பரவுகின்ற நோய்களால் பாதிக்கப் பட்டுள்ள 2230 சிற்றூர்களுக்கும், குடிநீர் வழங்கும் மிகப்பிரமாண்டமான பணியினை குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்டுள்ளது.

- இவ்வாண்டில் மட்டும், குடிநீர் வழங்குதலை மேம் படுத்த வாரியம் 12 கோடி ரூபாய் செலவு செய்கிறது. கடந்த 5 ஆண்டுகளில் இதற்காக செலவிடப்பட்ட தொகை ரூ. 13-31 கோடி ரூபாய் தான்.

வியக்கத்தகுசாதனை பல புரிந்தாலும், செய்யப்படவுள்ள கடுமையான பணிக்கு, இது ஒரு நல்ல ஆரம்பமாக அமைகிறது.



ராஜாஜி

வாழ்க்கை வரலாறு



முகவுரை

தமது தொண்ணூற்றைந்தாவது பிறந்த தினத்துக்கு இரு வாரங்களுக்குப் பிறகு பூஜ்ய ராஜாஜி 1972 டிசம்பர் இருபத்தைந்தாம் தேதி அமர நிலை எய்தினார். அவரது நீண்ட வாழ்க்கை வியத்தகு சாதனைகள் நிறைந்தது. அவை அவருக்குச் சமகாலத் தேசத் தலைவர்களின் முன்னணி வரிசையில் சிறப்பிடம் பெற்றுத் தந்தன. அவரது வாழ்க்கைக் கதை இந்தத் தலைமுறையினருக்கும் எதிர்காலச் சந்ததியருக்கும், சரித்திர மாணவர்களுக்கும் ஊக்கம் அளிக்கும் வற்றாச் சுனையாக விளங்கும். 1900 முதல் 1972 வரை ராஜாஜியின் 72 வருட வாழ்க்கை இந்திய சரித்திரத்துடன் பிரிக்க முடியாதபடி பிணைந்திருக்கிறது. எனவே விருப்பு வெறுப்பின்றி எழுதப்பட்ட அவரது வாழ்க்கை வரலாறு இந்திய சரித்திரத்தின் ஒரு பகுதியாகவே ஆகிவிடும். சத்தியம், அஹிம்சை என்ற இரு கோட்பாடுகளின் அடிப்படையில் இந்திய சுதந்திரப் போரை நடத்திய மகாத்மா காந்தியின் நம்பிக்கைக்குரிய முக்கியமான தளபதிகளுள் ஒருவர் அவர். ஆதலால் ராஜாஜியின்



ராஜாஜி பிறந்த வீடு

வாழ்க்கை வரலாறு காந்தியின் வாழ்க்கையையும் வெளிச்சம் போட்டுக் காட்டும். பண்டித ஜவாஹர்லால் நேரு, சர்தார் பட்டேல், பாபு ராஜேந்திர பிரசாத் ஆகிய தலைவர்களோடு அவருக்கு இருந்த தொடர்பு மிக நெருக்கமானது. எனவே ராஜாஜியின் வாழ்க்கையை முழுமையாகப் புரிந்துகொண்டால், சுதந்திரப் போராட்ட காலத்தில் முக்கியமான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்த சந்தர்ப்பங்களில் இத்தலைவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளையும் நாம் சரியான விதத்தில் புரிந்து கொள்ள முடியும்.

ராஜாஜி காலமாகிச் சிறிது காலத்துக்குள் நாங்கள் நால்வர், அதாவது நான், திரு சி. ஆர். நரசிம்மன், திரு ராஜ்மோகன் காந்தி, திரு சதாசிவம் ஆகியோர் ராஜாஜியின் வாழ்க்கை வரலாற்றினை உருவாக்கும் ஒரு குழுவாக அமைந்தோம். இக்குழு



"மங்கா"

---

* பெதிக் லாரன்ஸ், ஸ்டாபோர்டு கிரிப்ஸ், அலெக்ஸாண்டர் ஆகியோர் அடங்கிய குழு.

.973 ஜனவரி 13ந் தேதி கூடித் தேவையான முடிவுகளைச் செய்தது. ராஜாஜியின் பேரன் திரு ராஜ்மோகன் காந்தியை இவ்வரலாற்றினை எழுதத் தேர்ந்தெடுத்தோம். காரணம், அவர் ராஜாஜியின் பேரன் என்பது மட்டுமல்ல. திறமை மிக்க எழுத்தாளர்; உலகெங்கும் ஒழுக்கத்தை வளர்க்கும் உன்னத நோக்கத்துடன் அமைந்த எம். ஆர். ஏ. ஸ்தாபனத்தின் தலைவர்களுள் ஒருவராக விளங்கி, ராஜாஜி வாழ்ந்த காலத்திலேயே தமது ஆற்றலை உறுதிப்படுத்தியவர். சொந்த விருப்பு, வெறுப்புக்களை ஒதுக்கி, உண்மைக்கே முதலிடம் தருபவர். எனவே இவர் எழுதும் வாழ்க்கை வரலாற்றில் மிகைப்படுத்துதல் திரித்துக் கூறுதல் ஆகிய குற்றங்கள் நிச்சயம் இராது என நம்பினோம்.

ராஜாஜியுடன் இணைசேர்ந்து உழைத்தவர்களுள் முதியவன் என்ற முறையில் ராஜ்மோகனுக்கு யோசனைகள் கூறி உதவுவதாகவும் அவர் எழுதுவதில் ஏதேனும் குற்றம் இருப்பின் சுட்டிக் காட்டுவதாகவும் வாக்களித்தேன். ராஜாஜியின் கடைசிப் புதல்வர் திரு. ஸி. ஆர். நரசிம்மன் தகப்பனருடனேயே சதா இருந்தவராதலால் என்னைப் போலவே அவரும் உதவுவதாகக் கூறினார். இத்திட்டத்துக்குத் தேவையான பொருளாதாரத்தைத் தேடும் பொறுப்பை ஸ்ரீ சதாசிவம் மகிழ்ச்சியுடன் உடனே ஏற்றார்.

ஏற்கெனவே கிடைத்துள்ள விஷயங்களையும், புதிதாகச் சேகரிக்கும் தகவல்களையும் தொகுத்துப் பாகுபாடு செய்து வைக்க ஒரு காரியாலயம் நிறுவினோம். புதுதில்லிக்குத் தாமே நேரில் சென்று பத்திய அரசிடம் கிடைக்கக் கூடிய விவரங்களையெல்லாம் சேகரித்து வந்தார் ராஜ்மோகன். லண்டனுக்குப் போக நேர்ந்த சந்தர்ப்பத்தை இப்பணிக்கும் அவர் பயன்படுத்தி, மவுண்ட்பாட்டன் பிரபுவையும் வேறு பலரையும் சந்தித்து, *மந்திரி சபைத் தூது சமயத்திலும் மேற்கு வங்க கவர்னராக இருந்தபோதும் பின்னர் கவர்னர் ஜெனரலாகப் பதவி வகித்த போதும் ராஜாஜியின் பணிகளைப் பற்றி அரிய தகவல்களைச் சேகரித்தார்.

ராஜாஜியின் ஆரம்ப கால வாழ்க்கையையும், சத்தியாக்கிரக இயக்கத்தின் முடிவு வரை அவரது அரசியல் தலைமையையும் விவரிக்கும் முதல் பகுதி இப்போது தயாராக இருக்கிறது என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இரண்டாவது பகுதி இவ்வாண்டு இறுதிக்குள் உருவாகிவிடும் என எதிர்பார்க்கிறோம். அதன் பின் வெகு சீக்கிரமே இறுதியான மூன்றும் பாகமும் தயாராகிவிடும்.

சென்னை
ஜனவரி 1977

க. சந்தானம்
தலைவர்,
ராஜாஜி வாழ்க்கை வரலாற்றுக் குழு

முன்னுரை

காந்திஜி 1927ல் ராஜாஜி பற்றிச் சொன்னார்: "எனக்கு வாரிசாக விளங்கக் கூடியவர் அவர் ஒருவர்தாம்." அரசியல் ரீதியில் அவர் காந்திஜியின் வாரிசாகா விட்டாலும் சுதந்திர இந்தியாவின் முதல் இந்திய கவர்னர் ஜெனரலாக விளங்கினார்.



வேங்கடரமா



மன்றோ



திப்புசுல்தான்

மகாத்மாவுக்குப் பக்கபலமாக இருந்து, சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட முக்கிய தளபதிகளுள் தென்னிந்தியர் இவர் ஒருவரே. எனவே இவரது வாழ்க்கை வரலாறு தென்னிந்திய மணத்துடன் கூடிய சுதந்திரப் போராட்டக் கதை எனலாம். சுதந்திரப் போராட்டம் பற்றி இன்றுள்ள பல நூல்களும் மதிப்பு மிக்கவைதாம் என்றாலும் தென்னிந்தியாவை மையமாகக் கொண்டு எழுதப்பட்டவையல்ல. எனவே ராஜாஜியின் வாழ்க்கையையும் அவர் காலத்தையும் வர்ணிப்பது இந்தக் குறைபாட்டினை இட்டு நிரப்புவதாகும்.

ராஜாஜிக்கும் காந்திஜிக்கும் இடையிலிருந்த தொடர்பில் உள்ளார்ந்த சுவாரசியமும் உண்டு. அந்தத் தொடர்பின் ஆழத்தினைச் சீடர், தூதர், சகா, கொள்கை விளக்க

ராஜ்மோகன் காந்தி

டரையாளர் முதலிய வார்த்தைகளால் முழுமையாக உணர்த்த முடியாது.

ராஜாஜியின் பணி சுதந்திரத்துக்குப் பிறகும் அதி முக்கியத்துவம் பெற்று விளங்கியது. பிரிட்டிஷ் அரசின் நடவடிக்கைகளை எதிர்த்தது போல் புதிய அரசின் போக்குகளையும் எதிர்த்தார்.

விக்டோரியா சகாப்தத்தைச் சார்லஸ் இளவரசன் காலத்துடன் இணைப்பதான ஒரு பாலம் போல் அவ்வளவு நீண்ட காலம் வாழ்ந்தவர் ராஜாஜி என்பதாலும் அவருடைய கதை சுவாரசியம் மிகுந்ததாகிறது. அவர் பிறந்த சமயத்தில் 1857ம் ஆண்டின் சிப்பாய்க் கலகமும் உலகின் மறு பக்கத்தில் லிங்கன் கொலையுண்டதும் சமீபத்திய நிகழ்ச்சிகளாக இருந்தன. அவர் காலமானபோதோ உலக மக்களின் திட்டங்களில் இருபத்தோராம் நூற்றாண்டு பற்றிய சிந்தனைகள் இடம் பெற்றிருந்தன.

சுதந்திரத்துக்காகப் போராடுபவர்களும், நிர்வாக ஆற்றல் மிக்கவர்களும் சிறந்த எழுத்தாளர்களாகவும் இருப்ப தென்பது அபூர்வம். ராஜாஜி அவ்விதம் இருந்தார். அவர் வஞ்சனையின்றி ஆசைப்பட்டது ஒரே ஒரு விஷயத்துக்குத்தான்: நாமும் மற்றவர்களும் நல்லவர்களாக வாழ வேண்டும். அரசியலில் அவர் எப்படி இயங்குவார் என்பதை அனுமானிப்பது கடினமாக இருந்தாலும் தார்மீகக் கோட்பாட்டில் நிலைத்திருப்பார் என்பதில் ஐயமே இருந்ததில்லை.

''தங்கள் வாழ்நாளிலேயே சரித்திரம் படைத்தவர்கள் என்று கருதப்படுபவர்களைப் பற்றிக் கூறும்போது கூட நாம் உண்மைகளையும் சரியான தேதிகளையும் விவரங்களையும் மிகவும் கஷ்டப்பட்டு வேட்டையாடித்தான் கண்டு பிடிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.''

பாலகங்காதர திலகர் பற்றி எழுதும்போது ராஜாஜி இவ்விதம் குறிப்பிட்டார். ராஜாஜி வாழ்க்கை வரலாறு விஷயத்திலும் இது மிகவும் பொருத்தமாகத்தான் இருக்கிறது. அவர் உயிரோடு இருந்த காலத்தில் அவரது வாழ்க்கை வரலாற்று விவரங்களை அறியும் அவசியத்தை உணராது இருந்து விட்டேனே என்று என்னை நானே கண்டித்துக் கொண்டிருக்கிறேன். இன்று மாதக் கணக்கில் ஆராய்ந்தும் முழுமையாகக் கண்டு பிடிக்க முடியாத உண்மைகளைப் பத்தே நிமிஷங்களில் கேட்டு அறிந்திருக்கலாம்.

''ஒரு மனிதன் தன் வாழ்க்கை வரலாற்றையே எழுதும்போது எல்லாவற்றுக்கும் தன்னையே மையமாக்கிக் கொள்வதிலிருந்து அவனால் தப்ப முடியாது'' என்ற காரணம் காட்டி ராஜாஜி சுயசரிதைகளை எதிர்த்து வந்தார். ''தன்னைப் பற்றியே எழுதும் ஒரு மனிதன், செய்த தவறுகளை ஒப்புக்கொள்ளும்போது கூடத் தனக்குப் புகழ் சேருவது போல் பார்த்துக் கொள்வான்'' என்று அவர் எண்ணினார்.

இவ்வாறு சுயசரிதங்கள் மீது அவருக்கு இருந்த துவேஷம் காரணமாக எந்த விதமான விவரங்களும் கிடைக்கவே கிடைக்காதோ என்று ஒரு சந்தர்ப்பத்தில் தோன்றியது. நல்ல வேளையாக இப்படி நேரவில்லை. பூர்த்தி செய்ய முடியாத வெற்றிடங்கள் பல இருப்பது வருந்தத் தக்கதே யாயினும் அவரது வாழ்வின் புரிபடாத கட்டங்களைத் தெளிவுபடுத்தக் கூடிய பல தகவல்களும் கிடைத்திருக்கின்றன.

இந்த வாழ்க்கை வரலாற்றின் நீளம் ஒரு பிரச்னை. ஆரம்பம் முதல் இறுதி வரை கதையைக் கூறும் ஒரே பாகமாக இது விளங்க வேண்டும் என்று பலர் விரும்புவர். ஆனால் மூன்று பாகங்களாகப் பிரிப்பது, விரிவாக எழுதுவதற்கு உதவுவது மட்டுமின்றி அதன் ஒரு பாகமேனும் இப்போதே வெளிவரத் தொடங்குவதும் சாத்தியமாகிறது.

ராஜாஜியின் பொது வாழ்க்கை இயல்பாகவே மூன்று பாகங்களாக அமைகிறது. 1937 வரை அவர் அகிம்சாவாதியான ஒரு புரட்சியாளராக விளங்கி, பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்தார். 1937 முதல் 1954 வரை — யுத்த ஆண்டுகள் நீங்கலாக அவர் பொறுப்பான பதவிகளை வகித்தார். ஐம்பதுகளின் இறுதி ஆண்டுகளில் அவர் மீண்டும் எதிர்ப்பாளராக மாறினார். இம்முறை அவர் எதிர்த்தது இந்திய ஆட்சியாளரை. 1972ல் மரணம் சம்பவிக்கும் வரை தாக்குதலைத் தொடர்ந்து நடத்தினார்.

ஆக இந்த வாழ்க்கை வரலாற்றின் மூன்று பாகங்களும் வரிசைக் கிரமமாக முறையே போராட்ட வீரரையும், நிர்வாகியையும், எதிர்ப்பாளரையும் சித்திரிக்கும்.

'மங்கா' என்று சுருக்கமாக அழைக்கப்பட்ட ராஜாஜியின் மனைவி 1915ல் தமது இருபத்தாறாவது வயதிலேயே காலமாகிவிட்டார். எனவே அவரால் தமது கணவர் நடத்திய போராட்டங்களிலோ அல்லது அவரது புகழிலோ பங்கு பற்ற முடியாது போயிற்று. ஆனால் மங்காவின் நினைவு ராஜாஜியின் மனத்தில் மங்காமலிருந்து அவரது வாழ்நாட்களை யெல்லாம் வளப்படுத்தியது.

இந்நூலை நான் ராஜாஜியின் மனைவியும் அவரது ஐந்து குழந்தைகளின் தாயாருமான அலர்மேலு மங்கம்மாளுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

1. கிராமத் தலைவன்

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி நிரந்தரம் என்றே தோன்றிய 1878ம் ஆண்டில் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் பிறந்தார். சிப்பாய்க் கலகம் நடந்து இருபது ஆண்டுகளே ஆகியிருந்தபோதிலும் அது நீறு பூத்த நெருப்பாகி விட்டிருந்தது.

கிழக்கில் உள்ள தன் காலனி பற்றி லண்டன் நன்னம்பிக்கையுடன் இருந்தது. இந்தியாவின் சக்கரவர்த்தினி என்று பட்டம் பெற்றிருந்த அரசி விக்டோரியா டில்லி கூட்டம் ஒன்றுக்கு அமைதியும் தெளிவும் மிக்க செய்தி அனுப்பியிருந்தாள்: ''அவர்கள் (இந்தியர்கள்) விக்டோரியாவாகிய எமது குடும்பத்தினரிடமும் சிம்மாசனத்திடமும் விசுவாசமும் பற்றும் வைத்துள்ளதற்கான நிரூபணங்கள் எமது இதயத்தைத் தொடுகின்



பிள்ளைக்கும பெண்ணுக்கும்
நட்சத்திர பொருத்தம் பிரமாதம்தான்.
ஆனலும் அதைவிட பிரமாதம்
மணப்பெண்ணிற்கு சாரதாஸின்
முகூர்த்தப்பட்டுப்புடவை பொருத்தம்.
சாரதா'ஸ்
முகூர்த்த பட்டுப்புடவைகளுக்கு அதிர்ஷ்டமான பெயர்
தன் பில்டிங்,
மவுண்ட்ரோடு
சென்னை-600 002
போன்: 87177
H.S.B. ரோடு,
திருச்சி-620 002
போன்: 27077



ஒரு குமாஸ்தா வேலைக்காக வைக்கப்பட்ட பரீட்சையில் ''பூமிக்கும் சூரியனுக்கும் உள்ள தூரம் எவ்வளவு?'' என்றொரு கேள்வி கேட்கப்பட்டது. ஒரு வாலிபன் பின்வருமாறு விடை எழுதினான்: ''தூரம் எனக்குத் தெரியாது. ஆனால் அந்தத் தூரத்துக்கும் இந்தக் கிளார்க் வேலைக்கும் எந்த விதமான சம்பந்தமும் கிடையாது என்பது மட்டும் தெரியும்.''

அந்த வாலிபனுக்கு வேலை கிடைத்து விட்டது.

''இல்லஸ்டிரேடட் வீக்லி'' - நிம்மி

றன.'' இன்னும் நெருக்கமான அன்பைத் தமக்கும் தமது பிரஜைகளுக்கும் இடையில் அவர் எதிர்பார்த்தார்.

அரசியின் ''ஆட்சி உரிமையும் பலமும் எக்காலத்துக்கும் உறுதியாக இருக்கட்டும்'' என்பது குவாலியர் மகாராஜாவின் பிரார்த்தனையாக இருந்தது. வைஸ்ராய் லிட்டன் பிரபு ''ராஜ கம்பீர மிக்க அரசி, தமக்குப் பரம்பரைச் சொத்தாக வந்து, தமது வாரிசுகளுக்குத் தர்மகர்த்தாப் பொறுப்பேற்று வைத்திருப்பதை எந்த எதிரிக்கும் விட்டுக் கொடுக்கமாட்டார்'' என்று அறிவித்தார்.

வலிமையும், திறமையும் மிக்க மேற்கு, கிழக்கை அடக்கி விட்டிருந்தது. தென் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துப் போராடிய கடைசி மன்னன் திப்பு, ஸ்ரீரங்கப் பட்டினத்தில் 1799ல் தோல்வி கண்டு இறந்தான். ராணுவ வெற்றிகளைத் தொடர்ந்து இங்கே வெள்ளையர் ஆட்சி ஸ்திரப்பட்டுக் கொண்டிருந்தது.

பேராசை பிடித்தவர்கள் மட்டுமின்றி நல்ல ஆங்கிலேயரும் இந்தியாவில் அடியெடுத்து வைத்தனர். ஸர் தாமஸ் மன்ரோ நல்லவரில் சிறந்தவர். அவர் 1780ல் பத்தொன்பது வயது மாணுமியாக இந்தியக் கடற்கரையில் அடியெடுத்து வைத்தார். நாளடைவில் சென்னை கவர்னராகவே உயர்ந்து அப்பதவி வகிக்கும்போதே 1827ல் காலமானார். அவர் அடிமைப்படுத்தப்பட்ட ஓர் இனத்தவரின் உணர்ச்சிகளைப் புரிந்து கொண்டு எழுதினார்: ''தேச சுதந்திரம், தேசிய குண நலன்கள் ஆகியவையும் மக்களைக் கௌரவமாக வாழச் செய்கின்ற அனைத்தும்.'' பிரிட்டிஷ் ஆட்சியின் ஒருசில நன்மைகளுக்கு ''விலையாகக் கொடுக்கப்படுகின்றன.'' மேலும், ''பிரிட்டிஷ் ராஜதானிகளில் உள்ள பூர்வகுடிகள் தங்கள் உழைப்பின் பலனை அமைதியாக அனுபவிக்கலாம். ஆனால் அவர்களில் யாரும் தங்கள் தேசத்தின் அரசியல் நிர்வாகத்திலோ ராணுவ ஆட்சியிலோ பங்குபெற முடியாது'' என்று அவர் கண்டார்.

ப்...னிந்தியக் குடியானவர்கள் தாங்கள் உழும் நிலத்தின் உரிமையைப் பெற உதவினார் மன்ரோ. மாவட்ட, கிராம நிர்வாகங்களுக்கு ஒரு மரபு வகுத்தார். இம்மரபுப்படி ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒரு முன்சீப் உண்டு. நிலவரி வசூலிப்பது, மாவட்ட அதிகாரிகளுக்கு அறிக்கைகள் எழுதி அனுப்புவது, அரசின் உத்தரவுகளைக் கிராம மக்களுக்கு விளக்குவது, அவர்களின் மனுக்களை எழுதித் தருவது, சில்லறைத் தகராறுகளைத் தீர்த்து வைப்பது ஆகியன முன்சீப்பின் கடமைகள்.

ராஜாஜியின் தகப்பனார் சக்கரவர்த்தி வேங்கடார்யா, சேலம் மாவட்டத்தின் வடமேற்கு மூலையில் தொரப்பள்ளி கிராமத்தின் முன்சீப்பாக இருந்தார். சக்கரவர்த்தி என்பது குடும்பப் பெயர். அய்யங்காரான இவருடைய மூதாதையரில் ஒருவர் பற்றிக் கர்ண பரம்பரைக் கதை ஒன்று உண்டு. நல்லான் சக்கரவர்த்தி வைதிகக் கட்டுப்பாடுகளை மீறித் தாழ்த்தப்பட்ட ஜாதியைச் சேர்ந்த ஒருவரின் ஈமக் கடன்களைச் செய்து நல்லான் என்ற பெயரை அர்த்தமுள்ளதாக்கிக்கொண்டாராம். வேங்கடார்யாவின் முன்னோர்கள் சில காலம் திருப்பதிக்கு அருகே வசித்து வந்ததாகத் தெரிகிறது. இந்தத் தெலுங்குப் பகுதியிலிருந்து மைசூர் மன்னர்களின் ஆட்சியிலிருந்த பலாகாட் பீடபூமியில் பன்னபள்ளி கிராமத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

பலாகாட்டின் பெரும் பகுதி கடல் மட்டத்திலிருந்து மூவாயிரம் அடி உயரத்தில் உள்ளது. இங்கே அடிக்கடி வறட்சி தோன்றும். இங்கு தமிழ், கன்னடம், தெலுங்கு, ஹிந்துஸ்தானி, ஏன், மராத்தி கூடப் பேசும் மக்கள் இருந்த போதிலும் மொத்தத்தில் மக்கள் தொகை குறைவு. 1792ல் சுற்று வட்டாரப் பகுதிகள் பல பிரிட்டிஷ் ஆட்சிக்குக் கீழ் வந்தபோதிலும் பலாகாட் ஆக்கிரமிப்புக்கு ஆளாகாது நின்றது. ஆனால் ஏழு ஆண்டுகள் சென்றதும் திப்பு சுல்தானின் மரணத்துக்குப் பிறகு அது ஐரோப்பிய ஆட்சிக்கு விட்டுக் கொடுக்கப்பட்டது. வேங்கடார்யாவின் முன்னோர்கள் கடல் கடந்த நிலில் வாழ்ந்த அரசனின் பிரஜைகளானார்கள்.

பிரிட்டிஷார் பலாகாட்டைச் சேலம் ஜில்லாவில் ஒரு தாலுக்காவாக்கினர். பலாகாட்டின் பிரதான ஊரான ஒசூரின் பெயரையே தாலுக்காவும் பெற்றது. பிரிட்டிஷ் இந்தியாவின் ஓர் அங்கமான போதிலும் அப்பகுதிக்கு மைசூருடன் இருந்த தொடர்புகள் அழிந்து போகவில்லை. மைசூர் இப்போது பிரிட்டிஷ் அரசின் மேலாதிக்க நிலையை ஏற்றுக் கொண்ட இந்து அரசர்களால் ஆளப்பட்டு வந்தது. மேற்கே எல்லைப்புறத்தை யொட்டி அமைந்திருந்த பெங்களூர், ஒசூர் தாலுக்காவைச் சேர்ந்த ஆண் மக்களின் அபிலாஷைகளில் இடம் பெற்றது. வயது முதிர்ந்தவர்கள், மைசூரின் முஸ்லிம் மன்னர்களான ஹைதரும் திப்புவும் பிரிட்டிஷாருடன் நடத்திய போர்களைப் பற்றிய கதைகளைக் கூறினார்கள். திப்பு, தமக்கு முன்னால் இருந்த ஹிந்து மன்னர் அப்பகுதியில் வாழ்ந்த சிறு பிராமண சமூகத்தினருக்கு

The following particulars regarding the ownership of 'KALKI', the Tamil weekly newspaper, are published, as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules, 1956.

FORM IV

1. *Place of Publication:* Madras
2. *Periodicity of its Publication:* Weekly
3. *Name of Printer and Publisher:*
   V. Vaidyanathan
   Nationality: Indian
   Address: 1-A/2, Tank Road
   Nungambakkam
   Madras-600 034
4. *Name of Editor:* T. Sadasivam
   Nationality: Indian
   Address: 20, Dr. Guruswami
   Mudaliar Road
   Chetput, Madras-600 031
5. *Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital:*
   Bharathan Publications Pvt. Ltd.,
   20, Dr. Guruswami Mudaliar
   Road, Madras-600031.

V. Vaidyanathan
Publisher

1-3-77

அளித்த நிலப் பட்டாக்களைத் தொடவில்லை என்பதை நினைவுகூர்ந்தார்கள்.

வேங்கடார்யாவைப் பெற்றெடுக்கப் போகும் நரசிம்மாச்சார் 1840ம் ஆண்டு வாக்கில் பன்னபள்ளியிலிருந்து பதினாறு மைல் தொலைவில் ஒசூர் தாலுக்காவிலேயே இருந்த தொரப்பள்ளிக்கு இடம் பெயர்ந்தார். அவர் ரங்கம்மா என்ற பெண்ணை மணந்தார். அவள் தகப்பனார் ஸ்ரீனிவாசனுக்குப் பிள்ளைகள் இல்லை. எனவே தமது வீட்டைப் பெண்ணுக்கே எழுதி வைத்திருந்தார். அந்த வீட்டில் ரங்கம்மாவும் நரசிம்மாச்சாரும் வாழ்ந்து மூன்று பிள்ளைகளையும் மூன்று பெண்களையும் பெற்றெடுத்தனர். பிள்ளைகளில் மூத்தவர் வேங்கடார்யா.

இருபத்தைந்து வயது வாக்கில் வேங்கடார்யா தொரப்பள்ளியின் முன்சீப் ஆனார். அப்போது அக்கிராமத்தில் சுமார் ஐம்பது வீடுகள் இருந்தன. மக்கள் தொகை நானூறு இருக்கலாம். வேங்கடார்யாவுக்குப் பரம்பரையாக வந்த பதவி இது. எனவே இவரது தாய் வழித் தாத்தா ஸ்ரீனிவாசன் இவருக்கு முன் முன்சீப்பாக இருந்தார் என ஊகிக்கலாம்.

தொரப்பள்ளியின் செவந்த பூமியில் அரிசியும் கேழ்வரகும் விளைந்தன. தென்னையும் மாவும் இருந்தன. வேங்கடார்யாவுக்கும் அவரது உறவினர்களுக்கும் சொந்தமான சில ஏக்கர் நிலம் உண்டு. வானம் பார்த்த பூமி. இங்கொன்றும் அங்கொன்றுமாக மரங்கள். என்றாலும் தொரப்பள்ளி கிராமம் எழிலற்றதல்ல. தாழ்ந்த குன்றுகள், மேகங்கள் மீதாக சூரியன் விளையாடிச் சில சமயங்களில் அழகிய சித்திரங்களைத் தோற்றுவிக்கிறது. ஏறத்தாழ செங்குத்தான சரிவுடன் கூடிய பாறைப் பாங்கான பகுதியில் குடியிருப்புக்கள் நெருக்கமாக அமைந்துள்ளன. குறுகலான, ஆழமற்ற தென் பெண்ணை, சரிவின் பாதங்களை நனைக்கிறது. இன்று தேசிய நினைவுச் சின்னமாக விளங்கும் ரங்கம்மாவின் வீடு சரிவின் உயர் மட்டத்தில் அக்கிரகாரப் பகுதியில் உள்ளது. வீட்டின் பின்புறம் கோட்டை என்றே இன்றும் அழைக்கப்படும் கிராமச் சுவருடன் இணைகிறது. பெயருக்கு அகழி என்று கூட ஒன்று இருக்கிறது! 1750 வாக்கில் கட்டப்பட்ட ஒரு கோயில் வீட்டிலிருந்து அறுபதடி தூரத்தில் இன்றும் நிற்கிறது.


வீடு மிகவும் எளிமையானது. சுவர்களும் தரையும் சேறு பூசப்பெற்றவையே. ஓட்டுக் கூரை. குடும்பம் மையமாக இருக்கும் பெரிய அறையில் வாழ்ந்தது; உறங்கியது. இங்கே ஒளி உள்ளே வரக் கூரையில் சாளரம் ஒன்றுண்டு. இந்தப் பெரிய அறை தவிர சாப்பாட்டு அறை, சமையல் அறை, குளியலறை பன்னிரண்டுக்கு ஆறு அடி அளவுள்ள ஓர் உக்கிராண அறை ஆகியவையும் இருக்கின்றன. வீட்டை யொட்டினாற் போல் ஆண்டில் சில பருவங்களில் மட்டுமே நீர் உடைய சின்னக் கிணறு. 1968ல் சந்ததியினரில் ஒருவர் வீட்டை அன்றிருந்த மேனிக்கு ரூ. 2,750க்கு விற்றார்.

சித்தூர் மாவட்டத்தில் உள்ள குப்பம் என்ற ஊரைச் சேர்ந்த சிங்காரம்மா வேங்கடார்யாவை மணந்தாள். அப்போது வேங்கடார்யாவுக்கு வயது பதினைந்து. அவர்கள் ஒரு குழந்தைக்காகப் பல ஆண்டுகள் காத்திருந்த பின்னர் ஒரு பிள்ளை — நரசிம்மாச்சார் —பிறந்தான். இவனைத் தொடர்ந்து ஸ்ரீனிவாசனும் பிறந்தான். எல்லாப் பிரசவங்களும் பாட்டி ரங்கம்மாவின் வீட்டில் ஜன்னலற்ற இருளடைந்த உக்கிராண அறையில்தான். மூன்றாவது கடைசிக் குழந்தையாக மீண்டும் ஓர் ஆண்மகன் — ராஜுகோபாலாச்சார் — பிறந்ததும் இதே அறையில்தான். அன்று 1878ம் ஆண்டு டிசம்பர் மாதம் பத்தாம் தேதி.

(தொடரும்)

ஒரு சாதாரணக் குதிரை ஒரு சமயத்தில் ஒருவரை மட்டும் சுமந்து செல்லும்; ரேஸ் குதிரை ஒரே சமயத்தில் ஆயிரக்கணக்கான பேரைச் 'சுமந்து' செல்லும். தள்ளிக் குழியும் பறிக்கும்!

— விஸ்டம் - ஆர்.எம்.




லதாவுக்குத்
தேவை பொங்கி வரும் நுரை




தீபாவுக்குத்
தேவை பொலிவு தரும் சலவை



ரம்யா
இவர்கள் இருவரையுமே திருப்தி செய்கிறது



பொங்கி வரும் நுரை—
பொலிவு தரும் சலவை



இத்தரமான தயாரிப்பை அளிப்போர்:
அல்ட்ராமரீன் & பிக்மண்ட்ஸ் லிமிடெட், ராணிப்பேட்டை, தமிழ்நாடு
விற்பனையாளர்கள்: பாரி & கம்பெனி லிமிடெட்

SAA UP/2120

பார்த்திபன் கனவு

அமரர் கல்கி

அத்தியாயம் 8

வேஷதாரி

ஒற்றர் தலைவன் அவ்விதம் இராஜ பரிவாரங்கள் வருவதைப் பொருட்படுத்தாமல் முன்னால் காஞ்சிப் பாதையில் சென்றதைக் குந்தவி மகேந்திரன் இருவரும் கவனித்தார்கள்.

குந்தவியின் பல்லக்கும், மகேந்திரனுடைய குதிரையும் ஒன்றையொன்று ஒட்டியே சென்று கொண்டிருந்தன.

மகேந்திரனுடைய தோற்றத்தில், குந்தவியின் மென்மையும் வனப்பும், நரசிம்மவர்மரின் கம்பீரமும் வீரமும் கலந்து பொலிந்தன. அண்ணனும் தங்கையும் அச்சாலையில் பவனி வந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது.

ஓர் ஆண்டு காலமாக நரசிம்மவர்மருடைய ஸ்தானத்தில் யுவராஜா மகேந்திரன் இராஜ்ய பரிபாலனம் செய்து வந்தான். அப்படியிருந்தும், மேற்கூறிய குதிரை வீரன் இராஜ பரிவாரங்களைக் கண்டு ஒதுங்கி நிற்காமலும் மரியாதை செய்யாமலும் முன்னால் விரைந்து சென்றது எல்லாருக்குமே வியப்பை அளித்தது.

''அண்ணா! அதோ குதிரை மேல் போகிறானே, அந்த வீரனைப் பார்த்தாயா? என்ன கம்பீரமான வடிவம்! அவன் யார், தெரியுமா?'' என்று குந்தவி கேட்டாள்.

''எனக்குத் தெரியவில்லையே, தங்காய்! அவனுடைய தோற்றத்தில்இராஜ வம்சத்தின் களை காணப்பட்டது. நல்ல ஆஜானுபாகுவாகவும் தோன்றினான். அவன் குதிரையைப் பார்! இதற்குள் எவ்வளவு தூரம் போய் விட்டது!'' என்றான் மகேந்திரன்.

''காஞ்சிக்குத்தான் போகிறான் போல் தோன்றுகிறது. ஒருவேளை அயல் தேசத்தானோ, என்னமோ? இல்லாவிடில், இப்படி நம்மைக் கண்டும் நிற்காமல் போக மாட்டான். நாலு நாளைக்கு முன்பு துறைமுகத்துக்கு வந்த கப்பலில் அயல் தேசத்தார் ரொம்பப் பேர் வந்து இறங்கியிருக்கிறார்களாம். ஆகையினால்தான் தெரியாத முகங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன!'' என்று குந்தவி சொன்னாள்.

''குந்தவி, செண்பகத் தீவின் இரத்தின வியாபாரியைப் பற்றிச் சொன்னாயே; அவன் வரவே யில்லையே?'' என்றான் மகேந்திரன்.

''இல்லை'' என்று சொன்ன போது, குந்தவியின் குரலில் மிகுந்த ஏமாற்றம் தொனித்தது.

''எப்படியும் காஞ்சி அரண்மனைக்கு அவன் வராமலா போகிறான்? கண்டிப்பாக வருவான்.''

குந்தவி இதற்கு ஒன்றும் மறுமொழி சொல்லவில்லை; மௌனமாயிருந்தாள். தன்னுடைய சந்தேகம் உண்மையாயிருக்குமானால், அவன் அரண்மனைக்கு வர மாட்டான் என்று எண்ணினாள்.

குந்தவியின் மனக் கண்ணின் முன்னால், மூன்று வருஷத்துக்கு முன் காஞ்சி புரத்து வீதியில் அவள் பார்த்த சோழ ராஜ குமாரனுடைய முகமும், நேற்று மாமல்லபுரத்துத் தெருவில் சந்தித்த இரத்தின வியாபாரியின் முகமும் மாறி மாறித் தோன்றின. அவர்கள் இரண்டு பேரும் வெவ்வேறு மனிதர்களா? அப்படியானால் அந்த முக ஒற்றுமை மிகவும் அதிசயமான ஒற்றுமைதான்!

குந்தவியின் மௌனத்தையும், அவளுடைய முக வாட்டத்தையும் மகேந்திரன் கவனித்தான்.

''தங்காய்!'' என்று அருமையாக அழைத்தான்.

''என்ன, அண்ணா!''

''ஒரு மாதிரியாக இருக்கிறாயே, ஏன்?''

''ஒன்றுமில்லை, அண்ணா!''

''நான் ஒரு யோசனை செய்திருக்கிறேன், சொல்லட்டுமா?''

''சொல்லு, அண்ணா!''

''அப்பாவிடம் நான் சொல்லப் போகிறேன்: இந்தப் பல்லவ இராஜ்யத்தின் பாரத்தை அவர்தான் சுமக்க வேண்டும், என்னால் முடியாது என்று.''

''ஏன் அப்படிச் சொல்லுகிறாய், அண்ணா?''

''அவர் இருக்கும் போது நான் இராஜ்யம் ஆளுவது, சிங்கம் இருக்க வேண்டிய இடத்தில் பூனை உட்கார்ந்திருப்பது போல் இருக்கிறது! தேசத்தில் எல்லாரும் அப்படித்தான் நினைக்கிறார்கள்.''

''இடையவே கிடையாது, அண்ணா!''

''அதோடு எனக்கு வேறொரு முக்கிய காரியமும் இருக்கிறது. இன்னொரு தடவை கடற் பிரயாணம் செய்ய வேண்டும்.''

''இலங்கைக்கு மறுபடியும் போகப் போகிறாயா?''

''இல்லை, செண்பகத் தீவுக்குப் போகப் போகிறேன்.''

''என்ன அண்ணா சொல்லுகிறாய்?''

''ஆமாம்; விக்கிரமனை மன்னிக்க வேண்டுமென்று அப்பாவிடம் கேட்கப் போகிறேன். பிறகு செண்பகத்தீவுக்கு நானே போய் அவனை அழைத்து வரப் போகிறேன், தங்காய்! நான் இந்தநாட்டுக்குத் திரும்பி வந்து ஒரு வருஷம் ஆகிறது. இதுவரையில் ஒரு தடவையாவது நீ சிரித்து நான் பார்க்கவில்லை; உன் முகத்தில் சிரிப்பைப் பார்த்துவிட்டுத்தான் இனிமேல் வேறு காரியம் பார்ப்பேன்!'' என்றான் மகேந்திரன்.

இதைச் சொல்லும்போது, அவனுடைய நாத் தழுதழுத்தது. அவனுடைய தொண்டை அடைத்துக் கொண்டது.

குந்தவியின் கண்களில் நீர் ததும்பப் பார்த்தது. அவள் சற்று நேரம் சும்மா இருந்துவிட்டு, ''அப்பா சம்மதிக்க மாட்டார்!'' என்றாள்.

''நான் சம்மதிக்கச் செய்கிறேன். நேற்றே அப்பாவிடம் கேட்க வேண்டுமென்றிருந்தேன். இராத்திரி அவர் வரவேயில்லை. இன்று அவரை அவசியம் கேட்கப் போகிறேன்.''

''அப்பா சம்மதித்து நீ செண்பகத் தீவுக்குப் போனாலும் என்ன பிரயோஜனம்?''

''என்ன பிரயோஜனமா? எனக்கு ஒரு மைத்துனன் கிடைப்பானல்லவா?''




"அது நடக்காத காரியம், அண்ணா! அந்தக் கர்வம் பிடித்த சோழ ராஜகுமாரன், பல்லவர் குலப் பெண்ணை மணக்கச் சம்மதிக்க மாட்டான்!" என்றாள் குந்தவி.

அப்போது மகேந்திரன் கலகலவென்று சிரித்தான். "தங்காய்! எப்போதாவது உன் உருவத்தைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டதுண்டா?" என்று கேட்டான்.

"போ, அண்ணா!" என்றாள் குந்தவி.

"போகிறேன், தங்காய், போகிறேன். செண்பகத் தீவுக்குப் போய் அந்தச் சோழ ராஜகுமாரனைக் கட்டி இழுத்துக் கொண்டு வந்து உன் முன்னால் நிறுத்தி, கன்னத்திலும் போட்டுக் கொள்ளச் சொல்லாவிட்டால் நான் மகேந்திர பல்லவ சக்கரவர்த்தியின்





பேரன் அல்ல!" என்றான் யுவராஜ மகேந்திரன்.

■ ■ ■

குந்தவியும் மகேந்திரனும் காஞ்சியை அடைந்ததும், அரண்மனையில் அவரவர்களுடைய பகுதிக்குச் சென்றார்கள். குந்தவி தன்னுடைய அந்தப்புர அறைக்குள் பிரவேசித்த போது, அங்கே சக்கரவர்த்தி வந்தால் உட்காருவதற்காகப் போட்டிருந்த ஆசனத்தில் வேற்று மனுஷன் ஒருவன் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து அப்படியே ஸ்தம்பித்துப் போய் விட்டாள்! அந்த வேற்று மனுஷன், காட்டுக் குறுக்குப் பாதை வழியாக வந்து இராஜபாட்டையில் தங்களைத் தாண்டிச் சென்ற வீரன்தான் என்பது நினைவுக்கு வர ஒரு நிமிஷம்

பிடித்தது. இதனால் அவளுடைய ஆச்சரியம் பன்மடங்கு பெருகியதோடு, கோபம் பொங்கிற்று.

''யார் ஐயா, நீர்? என்ன தைரியத்தினால் அந்தப்புரத்துக்குள் நுழைந்தீர்?'' என்றாள்.

''தேவி! பல்லவ சாம்ராஜ்யத்தின் ஒற்றர் தலைவன் நான். என் பெயர் வீரசேனன். தங்களிடம் ஒரு துப்பு விசாரிப்பதற்காக வந்தேன்!'' என்று அம் மனிதன் சொன்னதும், குந்தவியின் முகத்திலிருந்த கோபம் ஒரு நொடியில் குதூகலமாக மாறியது.

''அப்பா! இதென்ன வேடிக்கை?'' என்று கூச்சலிட்டுக் கொண்டே குந்தவி ஓடிப்போய் ஒற்றர் தலைவனுடைய தோள்களைக் கட்டிக் கொண்டு அவனுடைய பொய் மீசையைக் களைந்தெறிந்தாள். அப்போது ஒற்றர் தலைவர் இருந்த இடத்தில் நரசிம்மவர்ம சக்கரவர்த்தி காட்சியளித்தார்.

''உங்களுடைய குரலைக் கொண்டு தான் அப்பா, கண்டு பிடித்தேன். இல்லாவிட்டால் அடையாளம் தெரிந்திராது. எப்படி அப்பா, இவ்வளவு நன்றாக வேஷம் போட்டுக்கொள்கிறீர்கள்?'' என்று குந்தவி கேட்டாள்.

''குழந்தாய்! என் தந்தை மகேந்திர சக்கரவர்த்தி எனக்குச் சொல்லிக் கொடுத்த வித்தைகளில் இதுதான் மிகவும் அருமையான வித்தை!'' என்றார் சக்கரவர்த்தி. (தொடரும்)

சீவர்ச்சிக்கு நீது சிங், குளிர்ச்சிக்கு வஹீதா ரஹ்மான், இனிமைக்குக் கல்யாண்ஜி ஆனந்த்ஜி. நடிப்புக்கு அமிதாப் பச்சன். இவ்வளவும் இருக்கும்போது 'அதாலத்' ஓர் அற்புதப் படைப்பாகத்தான் இருக்கும் என்ற நம்பிக்கையோடு போகிறவர்களுக்கு ஏமாற்றமே ஏற்படும். புதுமையான கதை இல்லாததே இதற்குக் காரணம். கதாநாயகன் இரட்டை வேடங்களில் தோன்ற வேண்டும் என்ற எண்ணம் நம் படத் தயாரிப்பாளர்களிடையே மறைந்தால்தான் நல்ல வலுவான கதையும் வளமான கற்பனையும் பிறக்கும்.

பாயும் புலியோடு கட்டிப் புரண்டு அதன் கழுத்தில் கத்தியைப் பாய்ச்சும் அளவுக்கு வீரனும் தீரனுமான கிராமத்து வாலிபன் தர்மா; தன் மனைவி, தங்கை, மகனுடன் நகரத்துக்குப் பிழைப்புத் தேடிப் போகிறான். கடத்தல்காரர்களின் கண்ணியில் சிக்குகிறான். வெள்ளை உள்ளமும் வெகுளியும் வீரனுமான தர்மாவை, நாகரிக நயவஞ்சகர்கள் திட்டமிட்டுத் தங்கள் தகாத காரியங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டு ஆபத்து வந்த போது தாங்கள் நல்லவர்களாகித் தர்மாவைக் குற்றவாளியாகக் காட்டிக் கொடுத்து விடுகிறார்கள். நகர வாழ்வின் விபரீதத்தைச் சிறைச்சாலையில் இருக்கும்போதுதான் புரிந்து கொள்கிறான் தர்மா. இதற்குள் வில்லன் தர்மாவினுடைய தங்கையின் கற்பைச் சூறையாடுகிறான். அவமானத்தால் அவள் தற்கொலை செய்துகொள்கிறாள். புலியைக் கொல்லும் வீரம் படைத்திருந்தும் சாதுவாக இருந்த தர்மா இதற்குப் பிறகு புலியாகவே மாறுகிறான். தன் வாழ்வைக் குலைத்தவர்களை ஒவ்வொருவராகக் கொன்று தள்ளுகிறான். இது வரை முதல் பாகம். இரண்டாம் பாகத்தில் கிராமவாசியும் அதிகம் படிப்புமில்லாத தர்மா பெரிய கடத்தல் மன்னனாகிறான். கைதேர்ந்த கள்ளனாகி அரண்மனை வாழ்வுக்கும் சுகபோகங்களுக்குமாக மாறுகிறான். எப்படி என்று வினா எழுப்பக் கூடாது. அமிதாப் பச்சனுக்கு இரட்டை வேடம் வேண்டுமே! முதல்பாதியில் கையாளப்படாத காதல் காட்சிகளை எப்படிப் புகுத்துவது? ஆகவே தர்மாவுக்கு இரட்டை வாழ்க்கை. தர்மாவின் மகனைக் காதலிக்கும் கன்னியாக நீது சிங் வருகிறார். இதன் பிறகு வழக்கமான காதல், களியாட்டம், காரோட்டம், சண்டை எல்லாம் வருகின்றன. சட்டம் ஒன்று இருக்கிறதென்பதை நினைவு படுத்தவே போலீசும் வருகிறது. உயிரோடு வாழ முடியாத நிலைக்குத் தாழ்ந்துவிட்ட தர்மா முடிவில் இறக்கிறான்.



'ஓஹோ' என்று நினைத்துப் போகிறவர்களுக்குத் திருப்தியைத் தருவது காமிராவைக் கையாண்டுள்ள முறையும் குளுகுளு கலரும், இந்திப் படங்களுக்குக் கைகொடுத்து உதவும் இன்னிசையும் தான்.

ம்... எப்படியானால் என்ன? அதாலத் 'ஓஹோ' என்று ஓடும். ஓடத்தான் போகிறது, பாருங்களேன்!

— ஜெனிசன்

எங்கும் இதே பேச்சு!



உங்கள் எதிர்காலக் கவலை நீங்க

தமிழ்நாடு சமூகப் பாதுகாப்புத் திட்டம்

உதாரணமாக நீங்கள் மாதம் 60 ரூபாய் வீதம் 10வருஷம் செலுத்தினால் ஒவ்வொரு மாதமும் ரூ. 100 வீதம் 30 வருஷம் ஓய்வு ஊதியமாக இத்திட்டம் திரும்ப அளிக்கிறது. அது தவிர ரூ. 9500ம் மொத்தமாகக் கிடைக்கிறது. இதோ 7வகைத் திட்டங்கள் உள்ளன. உங்களுக்கு உகந்ததைத் தேர்ந்தெடுங்கள்.

திட்டம்	A	B	C	D	E	F	G
மாதச் சந்தாத் தொகை (ரூபாய்)	10	10	10	10	20	30	60
சந்தாக் கால அளவு (ஆண்டுகள்)	10	15	20	25	20	15	10
மாத ஓய்வு ஊதியம் 30 ஆண்டுகளுக்கு (ரூபாய்)	20	35	60	100	100	100	100
இறுதியில் கிடைக்கும் மொத்த ரொக்கத் தொகை (ரூபாய்)	1500	2500	4000	5500	8000	8000	9500

சந்தாத் தொகையை அரசின் சப்டிரஷரியிலோ அல்லது இத்திட்டத்தில் பங்குபெறும் பாங்கியிலோ செலுத்தலாம்.

மேற்கொண்டு விபரங்களுக்கு அணுகுங்கள்:

இயக்குநர்
சமூகப் பாதுகாப்புத் திட்டம்
தமிழ் நாடு அரசு.

4வது மாடி, குறளகம்,
சென்னை 600 001,
போன்: 20884

TSSS 534

கடிதத்தைப் பிரிக்கின்றாள். அண்ணா தான் எழுதியிருந்தான்.

பம்பாய்,
30-1-77

சுமதிக்கு,

சித்ராவை மணந்துகொள்ள என் விருப்பத்தைக் கேட்டு அம்மாவும் மாமாவும் தொடர்ந்து கடிதங்கள் எழுதிக்கொண்டே இருக்கிறார்கள். சிறு வயதிலிருந்தே சித்ராவை எனக்குத் தெரியும். எனினும் அவள் என் வருங்கால மனைவி மட்டுமல்ல. உன் எதிர்கால அண்ணியும் கூட. ஒரு பெண்ணைப் பற்றி மற்றொரு பெண்தான் சரியாகக் கணிக்க முடியும் என்பது என் எண்ணம். ஆகவே சித்ரா நம் வீட்டு மருமகளாக வரத் தகுதி படைத்தவளா என்பதை முடிவு செய்யும் பொறுப்பை உன்னிடம் விடுகிறேன். அடுத்த வாரம் அவளைச் சென்னைக்கு அனுப்பச் சொல்லிக் கடிதம் எழுதியிருக்கிறேன். எனவே, புதன் கிழமை கன்னியாகுமரி எக்ஸ்பிரஸில் அவளை எதிர்பார்க்கவும். சென்னையில் அவள் ஒரு வார காலம் தங்கக் கூடும். அப்பொழுது அவளது குண நலன்களை ஆராய்ந்து எழுது. உனக்கு இம்மாதம் செலவுக்காக ரூபாய் முந்நூறுக்கு 'டிராப்ட்' அனுப்பியுள்ளேன். அண்ணா.

கடிதத்தை மீண்டும் ஆழ்ந்து படிக்கிறேன். இது என்ன சோதனை? சித்ரா சொந்த மாமாவின் பெண் மட்டுமல்ல. மாமாவின் சொத்துக்களுக்கு ஒரே வாரிசு. ஆடம்பரமற்ற தெய்விக அழகு படைத்தவள். அவளைச் சோதித்துப் பார்க்க எனக்குத் தகுதியும் திறமையும் ஏது?

அண்ணாவின் வேண்டுகோளைத் தட்டிக் கழிக்கவும் முடியாது. அவன் மாதா மாதம் அனுப்பும் பணத்தினால்தான் நான் கல்லூரியையே எட்டிப் பார்த்திருக்கிறேன். வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் அப்பாவும் அம்மாவும் பிறந்த ஊரிலேயே தங்கி விட்டார்கள். வேலையின் காரணமாக பம்பாயிலிருக்கும் அண்ணாவுக்கு வேறு யார் இருக்கிறார்கள்?

சித்ரா பள்ளி இறுதி வகுப்போடு படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டவள். வேலைக்குச் சென்று அவள் அண்ணாவுக்குப் பொருளாதார ரீதியில் உதவப் போவதில்லை. அவள் இல்லற வாழ்வின் எல்லை வீட்டுக்குள்ளேயே ஒளிவிட வேண்டிய ஒன்று.

ஒரு குடும்பப் பெண்ணுக்குத் தேவையான இயல்புகள் சித்ராவிடம் இருந்தால் சரி!

சிந்தித்தவாறே ஹாஸ்டலை நோக்கிச் செல்கிறேன்....

• • •

புதன் கிழமை. எழும்பூர் ரயில் நிலையம். நான் பிளாட்பாரத்தை நெருங்குவதற்கு முன்னமே கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ் தனது நீண்ட பயணத்தை முடித்த களைப்பில் நின்றது.

பிளாட்பாரத்தின் இருமருங்கும் பார்க்கிறேன்.

இரண்டாம் வகுப்புப் பெண்கள் பெட்டியிலிருந்து ஒரு தோல் பை தோளில் தொட்டிலாட மிரளும் விழிகளுடன் இறங்குகிறாள் சித்ரா.

என்னைக் கண்டதும் இதழ்க்கடை ஓரத்தில் ஒரு குறுநகை. அது எனக்கு மிகவும் செயற்கையாக ஏன் தோன்றுகிறது?

''என்ன சித்ரா! ஒரு பெருநிலக் கிழாரின் ஒரே மகள் நீ... முதல் வகுப்பில் வராமல் இரண்டாம் வகுப்பில் வருகிறாய்?''

எடுத்த எடுப்பிலேயே என் சோதனையைத் தொடங்குகிறேன். 'எதற்கு வீண் செலவு' என அவள் பதில் கூற வேண்டும் என விரும்புகிறேன், அவளின் சிக்கன மனப்பான்மையைத் தெரிந்து கொள்வதற்காக.

ஆனால் அவளோ...

''முதல் வகுப்புப் பெட்டியை இழுக்கும் எஞ்சின்தானே இரண்டாம் வகுப்புப் பெட்டியையும் இழுக்கிறது!''

மீன் வலையில் நீர்மூழ்கிக் கப்பல்

மு. கணேசன்

என்னை மடக்கி விட்டாற் போல் அவள் முகத்தில் இறுமாப்பு ரேகைகள்.

ஸ்டேஷனை விட்டு வெளியே வருகிறோம்.

''சித்ரா... ஹாஸ்டலுக்கு பஸ்ஸில் போகலாமா..? இல்லே... டாக்ஸியில் போகலாமா?'' நான் கேட்கிறேன்.

இப்பொழுதாவது பஸ்ஸில் போகலாம் என்று அவள் கூறுவாள் என எதிர்பார்க்கிறேன். ஆனால் அவள்...

''உன் விருப்பம்...''

உதடுகளைக் கோணலாக்கிக் கைகளை விரித்து அலட்சியமாகக் கூறுகிறாள்.

அவள் 'உன் இஷ்டம்' எனக் கூறிய பின்பு பஸ்ஸில் போவதற்கு என் தன்மானம் இடம் கொடுக்கவில்லை. வருங்கால அண்ணியாயிற்றே!

எனவே, டாக்ஸிக்கு ஐந்து ரூபாய் அழுதது நான்தான்.

எனது அறை.

சித்ராவை அழைத்து வருவதற்கு இரயில் நிலையத்துக்குச் செல்லும் முன்பு புடவைகளையும் புத்தகங்களையும் அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பரப்பி ஓர் அலங்கோலச் சூழ்நிலையை உருவாக்கி விட்டுச் சென்றிருந்தேன்.

அந்த அலங்கோல நிலையைக் கண்டு முகம் சுளித்து, 'என்ன சுமதி... நீ ஒருத்திதானே இந்த அறையில் இருக்கிறாய்? சுத்தமாக வைத்துக் கொள்ளக் கூடாது?' என்று அவள் கடிந்து கொள்வாள், கடிந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். ஆனால் அவள் அதைக் கண்டுகொண்டதாகவே யில்லை. அறைக்குள் நுழைந்ததுமே கொண்டுவந்த தோல் பையை மூலையில் வீசி எறிந்து விட்டு 'ஜம்' மென்று படுக்கையில் படுத்துக் கொண்டாள். பயணக் களைப்பா? இல்லை, பணக்காரத் திமிரா?

நான் சிந்திக்கிறேன்.

சித்ராவிடம் சிக்கன மனப்பான்மையும் இல்லை. சுற்றுப்புறச் சூழ்நிலையைச் சுத்தமாக—ஒழுங்காக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமும் இல்லை.

மணி ஒன்பதரை.

''என்ன சித்ரா... குளிக்கலையா?... சீக்கிரம் குளிச்சிட்டு வா... டிபன் சாப்பிடப் போகலாம்.''

சோம்பலை முறித்து விட்டுக் குளியலறைக்குள் நுழைகிறாள். ஷவரின் ஓசை மெதுவாகக் கேட்கிறது. எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது.

கணவனுக்குத் தெரியாமல் பணம் சேர்ப்பது என்பது மனைவிகளுக்கு, குறிப்பாகக் கிராமப்புறப் பெண்களுக்கு ஓர் இன்பமான பொழுதுபோக்கு. ஒரு பத்து ரூபாய் கவனிப்பாரற்றுக் கிடந்தால் சித்ரா என்ன செய்கிறாள், பார்க்கலாமே...

விபரீதமான எண்ணம்தான். எனினும், அதையும் செயல்படுத்திப் பார்க்க ஆவல் அதிகரிக்கிறது.

முழுப் பத்து ரூபாய் நோட்டு ஒன்றை நான்காக மடித்து, 'டிரஸ்ஸிங்' டேபிளின் காலடியில் போடுகிறேன். சற்று நேரத்தில் அவள் குளித்து விட்டுத் திரும்புகிறாள்.

பிணமாகக் கனக்கும் டர்க்கி டவலைக் கொடியில் உலர்த்துவது தானே? தண்ணீரை நன்றாகக் கூடப் பிழியாமல் நாற்காலியில் தொங்க விடுகிறாள். டிரஸ்ஸிங் டேபிளின் முன்னே அமர்ந்து கொள்கிறாள்.

நான் குளியலறைக்குச் செல்கிறேன். சற்று அதிக நேரம் குளிக்கிறேன், அந்தப் பத்து ரூபாயை எடுப்பதா, வேண்டாமா என்ற அவள் மனப் போராட்டத்துக்குக் கொஞ்சம் அவகாசம் கொடுக்க வேண்டுமே?







''காப்பிக் கொட்டை தங்கச் செயினைக் கழற்றித் தா! வித்துக் காப்பிக் கொட்டை வாங்கிட்டு வர்றேன்!''

குளித்து விட்டுத் திரும்பியதும் பார்க்கிறேன். என்ன விந்தை! 'டிரஸ்ஸிங் டேபி'ளின் காலடியில் கிடத்திய பத்து ரூபாயைக் காணவில்லை....

'சித்ரா... உனக்கு இந்தப் பழக்கமும் உண்டா?'... எனக்கு நானே கேட்டுக்கொள்கிறேன்.

● ● ●

சித்ராவுக்குச் சென்னையைச் சுற்றிக் காட்டுவதிலேயே ஆறு நாட்கள் கழிந்து விட்டன. எங்கு சென்றாலும் டாக்சிதான். ஸ்வீட், காரம், காப்பி...

அண்ணா ஒரு மாதச் செலவுக்காக அனுப்பியதில் பாதி ஒரே வாரத்தில் காலி. 'ஹாஸ்டல் மெஸ் பில்' கூட இன்னும் கட்டவில்லை.

நாளை அவள் மீண்டும் ஊருக்குக் கிளம்புகிறாள். குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு அவளிடம் சிறப்பாக எந்தக் குணமும் இல்லை.

அண்ணா மாதம் இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் பெறும் ஒரு பெரிய அதிகாரி. அவனைத் தேடி எத்தனையோ அலுவலக நண்பர்கள் வரலாம். முன் பின் தெரியாத அவர்களிடம் நாகரிகமாகப் பழகும் சாதுர்யம் சித்ராவுக்கு இருக்குமா? சந்தேகம்தான். அதையும் உறுதிப்படுத்தி விட்டால்...?

அன்று 'உறவினர்கள் நாள்'. ஹாஸ்டல் மாணவிகளை அவர்கள் உறவினர்கள் வந்து காணலாம்.

முதலாண்டு முதுகலை மாணவி தீபாவின் அண்ணா ஒவ்வொரு வாரமும் அவளைப் பார்க்க வருவது வழக்கம். கலகலப்பாகக் களங்கமின்றி எல்லோருடனும் உரையாடும் அவர் ஒரு 'ரியல் ஜெண்டில்மேன்'. அவரை இவளுக்கு அறிமுகம் செய்வதுபோல் சோதனையை நடத்தினால் என்ன?

சித்ராவை அழைத்துக் கொண்டு வரவேற்பு அறைக்கு வருகிறேன்.

தீபாவும் அவள் அண்ணாவும் அமர்ந்திருக்கிறார்கள்.

''குட் ஈவினிங் மிஸ்டர் சுரேஷ்... மீட் மிஸ் சித்ரா... என் வருங்கால அண்ணி...''

சித்ராவை நோக்கி அவர் கரங்களைக் குவிக்கிறார். ஆனால் சித்ரா....

முகத்தை நெருப்பாக்கிக் கொள்கிறாள்.... கண்ணகி பரம்பரை!

மறு நாள்.

சித்ரா ஊருக்குக் கிளம்பி விட்டாள்.

நிம்மதி... எனக்கும் என் பர்ஸுக்கும்.

''மொத்தத்தில் சித்ரா உன் வாழ்க்கைத் துணைவியாக — என் அண்ணியாக — சொந்த மாமாவின் மகள் என்ற தகுதியைத் தவிர வேறு எந்தத் தகுதியும் இல்லை'' என அண்ணாவுக்குக் கடிதம் எழுதலாமா என எண்ணுகிறேன்.

சே...சே... ஒரு பெண்ணே மற்றொரு பெண்ணின் வாழ்வுக்குக் குறுக்கே நிற்பதா? திருமணத்துக்குப் பின்பு ஒருவேளை அவள் மாறக் கூடுமே? அப்படியே நான் எழுதினாலும் மாமாவின் பணத்தின் மீது கவனமாயிருக்கும் அம்மாவும், சித்ராவின் அழகில் உருகி நிற்கும் அண்ணாவும் என் முடிவை ஏற்றுக் கொள்வார்கள் என்பது என்ன நிச்சயம்?

நீண்ட சிந்தனைக்குப் பிறகு, 'சித்ராவை எவ்விதத் தயக்கமும் இன்றி நீ மனைவியாக ஏற்றுக் கொள்ளலாம்' என்று அண்ணாவுக்குக் கடிதம் எழுதுகிறேன்.

● ● ●

பத்து நாட்களுக்குப் பின்பு...

அண்ணா கடிதம் எழுதியிருந்தான். ஆவலுடன் பிரிக்கிறேன்.

சுமதிக்கு,

சித்ராவின் நீண்ட கடிதம் நேற்றுத்தான் எனக்குக் கிடைத்தது. சென்னை வாழ்க்கை உன்னை இவ்வாறு மாற்றும் என்று நான் கனவில் கூட எண்ணவில்லை. எங்கு சென்றாலும் டாக்ஸியில் செல்லும் அளவுக்குப் பணம் கொட்டியா கிடக்கிறது? பர்ஸிலிருந்து கீழே விழுந்த பத்து ரூபாயைக் கவனிக்கக்கூட முடியாத அளவுக்குப் பண விஷயத்தில் நீ அலட்சியமாக இருப்பதாக அறிகிறேன். அது போகட்டும்... உன்னுடைய அறையைத் தூய்மையாக வைத்துக் கொள்ளத் தெரியாத நீ நாளை ஒருவனுக்கு மனைவியாகி ஒரு வீட்டை எவ்வாறு நிர்வகிக்கப் போகிறாய்?... உனக்குப் பணத்தின் அருமையைப் புரிய வைப்பதற்காக இனி மாதா மாதம் ரூபாய் நூறு குறைத்து அனுப்பப் போகிறேன்.

சித்ரா எனக்கு எழுதிய முதல் கடிதமே நம் குடும்ப நலத்தில் அவள் அக்கறையைக் காட்டுவதால் அவளை என் மனைவியாக ஏற்றுக் கொள்ள முடிவு செய்துவிட்டேன்.

அண்ணா

பி.கு: தோழியுடன் பழகுவதால் தோழியின் அண்ணாவுடனும் பழக வேண்டும் என்று விதி இருக்கிறதா, என்ன? யார் அந்த சுரேஷ்? அவனைப் பற்றிய உன் உண்மையான பதிலை எதிர்பார்க்கிறேன்.

கடிதத்தை மீண்டும் படிக்கிறேன். அதை முழுதும் படிக்கும் முன்பு இதயத்தில் ஏற்பட்ட படபடப்பு கரங்களுக்குத் தாவ, கடிதம் தானே நழுவித் தரையில் விழுகிறது.

சாட்சி நம்பர் 3



விமல் மித்ர

தமிழாக்கம்: ரா. வீழிநாதன்

1. யார் அந்தப் பெண்மணி?

அவசரத்தில் எழுதிய இந்தக் கதை பத்திரிகையில் வெளியான பொழுது எனக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. ஆமாம், என் எந்தக் கதைதான் எனக்குப் பிடித்த மாதிரி வந்திருக்கிறது? அச்சான பின், ஆர அமரப் படித்துப் பார்த்த பொழுது என் கதை எனக்கே பிடிக்கவில்லை. இன்னும் சிறிது மனத்தையும் மூளையையும் செலவிட்டு முனைந்து உழைத்திருந்தால் கதை வெகு நன்றாக அமைந்திருக்கும் என்றே தோன்றியது.

ஆனால் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், மனிதனிடம் அவ்வளவுக்கு நேரம், பொழுது எங்கே இருக்கிறது? இப்பொழுதெல்லாம் முன்னேறுவதே மனிதனது கடமையாகி விட்டது. எல்லாவற்றையும் பின் தள்ளி விட்டு, உதைத்து உதறிப் புண்படுத்தி விட்டு எப்படியாவது, தான் மட்டும் முன்னேற வேண்டும். இதுவே மனிதனது தர்மமும் லட்சியமும் ஆகி விட்டது. நிற்க நேரம் இல்லை; பின் திரும்பிப் பார்க்கப் பொழுது இல்லை. இரண்டு கணம் நின்று நினைத்துப் பார்க்கவோ, யோசிக்கவோ எவனுக்குப் பொழுது இருக்கிறது? அப்படி நின்று விட்டால், அந்த இரண்டு கண நேரத்துக்குள் உங்களுக்குப் பின்னால் வருபவன் உங்களைப் பின் தள்ளி விட்டு முன்னேறி விட மாட்டானா?

எனவேதான், எனக்காகவே நான் சிந்தித்துப் பார்க்கிறேன். பிறரோடு ஓட்டப் பந்தயத்தில் நானும் முழு மூச்சோடு இறங்கி விட்டேனா, என்ன?

ஆனால் இலக்கியம் என்பது காலத்தின் விளைவு. பயிர் நிலத்துக்குக் கூடச் சிறிது ஓய்வு தேவைப்படுகிறது. நிலத்தை ஆறப் போட்டால்தான் அமோக விளைச்சல் தருகிறது. இதை நான் அறியாமல் இல்லை. இருந்தும் ஏன் இவ்வளவு எழுதிக் குவிக்கிறேன், மனத்துக்கோ மூளைக்கோ சிறிதுகூட ஓய்வு கொடுக்காமல்?

ஒரு வேளை இது ஓயாது ஓடும் இந்த யுகத்தின் சாபக் கேடா? ஆம், அப்படித்தான் இருக்க வேண்டும். நானும் அந்தச் சாபக் கேட்டுக்கு ஆளானவன்தான். சரயுவைப் பற்றி எழுதியுள்ள இந்தக் கதையை யோசித்துச் சிந்தித்து அவகாசம் எடுத்துக் கொண்டு எழுதியிருந்தால், இன்னும் அருமையாக அமைந்திருக்கக் கூடும்.

வேடிக்கை என்னவெனில், சரயுவின் கதையை இவ்வளவு சீக்கிரம் எழுத வேண்டியிருக்கும் என்று நான் நினைத்தே பார்க்கவில்லை. இன்றைய உலகம் ஓடும் ஓட்டத்தில், பத்திரிகை ஆசிரியர்களும், வெளியீட்டாளர்களும் கெடு வைத்துக் கேட்கிறார்கள். அவர்களுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்ற நாமும் விரைய வேண்டியிருக்கிறது. உலக வாழ்க்கையிலும் சரி, உண்மை வாழ்க்கையிலும் சரி, உள்ளும் சரி, புறமும் சரி, நாலா பக்கங்களிலிருந்தும் கெடு வைத்துக் கேட்பது என்பது ஒரு கெடுபிடியாகத் தொடருகிறது; வாழ்க்கையைப் பெரும் சுமையும் ஆக்கிவிடுகிறது இந்த விரைவும் கெடுவும். பயனைத் தழுவியவையாக இருக்கின்றனவே ஒழிய அன்பை அடிப்படையாகக் கொள்வதில்லை.

ஆனால் இலக்கியம் என்பது பயனைப் பொறுத்ததல்லவே! அன்பின் அறுவடை அல்லவா இலக்கியம்? அன்பு பயனைப் பொருட்படுத்துவதில்லையே! அது ஆழ வேர் விடுவதற்குக் காலமும் பொழுதும் அல்லவா வேண்டும்? படைப்புக்கு ஓர் அவகாசம் தேவை. காலத்தால் அன்றிக் கனியாதது படைப்பு. ஆனால் இலக்கியப் படைப்புக்கு யாரும் அவகாசம் தர முன் வருவதில்லை. உருவாவதற்கு முன்னாலே இந்தக் கையில் போடு என்கிறார்கள். ஆசிரியரோ, வெளியீட்டாளரோ, ஏன், எழுதும் ஆசிரியரேகூட இதற்கு விதிவிலக்கு இல்லை. எல்லோருக்குமே அவசரம். சட்டுப்புட்டென்று படைத்து விட வேண்டும், வெளியிட வேண்டும் என்று!

அதனால் சரயுவையும் நிசிகாந்தனையும்பற்றி எழுதப்பட்டுள்ள இந்தக் கதை எத்தனை ஆழமா வேரோட வேண்டுமோ, அத்தனை ஓடவில்லை என்று தோன்றுகிறது. சரயுவைப் பற்றி இன்று எழுதுகிறேனே, இந்த நிகழ்ச்சி ரொம்ப

பட் பழையது. உண்மையாகவே நேரம் கிடைக்கும் பொழுது நல்லபடி எழுத வேண்டும் என்று ஊறப் போட்டு வைத்திருந்தேன்.

ஆனால் இப்பொழுதெல்லாம் நேரம் என்னும் சொற்களையே நான் மறந்து விட்டேன். தேவை, தேவை! தேவை ஒன்றுதான் இன்றைய நினைப்பு. அதுவே எல்லாவற்றிற்கும் மேலோங்கி நிற்கிறது. வாழ்க்கைக்கே தேவையாகி விட்டது இந்தத் தேவை!

சரி, சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுது தேவை பற்றியும் ஒருநாள் எழுதுவேன்; இல்லை, இல்லை; தேவைப்படும் பொழுது! இன்று நான் சரயுவையும் நிசிகாந்தனையும் பற்றித்தான் கூறப் போகிறேன். அதுவும் எதனால்? திடீரென்று அன்று தெருவில் நிசிகாந்தனைப் பார்த்து விட்டதனால்!

என்னால் முதலில் அவனை அடையாளமே கண்டு கொள்ள முடியவில்லை. அவ்வளவுக்கு மாறிப் போயிருந்தான் நிசிகாந்தன்!

''ஏதாவது சில்லறை கொடுங்கள், சார்!''

''சில்லறையா?''

மகாநகரம் என்று புகழ் பெற்ற கல்கத்தாவிலே இப்படி இரந்து பிழைப்போருக்குக் குறைவில்லை.

''கொடுங்க, சார்! ரொம்பக் கஷ்டப்படறேன், சார்! வேலை வெட்டி இல்லை. குழந்தைகள் குலைப்பட்டினி. சிறு தொகையானாலும், உங்களால் இயன்றதைக் கொடுங்க.''

நான் வியப்போடு அவனையே பார்த்துக் கொண்டிருந்தேன். விளங்குவது போலவும் விளங்காதது போலவும் ஒரு சந்தேகம். கடைசியில் ஐயம் கலையும் நோக்கத்துடன், ''நீ நிசிகாந்தன் தானே?'' என்று கேட்டேன்.

நிசிகாந்தனும் என்னை அடையாளம் கண்டு கொண்டு விட்டான் போலும்! நழுவ முயன்றான். நான் அவன் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, '' நீ நிசிகாந்தன் தானே?'' என்று மறுபடியும் கேட்டேன்.

நிசிகாந்தன் முதலில் ஒப்புக் கொள்ளத் தயாராயில்லை. நான் அவனுக்குப் பேச வாய்ப்பு அளிக்காமல், ''இதோ பார்! பொய் சொல்லித் தப்பிக்கப் பார்க்காதே. இன்னும் உன் பழக்கம் திருந்தவில்லையே! இப்போ எங்கே இருக்கிறாய், சொல்லு!'' என்றேன்.

நிசிகாந்தனால் தாங்க முடியவில்லை. அழ ஆரம்பித்து விட்டான், விசித்து, விசித்து.

''போதும், நிறுத்து அழுகையை!''

அவனை அழைத்துக் கொண்டு சாலை ஓரத்தில் இருந்த சிற்றுண்டி சாலைக்குள் நுழைந்தேன். வயிற்றுக்கு ஏதாவது போட்டால், அவன் தன் நினைவுக்குத் தானாகத் திரும்புவான் என்று தோன்றியது. கூடவே, அந்தச் சம்பவமும் எனக்கு நினைவு வந்தது. அந்தக் கொலை வழக்கு! நிசிகாந்தனை ஓர் இருக்கையில் அமர்த்தி விட்டு, சர்வரை அழைத்து ஆர்டர் கொடுத்தேன்.

அப்புறம்?

அவனைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். என் சிந்தனையும் ஓடிக் கொண்டே இருந்தது.

உண்மையில் இவன் அதே நிசிகாந்தன்தானா? அந்தச் சம்பவம் மட்டும் நிகழாமல் இருந்திருந்தால், இவனை நான் தெரிந்து கொள்ளப் போவது ஏது? அந்த வழக்கில் நான் மூன்றாவது சாட்சி.

வழக்கு விந்தையானது: சிக்கலானது. மனித வாழ்க்கையே சிக்கலானது தானே? மனிதனது வாழ்க்கையில் சிக்கல் இருந்தாலும் இல்லாவிட்டாலும், மனிதனால் நிறுவப்பட்ட நீதிமன்றம் இருக்கிறதே, இது அவனுடைய சிக்கலான வாழ்க்கையின் முடிச்சுகளை அவிழ்ப்பது போக, மேலும் முடிச்சுகளைப் போட்டுச் சிக்கலாக்கி விடுகிறது. நான் இந்த வழக்கில் மூன்றாவது சாட்சி எப்படி ஆனேன்? இதற்குமே ஒரு முக்கிய காரணம் உண்டு.

காரணம் என்ன? அந்த வழக்கைப் பற்றி அடியோடு முடி நான் அறிந்திருந்தது தான்!

இப்பொழுது கூடப் பசுமையாக நினைவிருக்கிறது. அரசாங்க வக்கீல் என்னைக் கேட்டார்: ''உங்களுக்கு இந்த ஆளைத் தெரியுமா?''

''தெரியும்!'' என்றேன் நான்.



''இவளை நீங்கள் முன்னால் பார்த்தது உண்டா?''

''உண்டு.''

''உங்கள் கருத்துப்படி இவள் குற்றவாளி என்று நினைக்கிறீர்களா?''

''எனக்குத் தெரிந்த வரையில் இவள் குற்றவாளிதான்!''

''ஏன்? எப்படி?''

அரசாங்க வக்கீல் குறுக்குக் கேள்விகளும் நெடுக்குக் கேள்விகளுமாகக் கேட்டு என்னைப் புரட்டி எடுத்துவிட்டார்.

அவருக்கு என்ன விடை அளித்தேன்? நேயர்களுக்கு நான் இதைக் கூற வேண்டுமானால், முழு வரலாற்றையும் நான் தொடக்கத்திலிருந்து கூறியாக வேண்டும்; நான் கூறுவதை நேயர்களும் பொறுமையாகக் கேட்டாக வேண்டும்; அதுவும் நான் கூறுகிறபடி கேட்டாக வேண்டும்.

ஒவ்வொரு கலைப் படைப்புக்கும் பகைப் புலனில் ஒரு சமூக நீதி போதனை உண்டு என்பது என் உறுதியான கருத்து. அதற்காக மனிதனுக்கு நீதி போதனை செய்வதுதான் இலக்கியத்தின் கடமை என்றும் இதற்குப் பொருள் கொண்டுவிடக் கூடாது. ஏனெனில் அப்படி ஒரு பொருள் கொண்டு விட்டால், இலக்கியம் ஓர் அற நூல் ஆகிவிடும்; அல்லது பாடப் புத்தகம் ஆகிவிடும். இலக்கியத்துக்கு அதிதேவதையான கலைமகள் இத்தகைய அறத்தையும் ஏற்பதில்லை; போதனையையும்



பொருட்படுத்துவதில்லை. அவன் ஒன்றே ஒன்றைத் தான் ஏற்கிறான். அதுதான் சுவை. சுவை இருந்து விட்டால் அவனுக்குப் பரம சந்தோஷம்.

இந்தச் சுவைக்கு என்ன பொருள்? இதற்கு விளக்கவுரை உண்டா? — எந்த நூலில் தேடினாலும் நமக்கு விளக்கம் கிடைக்காது. சுவையைப் பாடப் பொருளாக எடுத்துக் கொண்டு படியேறிப் படையெடுத்துப் பட்டம் பெற்று விடலாம் என்று நினைத்தால், ஏமாற்றமே மிஞ்சும். ஏனெனில் உலகத்தில் எந்த மூலை முடுக்கில் தேடினாலும், அத்தகையதொரு பல்கலைக் கழகம் கிடையாது; கஜகர்ணம் போட்டாலும் ஏற்படுத்த முடியாது. சுவையின் இனிமையைப் பருகிப் பழகியவர்கள் அதன் உண்மைச் சுவையை உணர்வார்களே ஒழியத் தம் சொற்பொழிவால் புரிய வைக்கும் ஆற்றலைப் பெற்றாரில்லை. நூலெழுதி விளங்க வைக்கும் திறனையும் கற்றாரில்லை. மருந்தைப் போலச் சுவையை விழுதாக அரைத்துக் குழைத்துக் கொடுத்து விடலாம் என்றாலோ அதுவும் முடியாத காரியம்.' இந்தச் சுவைக்கு நாடு, இனம், யுகம், காலம் என்ற வேறுபாடே கிடையாது. அது அடி — முடி அற்றது. பிரித்துப் பகுத்து உணர முடியாதது. குறைவற்றது; நிறைவானது. மண்ணுக்கும் விண்ணுக்கும் அப்பாற்பட்டது. அறிவுக்கும் மேலான அநுபவ அறிவு. எனவே தான் இறையும் கலையும் இணைபிரியாத பொருளாக, பரம்பொருளாகப் போற்றப் படுகின்றன; புகழப்படுகின்றன.

இது மண்ணில் ஒட்டாதது என்றாலும் மண்ணை ஒட்டியே வேர் விட்டுக் கிளைக்கிறது. மனித மனமே இதன் விளைநிலம். மனித மனத்தின் ஆழத்திலும் இதன் வேர் ஆணி வேர் — சல்லிவேராக ஓடி வலுப்பெற்று இருக்கிறது. ரசத்தின் பெருமையை நான் இத்தனை தூரம் எடுத்துக் கூறுவதற்கும் ஒரு காரணம் இருக்கிறது. காரண - காரியம் இல்லாதது அல்லவே இந்த உலகம்?

நான் காரணத்தை விளக்கி விட்டால், கலை பற்றிய என் இத்தனை பிதற்றலுக்கும் காரணம் என்ன என்பதை நீங்களே விளங்கிக் கொண்டு விடுவீர்கள்.

பல காலத்துக்கு முன்னால், அதாவது பல ஆண்டுகளுக்கு முன்னால், என் பிழைப்பு ஊர் சுற்றிப் பிழைப்பு. ஓரளவு இந்தியா முழுவதையுமே ரெயில் பயணம் மூலம் பார்த்திருக்கிறேன். அப்படி என்ன பிழைப்பு என் பிழைப்பு என்று தானே கேட்கிறீர்கள்? சுற்றி வளைத்துச் சொல்லாமல் நேரடியாகவே பதில் சொல்லி விடுகிறேன். எனக்குப் போலீஸில் வேலை.

நான் போலீஸில் பணியாற்றி வந்தாலும், அதை வெளியார் தெரிந்து கொள்ளுவது சிரமம். போலீஸில் பல துறைகள் உண்டு என்பது எல்லோருக்குமே தெரியும். சாதாரண வெட்டித் தொப்பியிலிருந்து, நிலப் படை, நீர்ப்படை, ரெயில் படை என்று எவ்வளவோ உண்டு.

ஆனால் இவற்றைத் தவிரவும் இன்னொரு பிரிவு உண்டு. அப்பிரிவில் பணியாற்றுபவர்களைப் பார்த்த மாத்திரத்தில் போலீஸைச் சேர்ந்தவர்கள் என்று இனம் கண்டு கொள்வது கடினமான காரியம். ஏனெனில் அவர்களும் நம்மைப் போல ரெயிலில், கப்பலில், தெருக்களில் சாதாரண உடை அணிந்து மனிதர்களோடு மனிதர்களாகச் சுற்றுவார்கள். அவசியம் ஏற்படும் பொழுது கனகச்சிதமாகச் சிறப்புப் பணி புரிவார்கள்.

''சாட்சி நம்பர் 3 வெளியானபொழுது எனக்கு இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் வந்த கடிதங்கள் இரண்டாயிரத்துக்குக் குறைவில்லை. அக்கடிதங்களுக்குத் தனித் தனியே பதில் எழுத முடியாமற் போனதால் பல நேயர்களின் அன்புக் கோபத்துக்கு ஆளாகியிருக்கிறேன்.



''இந்தச் சமயத்தில் உங்களுக்கு ஓர் இரகசியம் சொல்லி வைக்கிறேன். புலனாய்வுத் துறையில் உத்தியோகம் பார்த்த அநுபவத்தோடு பாரதத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று குற்றவாளிகளைப் பிடித்துத் தண்டனை வாங்கிக் கொடுத்ததன் பலனாக எனக்கு ராஷ்டிரபதிப் பரிசும் சான்றிதழும் கிடைத்துள்ளன.

''வாழ்க்கையை அணுகிப் பார்த்ததன் பலனே என்னை எழுத்துலகில் தள்ளியது.

''சாட்சி நம்பர் 3-ல் வரும் கதாநாயகி சரயு உண்மைப் பாத்திரம் இல்லை. அதே நேரத்தில் வெறும் கற்பனைப் பாத்திரமும் இல்லை. என் நவீனங்களின் வெற்றி-தோல்விக்கு இதுவே காரணமாயிருக்குமோ?''

இப்படிக் கேட்பவர் வங்காள இலக்கிய உலகிலே பெரும் புகழ் படைத்த விமல் மித்ரா. அனைத்துலகத் தமிழ் மகாநாட்டிலே தமது இலக்கியப் பணிக்காகக் கௌரவிக்கப்பட்டார்.

இவர் நமது 'கல்கி' நேயர்களுக்கும் புதியவர் அல்ல. 'இதுவும் கண்டேன்' என்ற இவரது சிறந்த கதை 'கல்கி'யில் வெளியாகித் தமிழ் மக்களை மகிழ்வித்துள்ளது.

சாட்சி நம்பர் 3 ஆக ஆசிரியரே வந்து எப்படிக் கதை கூறுகிறார்? படித்துப் பார்த்த பின் நேயர்களே கூறுவீர்கள்!



பிரபல ஆங்கில நகைச்சுவை நடிகர் 'பாப் ஹோப்' ஜோக்குகளை அவருக்கு அனுப்பி வைக்கும் எழுத்தாளர்களுக்காக மட்டும் வருஷத்துக்கு 50 லட்சம் ரூபாய் செலவழிக்கிறார்.

''டெக்கான் ஹெரால்ட்'' -ராகமாலிகா

நானும் அத்தகைய போலீசில் தான் உத்தியோகம் பார்த்து வந்தேன்.

இன்று போலவே அன்று திடீரென்று ஒரு பெண்மணி என்னை அணுகி, ''எனக்கு ஓர் உதவி செய்வீர்களா?'' என்று கேட்டாள்.

நான் சற்றுப் பிரமித்தேன். அந்தப் பெண்மணி எனக்கு முன்பின் அறிமுகம் இல்லாதவள். இளம் வயதினள். பார்ப்பதற்கும் நன்றாயிருந்தாள். **மோகாமா காட்** ரெயில் நிலையத்தின் பிளாட்பாரத்தில் பலரையும் போலவே நானும் ரெயிலுக்காகக் காத்திருந்தேன். இலேசாக இருள் ஓடிய நேரம். ஆங்காங்கே இருட்டுக் குவிந்திருந்தது. கல்கத்தா போகிற வண்டி வருகிற நேரம். நான் கல்கத்தாவுக்குத்தான் போய்க் கொண்டிருந்தேன்.

நான் அப் பெண்மணியை ஏறிட்டு நோக்கினேன். என்னதான் போலீஸ் துறையைச் சேர்ந்தவனாயிருந்தாலும், மனிதனுகப் பிறந்தவனிடத்தில் ஈவு இரக்கம் சிறிது ஒட்டிக் கொண்டுதானே இருக்கிறது? ''என்ன உதவி வேண்டும், சொல்லுங்கள்!'' என்றேன்.

அந்தப் பெண்மணி அடக்கமும் மரியாதையும் குரலில் தொனிக்க, ''நான் தேநீர் குடித்து விட்டு வருகிறேன். இதோ போனதும் வந்ததுமாகத் திரும்பி விடுவேன். கொஞ்சம் என் சூட் கேஸை உங்களிடம் வைத்துக் கொள்ளுகிறீர்களா?'' என்று கேட்டாள்.

சூட்கேஸைப் பார்த்துக் கொள்ள என்ன தடை இருக்க முடியும்? ''வைத்து விட்டுப் போங்கள். அதிக நேரம் ஆக்கி விடாதீர்கள்!'' என்றேன்.

''துளிக்கூட நேரம் ஆக்க மாட்டேன். தேநீர் குடித்து விட்டு நொடியிலே திரும்பி விடுவேன்!'' என்றாள் அவள்.

நான் பேசாது சாமான்களைச் சுற்றி வட்டமடித்தவாறே உலாத்திக் கொண்டிருந்தேன். உள்ளத்திலே மட்டும் ஒரு படபடப்பு; பரபரப்பு! ரெயிலை எதிர்நோக்கி நிற்பதனால் மட்டுமா? அல்லது வேறு காரணமும் உண்டா?

என்னிடம் ரிசர்வேஷன் டிக்கட் இருந்தது. வண்டி வந்தவுடன் ஜம்மென்று ஏறி நிம்மதியாகப் படுத்து விடலாம் என்ற நம்பிக்கையும் இருந்தது. அப்படியிருக்கும் பொழுது நெஞ்சம் இப்படித் துடிப்பானேன்? ஆம், வெகு நேரம் ஆகியும் போன பெண்மணி திரும்பி வரவில்லை. ரெயில் வந்து விட்டால் அவள் பெட்டியை என்ன செய்வது? ஒரு நடை தேநீர் விடுதி வரை சென்று அவளைப் பார்த்து வரலாமா என்று எண்ணினேன். தேநீரோடு சிற்றுண்டியோ பிஸ்கட்டோ சாப்பிட்டால் கூட இத்தனை நேரம் ஆவதற்குக் காரணம் இல்லையே! உண்மையிலேயே தன்னைக் கவலை பற்றிக் கொண்டது. 'கடைசி வரை அவள் திரும்பி வரா விட்டால் என்ன ஆகும்?' என் மனத்தில் விந்தையானதொரு சந்தேகம் முளைவிட்டது. இதன் நடுவில்தான் ஒரு வேடிக்கை நடந்தது.

சின்னஞ்சிறியதொரு போலீஸ் கோஷ்டி என் அருகில் வந்தது. சிறிது நேரமாகவே சுங்கத்துறை காவல் பிரிவினர் பிளாட்பாரத்தை வட்டமிட்டுக் கொண்டிருந்தனர். ஒவ்வொருவருடைய மூட்டை — முடிச்சின் மீதும் அவர்களுடைய கடும் பார்வை விழுந்து கொண்டிருந்தது. யார் மீதாவது சந்தேகம் தோன்றினல் அவரது பெட்டி படுக்கைகளைத் திறந்து சோதித்துப் பார்த்தனர்.

என் அருகிலும் வந்து அவர்கள், ''சூட்கேஸில் என்ன இருக்கிறது?'' என்று கேட்டார்கள்.

''என் துணிமணிகள்!'' என்றேன்.

அந்தப் போலீஸ் கோஷ்டியின் தலைவர், யாருடைய பெட்டி, படுக்கை, மூட்டை, முடிச்சு மீதாவது சந்தேகம் வந்தால், தம் கைத்தடியினால் தட்டி 'இதில் என்ன இருக்கிறது?' என்று கேட்பார். என்னிடமும் அதே கேள்வியைத் திருப்பிப் போட்டார்.

''இது என் 'போர்ட் ஃபோலியோ'!'' என்றேன்.

''அது தெரிகிறது. அதற்குள் என்ன இருக்கிறது?''

''என் அலுவலகம் சம்பந்தப்பட்ட காகிதங்கள்!''

''திறந்து காட்டுங்கள்!''

எனக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. ''என்னிடம் உங்களுக்குச் சந்தேகமா?'' என்று கேட்டேன்.

''நாங்கள் சுங்கத் துறையைச் சேர்ந்தவர்கள். நான் இவர்களின் தலைவன். உங்கள் பெட்டிக்குள் சட்டத்துக்குப் புறம்பான பொருள் ஏதாவது இருக்கிறதா என்று பார்க்க விரும்புகிறேன்!'' என்றார் அவர்.

''தாராளமாகப் பாருங்கள்!'' என்ற நான் என் 'போர்ட் ஃபோலியோ' வைத் திறந்தேன். நானும் அரசாங்க ஊழியன் என்பதை அவர் புரிந்து கொண்டார். அப்புறம் என்னைச் சிரமப்படுத்தவில்லை. என்னை விட்டுப் பக்கத்தில் அமர்ந்திருந்தவரைப் பிடித்துக் கொண்டார்.

அவர் பாவம், குடும்பத்தோடு ரெயிலை எதிர்நோக்கிக் கொண்டிருந்தவர். குண்டும் நண்டுமாகக் குழந்தைகள் வேறு. வண்டி வந்ததும் நல்லபடியாக எல்லோரும் ஏறியாக வேண்டுமே என்ற கவலை அவரை வாட்டிக் கொண்டிருந்தது என்பதை அவரது முகமே எடுத்துக் காட்டியது. இறங்கு முகவயது. ஒரு கை கொடுத்து உதவ, வயது வந்த பிள்ளையோ வேறு உதவியாளர்களோ அவருக்கு இல்லை.

அவரிடமும் அதே கேள்வி கேட்கப்பட்டது.

''உங்கள் பெட்டிக்குள் என்ன இருக்கிறது?''

கேள்வியோடு நிறுத்திக் கொள்ளாமல், அவருடைய பெட்டி, படுக்கை, பபன் காரியர் எல்லாவற்றையும் பிரித்து உதறிப் போட்டு விட்டார்கள். புண்ணியம் தேடிக் குடும்பத்தோடு நேபாளத்துப் பசுபதி நாதரைத் தரிசிக்

கப் புறப்பட்டவர் போலும்! ஆனால் போலீ சார் அதையெல்லாம் பார்த்துக் கொண் டிருக்க முடியுமா? பயந்து போய் அவர் ஒன்று விடாமல் தம் பொருள்கள் அனைத்தையும் எடுத்துக் காட்டி விட்டார். அவர் மூட்டை முடிச்சுகளை மறுபடியும் கட்டி முடிப்பதற் குள் ரெயில் வந்து விடாமல் இருக்க வேண் டுமே என்று நான் வேண்டிக் கொண்டேன்! அவரிடம் ஒன்றும் இல்லை என்று கண்ட போலீஸ் அதிகாரி நகர்ந்தார். அவர் நகர்ந் தாலும் அவருடைய கண் இடுமென்று அந்தப் பெண்மணியின் சூட்கேஸ் மேல் பாய்ந்தது.

''இந்த சூட் கேஸ் யாருடையது? இதில் என்ன இருக்கிறது?'' தம் கேள்வியைத் தோசை திருப்பினார் அதிகாரி.

எல்லோரும் தங்கள் தங்கள் பொருள் களைப் பார்த்துக் கொண்டனர். இந்தக் கேள்வி யாரிடம் கேட்கப்பட்டது என்று விளங்காமல் திகைத்தனர். இன்ஸ்பெக்டர் தம் கைப் பிரம்பால் அந்த சூட்கேஸைத் தட்டி, ''இதைத் திறந்து காட்டவில்லையே! திறந்து காட்டுங்கள்!'' என்றார்.

அருகில் அமர்ந்திருந்த ஒரு கிழவர் அரண்டு போய் அழாக் குறையாக, ''இது என் சூட் கேஸ் இல்லை. அவருடையது...'' என்று கூறி என்னைச் சுட்டிக் காட்டினார்.

இன்ஸ்பெக்டர் என் பக்கம் திரும்பி ''இது உங்கள் சூட் கேஸா? நீங்கள் சொல்லவே இல்லையே!'' என்றார்.

''இல்லை!'' என்றேன்.

அருகில் அமர்ந்திருந்த பலரையும் அவர் கேட்டு விட்டார். 'இது உங்களில் யாருடைய தாவது?' என்று! அதுதான் அவர்களில் யாருக்கும் சொந்தம் இல்லையே! எதற்காகத் தங்களுடையது என்று கூறப் போகிறார்கள்? எல்லோரும் கை விரித்தார்கள். பிறகு நானு கவே வலியச் சென்று, ''இது ஒரு பெண்மணி யினுடையது. இதை என்னைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டுத் தேநீர் அருந்தப் போயிருக்கிறாள். இதோ வந்து விடுவாள்!'' என்றேன்.

''தேநீர் குடிக்கப் போயிருக்கிறாளா? எங்கே போயிருக்கிறாள்?''

''எனக்கு என்ன தெரியும்? தேநீர் விடுதி வரை போய் வருவதாய்ச் சொல்லிப் போனாள். அவ்வளவுதான் எனக்குத் தெரியும். சூட் கேஸ் திருட்டு இருட்டுப் போய் விடக்கூடாதே என்பதற்காக என்னைக் கவனித்துக் கொள்ளச் சொல்லி விட்டுப் போயிருக்கிறாள்!'' என் றேன் நான்.

இன்ஸ்பெக்டர் ஒரு கான்ஸ்டேபிளைக் கூப்பிட்டுத் தேநீர் ஸ்டாலில் போய்ப் பார்த்து வரப் பணித்தார். என்னைப் பார்த்து, ''அவள் எப்படி இருந்தாள்? என்ன வயசு இருக்கும்?'' என்று அடையாளம் கேட்டார்.

நான் பார்த்தது பார்த்தபடி, புரிந்தது புரிந்தபடி வர்ணித்து விட்டேன்.

கான்ஸ்டேபிள் அந்த ஆதாரத்தில் அவ ளைத் தேடி வரப் புறப்பட்டார். பிறகு போன காலோடு திரும்பி வந்து அப்படி ஒரு பெண்மணி தேநீர் ஸ்டாலிலோ அக்கம் பக் கத்திலோ தேநீர் அருந்தியதைத் தாம் மட்டும் என்ன, தேநீர் ஸ்டால்காரர்களே பார்க்க வில்லை என்று கூறினார்.

மெய்தானே?

'ரெயில் வரும் நேரத்திலே யாருக்குத்தான் தேநீர் குடிக்கத் தோன்றும்? - ரெயிலைப் பார்ப் பார்களா, தேநீர் அருந்திக் கொண்டு உட் கார்ந்திருப்பார்களா?'

ஒரு கான்ஸ்டேபிளை என் அருகில் நிறுத்தி விட்டு, இன்ஸ்பெக்டர் மற்ற பயணிகளின் பொருள்களைப் பரிசோதிக்கப் போய்விட்டார். நான் நாற்புறமும் நோட்டம் விட்டேன், அவள் தலை எங்கேயாவது தட்டுப்படுகிறதா என்று! ரெயில் வருகிற நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. இன்ஸ்பெக்டர் என் னிடம் திரும்பி வந்து மறுபடியும் கேட்டார்:


''எங்கே போனாள் அந்தப் பெண்மணி?''

■ புது தில்லியில் முதல் டெஸ்ட் தொடங்கும்போது, 'பஃரூதீன் அலி அகமத் அவர்கள் காலை ஏழு மணிக்கே கால்ஃப் மைதானத்துக்குச் சென்று எம். ஸி. ஸி. ஆட்டக்காரர்கள் பாரிங்டன், டோல்லார்ட் ஆகி யோருடன் கால்ஃப் ஆடியிருக்கிறார். எம். ஸி. ஸி. கிரிக் கெட் ஆட்டக்காரர்களும் இந்தியக் கிரிக்கெட் கோஷ்டி யினரும் மறைந்த விளையாட்டுப் பிரியருக்கு மரியாதை செலுத்தும் முறையில் பம்பாய் டெஸ்ட்டின்போது கையில் கருப்புத் துணி அணிந்து கொண்டு ஆடினர்.

■ பம்பாயில் இரதநாம் பார்லோ விரைவாக வந்த பந்து வீச்சில் கையில் அடிபட்டு, கைக்குட்டையோடு துடித்துக் கொண்டு வெளியேறினார். [illegible] பந்து வீசியவர் பாப் வில்லிஸ்! இதெப்படி? ஒரே கோஷ்டியைச் சேர்ந்த இருவர் பந்து வீச்சிலும் பாட்டிங்கிலும் கலந்து கொண்டது எப்படி என்று திகைக்கிறீர்களா?

இரதநாம் பார்லோ மாட்ச் தொடங்குவதற்குமுன் பயிற்சி ஆட்டத்தில் வில்லிஸ் பந்தில் அடிபட்டு விட்டார்!

-பி.எஸ்.எம்.



''எனக்கு என்ன தெரியும்? தேநீர் குடித்து வருவதாகக் கூறிப் போனுள். இன்னும் வரக் காணும். அவ்வளவுதான் தெரியும்!'' என்றேன்.

இன்ஸ்பெக்டருக்கு என் மேல் சந்தேகம் வந்து விட்டது. அவர் குரலில் கடுமையைக் காட்டி, ''உண்மையில் இந்த சூட் கேஸ் வேறு ஒருவருடையதாக இருந்தால், கட்டாயம் திரும்பி வந்திருப்பார். உண்மையில் இது உங்களுடையதுதான். இதைத் திறந்து காட்டுங்கள். இதில் என்ன இருக்கிறது!'' என்ருர்.

எனக்குக் கோபம் பொங்கி வந்தது. ''எனக்குத் தடையில்லை. ஆனால்...'' நான் முடிக்கவில்லை. அவர் தொடர்ந்தார்:''உங்கள் ஊர், பேர், உத்தியோகம் எல்லாவற்றையும் சொல்லுங்கள். என்னோடு ஸ்டேஷனுக்கு நடவுங்கள்!''

என்னை அச்சுறுத்திப் பணிய வைக்கும் போக்கில் அவர் பேச்சு நீளவே, நான் என்னை ஒளித்துக் கொள்ள முடியவில்லை. சட்டைப் பையிலிருந்து புகைப்படத்தோடு கூடிய என் அடையாளச் சீட்டை அவருக்குக் காட்டினேன். அவர் துணுக்குற்ருர்.

''அடே! நீங்கள் சி. பி.ஐ. யைச் சேர்ந்தவரா? ஏன் முன்பமே சொல்லவில்லை?'' என்று தலையைச் சொறிந்தார்.

''முன்னும் என்னை யார் என்று நீங்கள் எங்கே கேட்டீர்கள்?'' என்றேன் பதிலுக்கு.

''எனக்கு இது யாரோ கடத்தல்காரர்களின் வேலையாக இருக்க வேண்டும் என்று படுகிறது. பூட்டை உடைத்துப் பார்ப்பதில் உங்களுக்குத் தடை ஒன்றும் இல்லையே!'' என்று கேட்டார்.

''எனக்கு தடை என்ன இருக்க முடியும், சொந்தக்காரர்களுக்கே அக்கறை இல்லாமல் இருக்கும்பொழுது! நீங்கள் இந்தப் பெட்டியை என்ன வேணுமானாலும் செய்யலாம். அப்படியே நான் தடை சொல்வதா யிருந்தாலும் நீங்கள் கேட்கப் போகிறீர்களா? உங்கள் கடமையைத்தானே செய்யப் போகிறீர்கள்?'' என்று கேட்டேன்.

சடையியில் சூட்கேஸின் பூட்டு உடைக்கப்பட்டது. சில புடவைகள், பிளவுஸ்கள், டவல்கள் முதலியவை இருந்தன. அவற்றுக்கு அடியில்...! இருந்தது கஞ்சா.

சூட்கேஸ் உடைக்கப்படுவதைப் பார்த்ததுமே பயணிகள் கூடிவிட்டனர். கஞ்சாவைக் கண்டு எல்லோரும் அதிர்ந்தனர். எல்லோரையும் காட்டிலும் அதிர்ச்சியுற்றவன் நான்தான். ஏனென்ருல், போலீஸில் உத்தியோகம் பார்க்கும் நானே அல்லவா அந்தப் பெண்மணி மேல் சந்தேகப்படவில்லை. போலீசுக்குக் கிடைக்கும் முதல் பாடமே சந்தேகப்படுவதுதானே? அது தெரியாத நான் இத்துறைக்கே தகுதியற்றவனே?

என் மனத்தில் உள்ளதைப் படிப்பவர் போல் இன்ஸ்பெக்டர் என்னைப் பார்க்கவே, நான் அகமும் முகமும் குன்றிப் போனேன். அதையும் அவர் புரிந்து கொண்டு விட்டாரோ, என்னவோ? ''இதில் உங்கள் தவறு ஒன்றும் இல்லை. இந்த லயனில் எப்பொழுதுமே இந்த மாதிரி நடக்கிறது. அதுவும் முக்கியமாக நீங்கள் கூறிய பெண்மணியை நாங்கள் வெகு நாட்களாகவே தேடிக் கொண்டிருக்கிறோம். பலே கைகாரி அவள். பிடிபடாமல் எங்களுக்கு டிமிக்கி கொடுத்து வருகிருள்!'' என்று கூறி அவர் சூட்கேஸுடன் புறப்பட்டு விட்- டார்.

வண்டி வந்துவிடவே, மற்ற பயணிகளுடன் நானும் ஏறிக் கொண்டேன். மறு நாள் கல்கத்தாவுக்குப் போய்ச் சேர்ந்துவிட்டேன். அந்தப் பெண்மணி யார்? நேபாளத்திலிருந்து இத்தனை கஞ்சா எதற்காக எடுத்து வந்து கொண்டிருந்தாள்? இந்தக் கடத்தல் வேலைக்குப் பின் ஏதாவது சோஷ்டி மறைமுகமாக இயங்கிக் கொண்டிருக்குமா?— என்னால் இதை யெல்லாம் விளங்கிக் கொள்ள முடியவில்லை; அத்தகைய தேவையும் ஏற்படவில்லை! (தொடரும்)

மேக் அப் உங்கள் முகத்தின்
குறைகளை மறைக்கலாம்.



உங்கள் மேனியை தூய்மையாக்கி இயற்கை எழிலுடன் துலங்கச் செய்வது லாக்டோ-காலமைன் ஒன்றுதான்.

உங்கள் மேனியைப் பராமரிக்க லாக்டோ-காலமைன்: உங்கள் மேனியைத் தூய்மையாகவும் புதுமையாகவும் வைத்திருக்கக் கூடிய சேர்க்கைப் பொருட்கள் விசேஷ முறையில் இதில் கலக்கப் பட்டுள்ளன. எல்லாம் ஒன்றில் இணைந்த அழகுப் பராமரிப்பு—லாக்டோ காலமைன் அஸ்ட்ரின்ஜெண்ட், மாயிஸ்சரைஸர், ∴பவுண்டேஷன் க்ரீம். மூன்றும் இணைந்த தன்னிகரற்ற அழகு சாதனம்.

அதனை முறையாக உபயோகித்து வரவும். உங்கள் மேனி இயற்கையாக மெருகேறுவதைக் கண்கூடாகக் காண்பீர்கள்.



3 வசதியான சைஸ்களில் கிடைக்கிறது:
110 மி.லி.
60 மி.லி. 28 மி.லி.

க்ருக்ஸ் லாக்டோ-காலமைன், ஒரு ரெஜிஸ்டர்டு டிரேடு மார்க். இதனைத் தவறாகப் பயன்படுத்துபவர்கள் சட்டப்படி தண்டிக்கப் படுவார்கள்.

உண்மையான லாக்டோ-காலமைன் தானா என்று உறுதி செய்து கொள்வதற்கு, எப்போதும் இந்த க்ருக்ஸ் சின்னத்தைப் பார்த்து வாங்குவீர், அதோடு, க்ருக்ஸ் முத்திரையும் உடையாமல் இருக்கிறதா என்று உறுதி செய்து கொள்ளுங்கள்.

டுஃபார்-இன்டர்ஃப்ரான் லிமிடெட்
த.பெ. எண் 6582, பம்பாய்-400 018

க்ருக்ஸ்

லாக்டோ-காலமைன் அதுவே எழில் பராமரிப்பு ரகசியம்.

Sista's-DIL-219-Ф/76/Tam

ஒரு பெரிய பஞ்சம் தோன்றிப் பாண்டிய நாட்டை வதைத்தது. பல திட்டங்கள் வகுத்தும் பயன் படாமற் போகவே, காலியான கஜானாவைக் கண்டு பெருமூச் செறிந்தான் பாண்டியன். அன்றிரவு சித்தர் உருவில் சிவபெருமான் கனவில் தோன்றி, எடுக்க எடுக்கக் குறையாது பொன் கொடுக்கும் உலவாக்கிழி ஒன்றை அரசன் கையில் கொடுத்தார். விழித்தெழுந்த பாண்டியன் தன் கையைப் பார்த்தான். உலவாக்கிழி இருந்தது. பஞ்சமும் தீர்ந்தது.

நமக்கு வேண்டியது ஒரு தூக்கம். அதில் ஒரு கனவு. கனவில் வர வேண்டியவர் லார்ட் சிவா. கொடுக்க வேண்டியது கோல்டன் உலவாக்கிழி.



மதுர நாயகி



10

ரமணியின் சரித்திரத்தை யாராவது எழுத நேர்ந்தால், அவன் புத்திசாலி, கலகலப்பாகப் பேசுகிறவன், சகல லட்சணங்களும் நிறைந்தவன், மூன்று பேரை ஒரே சமயத்தில் எதிர்த்துச் சமாளித்து வெற்றி காணும் வல்லமை படைத்தவன் என்றெல்லாம் எழுதலாம்.

அப்படிப்பட்ட ரமணி, தான் உண்மையில் ஒரு கோழை என்பதை உணர்ந்தான். கறுப்புக் கோட்டும் வேண்டாம், ஹரிணியும் வேண்டாம் என்ற நெஞ்சுறுதி அவனிடம் பிறக்கவில்லை. அதே சமயத்தில் லாவண்யாவின் கையைப் பிடித்துக் கரகரவென்று இழுத்துக்கொண்டு ஏதாவது ஒரு கோயிலுக்குப் போய் இரண்டாம் மனுஷனுக்குத் தெரியாமல் அவள் கழுத்தில் தாலியைக் கட்டவும் தைரியமில்லை. அவன் லாவண்யாவைப் போல் முழுக்க முழுக்க ஒரு யதார்த்தவாதியாக இருந்தால், ஒருவேளை தைரியமும் நெஞ்சுறுதியும் வந்திருக்குமோ என்னமோ?

ஒருவனுக்கு விபரீத ஆசை வந்ததாம். யானை மேல் உட்கார்ந்து கடைத் தெரு வழியாகப் பவனி வர வேண்டும். ஆனால் யாரும் பார்க்கக்கூடாது. அவனுக்கு லாவண்யாவைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். ஆனால், அம்மா, ஹரிணி, அவனுடைய தந்தை யாருக்கும் தெரியக் கூடாது. அவனுடன் அவள் தாம்பத்தியம் நடத்த வேண்டும். ஆனால் அம்மா சாவித்திரிக்கு லாவண்யா மருமகளாகத் தெரியக் கூடாது.

'இது எப்படிச் சாத்தியம்?' என்ற கேள்வி அவனை உலுக்கவே மேற்கொண்டு என்ன செய்வது என்று புரியவில்லை. இத்தனை நாட்களாக ஒரு சாதாரண நண்பனைப்போல் பழகிய ஹரிணி திடீரென்று ஒரு பெரிய பிரச்னையை அவன் தலைமேல் போட்டு விட்டாள்.

ஹரிணியா, லாவண்யாவா என்ற கேள்வி பகுத்தறிவுப் போட்டியில் வரும் ஒரு கேள்வியைப் போல் மேலெழுந்த வாரியாகத் தோன்றினாலும், விடை எதிர்கால வாழ்க்கையின் ஓர் அஸ்திவாரமாகப் பட்டது. லாவண்யாவை மணம் செய்து கொண்டு, ஸீனியர் ராமையாவைத் தூக்கி எறிந்து அவன் கறுப்புக் கோட்டுடன் அலையலாம். ஆனால் பெரிதாக என்ன வழக்குகள் அவனுக்குக் கிடைக்கும்? சாதாரணக் கட்சிக்காரர்கள் கொண்டு வரக் கூடிய முந்நூறு ரூபாய் புரோநோட்டுக் கேஸ்களும், வீட்டுக்காரன்—குடித்தனக்காரன் கேஸ்களும் அவனை எந்த அளவுக்குத் தொழிலில் உயர்த்த முடியும்? வரும்படியைப் பற்றி அவன் கவலைப்படவில்லை. அப்பா கட்டிவிட்டுப் போன வீடுகளிலிருந்து வாடகைப் பணம் வருகிறது. மருந்துக் கடையிலிருந்து ஒரு நல்ல வருமானம் இருக்கிறது. உட்கார்ந்து சாப்பிட யதேஷ்டம். ஆனால் பெரிய வக்கீலாக எப்படி வர முடியும்? இதற்கு இரண்டு மூன்று வருடங்களாக ராமையா ஒரு வழி வகுத்து வருகிறார். அவருடைய நிழலில் இன்னும் கொஞ்சகாலம் தொடர்ந்து இருந்தாலோ, அல்லது அவருடைய நூற்றுக் கணக்கான கேஸ் கட்டுகள் அவனுக்கு வந்தாலோ அவன் சாமர்த்தியத்தால் தனித்து நின்றுவிடுவான். ஹரிணி சொல்வது உண்மையானால் இன்னும் ஐந்தாறு மாதங்களில் ராமையா மனைவியை


அழைத்துக் கொண்டு கொடைக்கானல் போய் விடுவார். பல கேஸ்களைப் பல ஜூனியர்களை வைத்துக் கொண்டு அவனே நடத்தி விடுவான். அவ்வப்போது ராமையாவைச் சந்தித்து அவருடைய யோசனைகளையும் கேட்டுக் கொள்ளுவான். இரண்டு மூன்று வருடங்களில் ரமணியின் பெயர் பெரிய புள்ளிகளின் பட்டியலில் சேர்ந்து விடும்.

அவனுடைய எதிர்காலத் தொழில் வாழ்க்கைக்கு ராமையா ஒரு வழிகாட்டி. ஆனால் அவனுடைய சாதனைகளைக் காட்ட ஆதாரமான தேவை இப்போது ஹரிணி. அவள் இல்லாவிட்டால் ராமையாவே இல்லை என்ற நிலை பிறந்து விட்டது.

என்ன செய்வது?

ஹரிணியா லாவண்யாவா?

ரமணியின் கண் முன் லாவண்யா தோன்றினாள். தினசரிக் கூலி இருபது ரூபாய்க்காக, மதுரையைப் பார்க்க வருகிறவர்களுடன் கால் தேய நடந்து அவதிப்படும் சமையற்காரரின் பெண். நாளைக்குக் கான்சர் வியாதிக்குப் பலராமன் இரையாகி விட்டால் அப்புறம் நடுத் தெருவில் நிற்கக் கூடிய குடும்பம் அவனைச் சரணடையும். என்ன தான் அம்மா சாவித்திரி சமூக சேவகி என்று பெயர் வாங்கியிருந்தாலும், சொந்த விஷயங்கள் என்று வரும்போது வேறு மனுஷி தான். லாவண்யாவின் அம்மாவைச் சம்பந்தியாகப் பாராட்டாமல் ஒரு சமையற்காரனின் மனைவியாகத்தான் நடத்துவாள். பெரிய மனிதர்கள் வந்து போகும் வீட்டில் சமையற்காரச் சம்பந்தியையும் கல்யாணமாகாத ஒரு பெண்ணையும், வேலை வெட்டி இல்லாப் பிள்ளையையும் லாவண்யாவுடன் இருக்க



அனுமதிக்க மாட்டாள். முடிவு? ஒன்று லாவண்யாவையும் அழைத்துக் கொண்டு அவன் வேறு வீடு பார்க்க வேண்டும். இல்லாமல் போனால் அவளுடைய குடும்பத்துக்கு மாதாந்தர உதவி செய்ய வேண்டும். ஏதோ ஓர் அவசரத்துக்கு உதவி என்றால் அதைச் செய்து விட்டு மறந்து விடலாம். ஒரு குடும்பத்தைக் கடைசி வரையில் எப்படிப் பாதுகாப்பது?

இந்தக் கஷ்டத்தை விடப் பெரியது லாவண்யாவைக் கல்யாணம் செய்து கொண்டால் நேரக் கூடிய நஷ்டம். அம்மாவின் கோபம், ராமையாவின் கோபம், ஹரிணியின் கோபம் இப்படி மூன்று பேர்களுடைய கோபத்துக்கு அவன் ஆளாக வேண்டியிருக்கும். அம்மாவால் மன நிம்மதி குலையும். ராமையாவால் தொழில் வெற்றி பாதிக்கும்.

என்ன செய்வது?

இவ்வளவையும் மீறி லாவண்யாவா?

அவன் தன்னுள் புலம்பிக் கொண்டிருக்கையில், திடீரென்று, ''சார்!'' என்ற குரல் கேட்டது.

எதிரிட்டுப் பார்த்தான்.

ஒரு கணம் திடுக்கிட்டுப் போனான். லாவண்யாவோ என்று மனம் அதிர்ந்தது. அவளுடைய தங்கை நீலா நின்று கொண்டிருந்தாள். அக்கா தங்கைகள் இருவரும் ஒரே உயரம், ஒரே தோற்றம். ஆனால் லாவண்யாவின் கண்கள் இருக்கின்றனவே, அவை மாதிரி லட்சத்தில் ஒருத்திக்குத்தான் இருக்க முடியும். லாவண்யாவின் கண்கள் தான் முகத்துக்கே ஒரு தனி வசீகரத்தையும் கவர்ச்சியையும் கொடுத்தன. ஒரு திடீர் பார்வைக்கு அக்காளை ஞாபகப் படுத்தினாலும் நீலா ஒரு சாதாரணப் பெண்தான்.

''என்ன வேணும் நீலா?''

''அப்பா அனுப்பினார்'' என்றாள் நீலா.

''உடம்புக்கு...''

''உடம்பு அப்படியேதான் இருக்கிறது. ஹோட்டல் முதலாளி ஆயிரமோ இரண்டாயிரமோ கொடுத்து...''

நீலாவை முடிக்க ரமணி விடவில்லை.

''ஆஸ்பத்திரிச் செலவுக்குத்தானே...நான் கூட....''

''இல்லை சார்... இத்தனை நாள் உழைச்சதுக்காகத் தர்ற பணம்.''

''அப்போ?''

''வேலை போகப் போகிறது.''

''அப்படியா?''

''ஆமாம்.''

''அப்பா என்ன சொல்றார்?''

''இன்னும் வேலை செய்ய முடியும்னு அவர் நினைக்கிறார். இந்த நினைப்பிலே அம்மாவுடன் 'ஆர்க்யூ' பண்றார்.''

''அம்மா என்ன சொல்றா?''

''வேலை செஞ்சது போதும்னு அம்மா சொல்றா... அப்பாவோட உடம்புதான் முக்கியம்னு நினைக்கிறா.''

''உன் அக்கா என்ன சொல்றா?''

''லாவண்யாவுக்கு வீட்டிலே நடக்கிறது ஒன்னும் தெரியாது. இரண்டு நாட்களா சரியான வேலை. ராத்திரி வந்ததும் தூங்கப் போயிடறா.''

''இப்ப நான் என்ன செய்யணும்னு அப்பா சொல்றார்?''

''தம்மை வேலையிலிருந்து நீக்குவது சரியில்லைன்னு அபிப்பிராயப்படறார். ஹோட்டல்காரன் மேலே கேஸ் போட வழி உண்டான்னு கேட்கணுமாம்.''

ரமணி சிரித்தான்.

''அவர் இன்னும் வேலைக்குப் போவானேன்?''

''இதையேதான் அம்மாவும் கேட்கிறா. ஆறு உலையிலே அரிசி எப்படி வேகும்னு அப்பா பதிலுக்குக் கேட்கிறார். வேறு ஹோட்டல்லே வேலை கிடைக்கும்னு நான் சொன்னேன்.''

''அந்த ஹோட்டல் முதலாளியை நான் இன்னிக்கே பார்க்கிறேன், நீலா!''

''தாங்க்ஸ் ஸார்.''

''கேஸெல்லாம் போடக் கூடாதுன்னு அப்பா கிட்டே சொல்லு. நானும் பார்த்துச் சொல்றேன்.''

''சரி ஸார்.''

''அப்பா சம்பாதிக்கலேன்னு லாவண்யா இருக்காளே'' என்றான் ரமணி.

''அவ வரும்படியிலே தர்ற பணம் அவ சாப்பாட்டுக்கு மட்டும்தான். இது உங்களுக்குத் தெரிஞ்சிருக்குமே.''

ரமணி பதில் பேசவில்லை.

''அப்ப நான் வரட்டுமா?''

''இரு. ஏதேனும் சாப்பிட்டு விட்டுப் போகலாம்.''

''ஒன்னும் வேண்டாம். இன்னொரு உதவி ஸார்.''

''என்ன?''

''நான் எவ்வளவோ முயற்சி பண்ணிட்டேன். ஒரு வேலை கூடக் கிடைக்கலை... நீங்க எப்படியாவது ஒரு வேலை வாங்கித் தந்தா அம்மாவுக்கு ரொம்ப யூஸ்ஃபுல்லா இருக்கும்.''

''பார்க்கிறேன், நீலா.''

''எனக்கு டைப்பிங் தெரியும். உங்க ஆபீஸ்லே ஒரு டைப்பிஸ்ட் வேலை கிடைச்சாக் கூடப் போதும்.''

''என் ஸீனியர்கிட்டே நாலு பேர் இருக்காம்மா.''

''முயற்சி பண்ணுங்கோ சார்.''

''யோசிக்கிறேன்.''

''சார்...'' என்று ஆரம்பித்த நீலா தயங்கினாள்.

''என்ன நீலா?''

''இப்படியே போனால் அப்பா ரொம்ப நாளைக்குத் தாங்குவார்னு எனக்குத் தோணலை. எனக்கும் வேலை கிடைக்காமப் போய், கந்துவும் சம்பாதிக்கலைன்னா அம்மாதான் வேலைக்குப் போகணும். இப்பவே அடிக்கடி சொல்லிக்கிண்டிருக்கா. நாலு பெரிய மனுஷா வீட்டுச் சமையலறையிலே



தாம் இறந்தபிறகு தமது சிறுநீரகத்தைத் தானம் செய்பவர்களுக்கு அவர்களுடைய பிரேத அடக்கச் செலவுக்குச் சிங்கப்பூர் அரசு ஐந்நூறு டாலர் கொடுக்கிறது. ஹிந்துஸ்தான் டைம்ஸ் - பாலி

ஏறி இறங்கினு சாப்பாட்டுக்குக் கஷ்டம் இருக்காதுன்னு.''

''சேச்சே, அப்படியெல்லாம் நடக்காது நீலா.''

''அப்படி நடக்கக் கூடாதுன்னுதான் நானும் மீனாட்சியை வேண்டிக்கிறேன்... நீங்களும் உதவி பண்ணனும்....அப்பா தான் சமையற்காரர்னு அம்மாவும் அதே வேலைக்குப் போறது எங்களுக்கு ரொம்ப வேதனையா இருக்கும் சார்.''

''சரி, நீ இப்பப் போ... நான் வீட்டுக்குச் சாயங்காலம் வருகிறேன்.''

''ஓட்டல் முதலாளி...''

''நான் கவனிச்சுக்கிறேன்.''

நீலா போன பின்பு, ரமணியால் தீவிரமாக எதைப் பற்றியும் சிந்திக்க முடியவில்லை. அவன் விரும்பும் லாவண்யா ஒரு சமையற்காரனின் — அதுவும் கான்சரில் அவதிப்படும் சமையற்காரனின் குடும்பத்தில் பிறப்பானேன் என்ற கேள்வி மட்டும் அவனை வதைத்துக் கொண்டிருந்தது.

அவன் போன சிறிது நேரத்துக்கெல்லாம் சாவித்திரி வந்தாள்.

''ஏண்டா, அந்தப் பொண்ணு, லாவண்யாவோட தங்கை, அவ பேரு என்ன?...''

''நீலா.''

''ஆமாம். நீலா! மறந்து போயிட்டேன். அவள் இங்கே வந்தாளா? பஸ் ஸ்டாண்டிலே நிக்கறு.''

''ஆமாம்.''

''எதுக்கு?'' என்ற சாவித்திரி ரமணிக்கு எதிரே உட்கார்ந்து கொண்டாள்.

''எதுக்குன்னு அப்புறமாச் சொல்றேன்'' என்ற ரமணி, ''அம்மா...'' என்று இழுத்தான்.

''என்ன?''

''ரெண்டு நாளாக் கேக்கணும் கேக்கணும்னு இருக்கேன்.''

''கேட்டுடேன்.''

''ராமையா இங்கே ஒய்ப்போடே வந்திருந்தாரா?... இல்லே நீ அங்கே போயிருந்தியா?''

''பிள்ளையைப் பெத்தவா பெண் வீட்டுக்குத் தாமா போவாளா ?''

''எப்ப வந்திருந்தார்?''

''நீ திண்டுக்கல் கேஸுக்காகப் போயிருந்தியே, அன்னிக்கு.''

''நீ சொல்லவே யில்லே.''

''சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்தேன்... ஹரிணி சொல்லி யிருப்பாளே?''

''சொன்னு. ஆனு நீ சொல்லலே.''

''அதுக்கென்ன, இப்பச் சொல்றேன். அவள் ஒரு வக்கிலோட பொண்ணுனுலும் எவக்குப் பிடிச்சிருக்கு.''

''சமையற்காரனேட பெண்ணுனுலும், எனக்கு லாவண்யாவைப் பிடிச்சிருக்கு.''

''சரி, இவ்யமாப் பண்ணிக்கோ. மாமனுர் ஹோட்டல்லேருந்து இனமும் அல்வாவும் ஜாங்கிரியுமாக் கொண்டு வந்து மாப்பிள்ளைக்கு வாயிலே ஊட்டட்டும்.''

''என்னம்மா பேசறே?''

''ஆமாம்டா... உனக்கு வயசாயிடுத்து. எதும்பு முத்திப் போச்சு. இனிமேல் நான்



''பேப்பரைச் சுற்றிக் கொண்டு வந்திருக்கியே! என்ன அது?''

''சுற்றறிக்கை!''

சொல்லி நீ கேட்கணும்னு நான் எப்படி எதிர்பார்க்க முடியும்?''

''நீ அம்மா ஸ்தானத்திலிருந்தே பேச மாட்டேங்கறே.''

''அப்படீன்னு நீ நினைச்சா அதுக்குக் காரணம் நான் இல்லே. நீதான். என், விக்கி நீ என்னை அம்மான்னு மதிச்சிருக்கே?''

''சரி. நான் வாதம் பண்ணலே.''

''அதுதான் பிள்ளைக்கு அழகு.''

''ராமையா வீட்டிலே என்ன சொன்னு?''

''ஹரிணியை உனக்குக் கொடுக்கணுமாம். அவனை நான் வாங்கிக்கணுமாம்.''

''இதென்ன, கொடுக்கல் வாங்கல் வியாபாரமா?''

''இதில் என்னடா சந்தேகம்? பிஸினஸில் பணத்தை முடக்கிறுல் நஷ்டத்தையா எதிர்பார்ப்பே? லாபத்தைத்தானே? அது மாதிரி தான் கல்யாணமும்.''

''பேத்தல்.''

''அப்போ லாவண்யாவைப் பண்ணிக்கோ. நாளைக்கு நஷ்டம் வந்துடுத்தே, நஷ்டம் வந்துடுத்தேன்னு, வெளியே சொல்லாமே வாய்க்குள்ளேயே, அழுதுண்டிரு. எனக்கென்ன?''

''நீ சொல்ற லாப நஷ்டமே புரியலே.''

''டேய் மண்டு! ஹரிணி அப்பா வாரிக் கொழிக்கிறுர். ஒரே பொண்ணு. எல்லாம் அவளுக்குத்தான்.''

''ஓ, சொத்து மேலே ஒரு கண்ணு, உனக்கு?''

''ஆமாம்டா... ராமையா எப்பக் கண்ணை மூடுவார்னு நான் காத்துக் கொண்டிருக்கேன். ஏன்னு, நான் இப்ப கால்லணு காசு கூட இல்லாமத் தெருவிலே நிக்கிறேனு இல்லியோ? என்னைப் பத்தியாடா நான் நினைச்சுப் பார்க்கிறேன், உன் கல்யாணப் பேச்சு வர்றப்போ! நீ வக்கீலுக்குப் படிச்ச என்ன புண்ணியம்?''

''சரி, சொல்லு!''

''ராமையா குடும்பம் வத்தலக்குண்டிலே பூர்வீகமா உள்ள குடும்பம். நல்ல குடும்பம். பெரிய வக்கிலோட மாப்பிள்ளை, அசட்டு மாப்பிள்ளையா இல்லேன்னு ஓகோன்னு வரலாம். மாப்பிள்ளை சாமர்த்தியமான வக்

உள மகிழ்ச்சி பெருக்கும் ஊதிய உயர்வு

நாட்டின் முதுகெலும்பு எனப் போற்றப்படும் விவசாயப் பெருங்குடி மக்கள் குறைந்த பட்ச ஊதிய நிர்ணயம் கோரிப் போராடியது இனிதே முடிவடைந்துள்ளது. 20-அம்சத் திட்டத்தின் நோக்கத்திற்கேற்ப தமிழ் நாட்டில் விவசாயத் தொழிலாளர்களின் குறைந்த பட்ச ஊதிய விகிதம் அரசால் உயர்த்தப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக பாதுகாப்பின்றி, நலிவுற்றிருந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு இதனால் நன்மை விளைந்தது. ஆதரவற்ற நிலையில் இருந்த விவசாயத் தொழிலாளர்கள் மீது வேண்டும் போதெல்லாம் ஆதிக்கம் புரிந்து வந்த நிலச்சுவான்தார்களின் செயல்கள், கடந்தகால நிகழ்ச்சிகளாயின. அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்த பட்ச கூலி விகிதங்களை கோரிப் பெறுவதற்கு, அரசு அவர்களுக்கு பக்க பலமாக இருக்கும். விவசாயத் தொழிலாளர்களுக்கு உள்ள உரிமைகளை இனியாரும் மறுக்க முடியாது.

குறைந்தபட்ச ஊதியங்கள் வழங்கப்படுவதை உறுதியாகச் செயல் படுத்தவும், உழவுத் தொழிலாளர் களிடமிருந்து வரும் புகார்களை கவனிக்கவும் சிதம்பரம், ஒரத்தநாடு, தஞ்சாவூர், பாபநாசம், கும்பகோணம், புதுக்கோட்டை, பேராவூரணி ஆகிய இடங்களில் 7 தாசில்தார்களும் மற்றும் தமிழக முழுவதும் 60 ரெவின்யு இன்ஸ்பெக்டர்களும் நியமிக்கப் பட்டுள்ளனர். உழவுத் தொழிலாளர்களிடமிருந்து இது பற்றி 1053 கோரிக்கைகள் வந்தன; அவற்றில் 1014 கோரிக்கைகள் விசாரிக்கப்பட்டு முடிவு எடுக்கப்பட்டன.

மக்களின் துயர் துடைக்க 20-அம்சத்திட்டம் பெரிதும் உதவியுள்ளது. தமிழக விவசாயத் தொழிலாளர்களின் எதிர்காலத்திற்கு இதுவே ஒளி விளக்காக அமைந்துள்ளது.

	பழைய ஊதியம்	புதிய ஊதியம்
1) ஏர், எருதுகளைச் சொந்தமாகவுடைய உழவுத் தொழிலாளர்களுக்கு	நாளொன்றுக்கு ரூ. 5.50	நாளொன்றுக்கு ரூ. 9.00
2) பண்ணையாரின் கலப்பையையும் எருதுகளையும் பயன்படுத்தி ஏர் உழும் தொழிலாளர்களுக்கு	நாளொன்றுக்கு ரூ. 3.00	நாளொன்றுக்கு ரூ. 5.00
3) அறுவடை செய்தல், கதிர் அறுத்தல், வரப்புகளுக்கு அண்டைவெட்டுதல், பிற வேளாண்மைத் தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு	ஆண்களுக்கு நாளொன்றுக்கு ரூ. 3.25 பெண்களுக்கு நாளொன்றுக்கு ரூ. 2.25	நாளொன்றுக்கு ரூ. 5.00
4) நாற்று நடுதல், களையெடுத்தல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு	ஆண்களுக்கு நாளொன்றுக்கு ரூ. 3.00 பெண்களுக்கு நாளொன்றுக்கு ரூ. 1.75	நாளொன்றுக்கு ரூ. 3.50
5) பால்பண்ணைத் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு	ரூ. 1.75 முதல் ரூ. 3.00 வரை	ரூ. 3.50 முதல் ரூ. 5.00 வரை
6) தேனீ வளர்த்தல், கோழிப்பண்ணை அமைத்தல், பண்ணை உற்பத்திப் பொருள்களைக் கொண்டு செல்லுதல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு	ரூ. 3.00	நாளொன்றுக்கு ரூ. 5.00



கீல்னு கேட்கவே வேண்டாம். ஒரு நாள் ஹைகோர்ட் ஜட்ஜாகவே வரலாம்.''

''நான் சாமர்த்தியமுள்ள வக்கீல்னு நீ சொல்றயா?''

''நான் சொல்லல்லே. சொல்லவும் மாட்டேன். நீ எனக்குப் பிள்ளைதான். ஆனால் உன் ஸீனியர் ராமையா சொல்றாரே, அது போறுதா உனக்கு?''

''அவர் என்ன சொன்னார், உங்க பிள்ளை ரமணி கெட்டிக்காரன், பாயிண்ட்லை அலசி அலசிப் பிட்டுப் பிட்டு வைப்பான்னு சொன்னாரா?''

''அவர் சொன்னதையெல்லாம் நான் ஷார்ட் ஹாண்டிலே எழுதிக்கலே. உனக்கு அக்கறை இருந்தாச் சொல்றேன், கேளு.''

''கேட்கிறேன், சொல்லு.''

''ராமையா ரிட்டயராகப் போறாராம். அதுக்கு முன்னாலே தன் பொண் ஹரிணியை ஒருத்தன் கையிலே கொடுத்து, தம்மோட கேஸ்களையும் மாப்பிள்ளைகிட்டே ஒப்படைக்கணும்னு ஆசைப்படறாராம். ரெண்டு மூணு வருஷத்துக்கு அடிக்கடி மதுரைக்கு வந்து, பெரிய கேஸ்களில் மட்டும் மாப்பிள்ளைக்குத் துணையா இருப்பாராம்.''

''இப்படியா சொன்னார்?''

''ஆமாம்.''

''ஷார்ட் ஹாண்ட்லே எடுத்து டைப் பண்ணி அதை வாசிக்கிற மாதிரி இருக்கும்மா.''

''ஏண்டா, இடக்கா?''

''சேச்சே... தமாஷ்... சொல்லு.''

''நீதான் மாப்பிள்ளைன்னு அவா கணக்குப் போட்டுட்டு இங்கே வந்தா. 'எனக்குப் பூரண சம்மதம். ஆனா பிள்ளையையும் ஒரு வார்த்தை கேட்கறேன்'னு சொன்னேன். இப்ப கேட்கறேன், நீ என்ன சொல்லறே?''

ரமணி ஒரு நிமிடம் மௌனம் சாதித்தான்.

''என்னடா, தாரத்தை பிடிக்கற கைதான் தாரை வார்த்துக் கொடுக்கணும்னு நினைக்கிறியா?''

''இல்லேம்மா, ரெண்டு நாளா நீ இப்பச் சொன்னியே, வியாபாரம்னு, அந்த வியாபாரத்தின் லாப நஷ்டங்களைப் பற்றி நினைக்கிறேன்.''

''ஹரிணி, லாவண்யான்னு பேப்பர்லே எழுதி, பெயருக்குக் கீழே லாப நஷ்டங்களை ஒவ்வொண்ணா எழுது. ஒவ்வொண்ணுக்கும் பத்து ரூபாய் மதிப்பும் போடு. அப்புறம் கூட்டிக் கழிச்சுச் சொல்லு.''

''மனசோட கணக்குன்னு ஓர் அயிட்டத்தைப் போட்டா, லாவண்யா பத்து லட்சம் லாபம் காட்டறும்மா. ஹரிணி பத்து லட்சம் நஷ்டம் காட்டறா.''

''லாபத்திலே ஆரம்பிக்கிறது நஷ்டத்திலே முடியறதுண்டு.''

''ஆனா நஷ்டத்திலே ஆரம்பிக்கிறது, லாபமா மாறும்னு சொல்ல முடியாதே.''

''நீ குருட்டு மோகத்திலே அசட்டுப் பிடிவாதமா இருக்கே. இவ்வளவுதான் நான் சொல்லுவேன். அப்புறம் யாரைப் பண்ணிக்கிறதுன்னு நீயே ஒரு முடிவு எடு. அதைச் சீக்கிரம் எடு.''

''லாவண்யா மருமகளா வந்தால் உனக்கு வேதனையா இருக்குமாம்மா?''

''எனக்கு என்ன வேதனை? கல்யாணமானதும் நீயும் அவளும் தனியாகப் போகப் போறேள்... நான் இங்கே தனியா இருக்கப் போறேன்.''

''அப்படியா திட்டம் போட்டிருக்கே?''

''நீ ஹரிணியைப் பண்ணிண்டாலும் அதே திட்டம்தான்.... மாமியார் மருமகள் உறவு என்னிக்கும் நன்னா இருக்கணும்னா தனித் தனியா இருக்கணும், ரமணி!''

சாவித்திரி எழுந்தாள்.

''நான் உள்ளே போறேன். எப்ப சாப்பிட வர்றியோ சொல்லு. சேர்ந்து சாப்பிடலாம். அதுக்கு முன்னாடி கணக்கைப் போடு.''

''சரி, மச்சர்!''


ரமணி சிரித்தான்.

''ராமையாகிட்டே ஆயிரக் கணக்கிலே லா புஸ்தகம் இருக்காம். உன்னோட தாம் பத்திய வியாபாரத்திலே அது பெரிய சொத்து. மறந்து போயிடாதே!''

ரமணி அம்மா போன பிறகு மீண்டும் யோசிக்க ஆரம்பித்தான். அவனுடைய மனத்தை வதைத்துக் கொண்டிருந்த இரு பெண்களில் ஒருத்தி திடீரென்று வந்து அவன் முன் நின்றாள்.

அவள் லாபமா? இல்லே, நஷ்டமா?

(தொடரும்)



நாகபுரி ஸ்ரீ சர்வேசுவர ஆலயம்

நாகபுரி பகவத் பாத சபை ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் அருளாசியுடன் ஸ்ரீ சர்வேசுவர தேவாலயத்தின் முதல் கட்டத்தைப் பூர்த்தி செய்து 1975ல் விநாயகர், முருகன் முதலான பரிவார தெய்வங்களுக்கு மகாகும்பாபிஷேகத்தை விமரிசையாக நடத்தியது நினைவிருக்கலாம். இரண்டாம் கட்டமாக ராஜகோபுரம் எழுப்பி, நவக்கிரகங்களுக்குச் சன்னிதி அமைத்து சிவ-பவானிக்குக் கோவில் எடுத்துக் குடமுழுக்குச் செய்யத் திட்டமிட்டுள்ளது. இவ்வாண்டு மத்தியில் இப்பணி நிறைவேற்றிக் கும்பாபிஷேகம் நடைபெற இருக்கிறது. இதற்குப் பொருள் உதவ விரும்புவோர், ஸ்ரீ சர்வேசுவர தேவாலயக் குழு, பகவத்பாத சபா, ராம்நகர், நாகபுரி-10 என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்.

கல்கத்தா விமான நிலையத்தில் இரண்டு போர்ட்டர்கள் இருக்கிறார்கள். உண்மையில் அவர்கள் போர்ட்டர்கள் அல்ல. விமானம் ஓட்டத் தெரிந்த, லைசென்ஸ் உள்ள இரண்டு பைலட்டுகள்! பைலட் வேலை கிடைக்காததால் போர்ட்டர் வேலை மூலம் மாதம் 500 முதல் 600 ரூபாய் வரையில் சம்பாதிக்கிறார்களாம்.

ஹிந்துஸ்தான் டைம்ஸ் - நிம்மி





பிரமாதம் என்று சொல்லும்படியாயில்லா விட்டாலும், பாத்திரங்களின் மாறுபட்ட குண விசேஷங்களினால் அடுத்து என்ன நிகழப் போகிறது என்று எதிர்பார்க்கத் தூண்டுகிறது. பஞ்சு அருணாசலத்தின் கதை — வசனம்.

தன்னைப் பெண் பார்க்க வரப் போகும் ஆனந்த் குறித்த நேரத்தில் வராததால் அவனைக் குறைத்து மதிப்பிடும் கவிதாவின் பாத்திரம் ஆரம்பத்திலேயே களை கட்டி விடுகிறது. திருமணமானதும், கணவன் வீட்டில் ஒரே 'கெடுபிடி' செய்கிறான் — சாப்பாட்டில் ருசியை விடச் சத்து முக்கியம்; பசியைவிடக் குறித்த நேரத்தில் சாப்பிட வேண்டியது முக்கியம் என்று இப்படி எல்லாவற்றையும் ஒழுங்குமுறைக்குக் கொண்டுவர முயல்கிறான்!

பசித்த நேரத்தில் சாப்பிட்டு, நினைத்த நேரத்தில் தூங்கியெழுந்து பழக்கப்பட்ட ஆனந்துக்கும், கவிதாவுக்கும் எதிலும் ஏட்டிக்குப் போட்டிதான்.

கவிதாவாக வந்து அதியற்புதமாக நடித்திருக்கும் ஸ்ரீவித்யாவுக்குத்தான் இப்படத்தில் நாற்றுக்கு நூறு மார்க். கண்டிப்புக்கும், கருருக்கும் இடையில், காதலுக்கும் கனிவுக்கும் பஞ்சம் நேர்ந்து விடவில்லை. பெரிய விழிகளின் பார்வையினாலேயே தம் பாத்திரத்தை நிலைநிறுத்தி விடுகிறார், ஸ்ரீவித்யா-கவிதா, தன் கணவனைப் பற்றிய சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள வீட்டு வேலைக்காரனையும், ஆபீஸ் நாயுடுவையும் (தேங்காய்) நாசூக்காக விசாரிக்கும் தோரணை ஒன்று போதும்; தான் 'பொஸெஸிவ் டைப்' என்பதைத் தகப்பனாரிடமும், கணவனிடமும் அவனிடம் பழகும் மற்றப் பெண்களிடமும் ஸ்தாபித்துக் கொள்ளுகிற கட்டங்களில் ஸ்ரீவித்யா மிகத் திறமையாக நடித்திருக்கிறார்.

ஜயலட்சுமி ஆபீஸ் ஸ்டெனோ எலிஸபெத்தின் பாத்திரத்தைத் திரையில் வாழ்ந்து காட்டியிருக்கிறார். மனம் விட்டுக் கள்ளங் கபடில்லாமல் ஆனந்திடம் பழகும் போதும், முடிந்து போன தன் காதல் வாழ்க்கையை அவனிடம் கண்ணீர்க் கதையாக விவரித்த போதும், கவிதாவிடம் தனக்கும் ஆனந்துக்கும் உள்ள தூய அன்பை விளக்கிய போதும் ஜயலட்சுமியின் நடிப்பு சபாஷ் போட வைக்கிறது.

கே. விஜயன் தமிழ்ப் பட உலகுக்கு ஒரு நல்ல அப்பா நடிகர்!

பட்டுவின் டைரக்‌ஷனில் அநுபவம் பேசுகிறது.

இசையில் பசை இல்லை; சரப்பும் இல்லை. சண்டைக் காட்சிகள் இல்லாத படம் ஜெய்சங்கரின் நடிப்புக்குக் கைகொடுத்திருக்கிறது.

—காந்தன்

இதுவும் ஒரு வெற்றி தான்!

தரஜா

'அரோகரா புரொடக்ஷன்ஸ்' அதிபர் அண்ணாமலை, ''பத்தாயிரம் ரூபாய் இனாம்!'' என்று பத்திரிகையில் விளம்பரம் வெளியிடத் தயாராக இருந்தார் — அவரது ஐந்தாவது தயாரிப்பான 'ஒரு மசால்வடை ஊசிப் போய்க் கொண்டிருக்கிறது' என்ற சமூகப் படத்தின் உரிமைகளை ஒட்டுமொத்தமாக யாரேனும் விற்றுக் கொடுக்க முன்வரும் பட்சத்தில்.

படத்தை முக்கால்வாசி முடித்து விட்டார் அண்ணாமலை. விநியோகஸ்தர்களை அழைத்துப் படத்தைப் போட்டுக் காட்டினார். விலை பேச வந்தவர்கள் எல்லோருமே வேப்பெண்ணெயை உதட்டில் தடவிக் கொண்டவர்கள் போல் முகத்தைச் சுளித்தார்கள். அதாவது படத்தில் 'மசாலா' இல்லையாம். அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக ஒரு மோட்டார் சைக்கிள் சேஸ், சில இரட்டை அர்த்தம் தொனிக்கும் (வி)ரசமான வசனங்கள், கிராமிய மெட்டில் ஒரு ரேப், ட்யூப் லைட்டை வைத்துக் கொண்டு ஒரு சிலம்பம் — இத்தனையும் சேர்த்தார். அதற்கப்புறம் கூடப் படம் விலை போகவில்லை என்றால் 'இனாம்' விளம்பரம் போடாமல் வேறென்ன செய்வதாம்?

மானேஜரை அழைத்து விளம்பர வாசகத்தை எப்படி அமைக்கலாம் என்று விவாதித்துக் கொண்டிருந்தபோது தரகர் ராஜாராம் உள்ளே நுழைந்தார். அவரிடம் தமது சங்கடத்தைச் சொல்லி அழுதார் அண்ணாமலை.

''நான் சொல்றபடி செய்யுங்க... படம் பறந்தே போயிடும்!'' என்று கைகொடுக்க முன்வந்தார் ராஜாராம்.

''சொல்லுங்க... மேலே ஒரு முப்பதாயிரம் செலவானாலும் கூடப் பரவாயில்லே. படம் விற்றுப் போனால் சரி....''

''சரி, கவனமாகக் கேட்டுக்குங்க'' என்ற ராஜாராம் அடுத்த ஐந்தே நிமிடங்களில் ஓர் அரிய யோசனையை அண்ணாமலையின் மண்டைக்குள் புகுத்திவிட்டு, கைமேல் பலனாக இருநூறு ரூபாய் வாங்கிக் கொண்டு வெளியேறினார்.

அடுத்த ஐந்தாவது நிமிடம் அண்ணாமலையும் மானேஜரும் ஹீரோ ருக்மாங்கதன் வீட்டுக்குக் காரில் புறப்பட்டார்கள்.

ருக்மாங்கதன் தமது அகில உலக ரசிகர் மன்றப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசிவிட்டு அப்போதுதான் சற்றுச் சிரம பரிகாரம் செய்து கொண்டிருந்தார். ருக்மாங்கதன் நடித்த படங்கள் அண்மைக் காலமாகச் சரிவர ஓடவில்லை என்பதை ரசிகமன்றத்தினர் கூறி விட்டுப் போயிருந்ததால் ஹீரோவும் கவலைப் பட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்த நேரத்தில் தான் அண்ணாமலை போய் நின்று, ''அண்ணே! வணக்கம்!'' என்றார்.

''வாங்க... உக்காருங்க... என்ன, நம்ம படம் எப்போ ரிலீசாகுது?'' என்று கேட்டார் ருக்மாங்கதன்.

''அது விஷயமாகத்தான் அண்ணனைப் பார்த்துட்டுப் போகலாம்னு வந்தோம்.



அண்ணன் ஒத்துழைத்தால் அடுத்த மாசமே கூட ரிலீஸ் செய்துடலாம்...''

''உங்களுக்கு இல்லாத ஒத்துழைப்பா?... சொல்லுங்க.''

''அண்ணனுக்கு இன்னும் ஒரு நாலு சீன் சேர்த்திருக்கோம். அதையும் ஷூட் பண்ணி முடிக்க அண்ணன் கால்ஷீட் கிடைச்சா...''

இப்படி யாராவது வந்து கேட்க மாட்டார்களா என்றுதானே ருக்மாங்கதனும் காத்துக் கிடந்தார்?... எனவே உடனடியாகத் தமது காரியதரிசியை வரவழைத்தார். அவர் ஹீரோவுக்கு இல்லாத அலட்டலையும் சேர்த்துத் தாமே அலட்டிக் கொண்டுவிட்டு டைரியைப் புரட்டி நான்கு நாட்கள் 'கால்ஷீட்' போட்டுக் கொடுத்தார்.

''நீங்கதான் என் தெய்வம்!'' என்று அண்ணாமலை ருக்மாங்கதன் காலிலும், மானேஜர், காரியதரிசி காலிலும் விழுந்து கும்பிட்டார்கள்.

'ஒரு மசால்வடை....' படப்பிடிப்பு மீண்டும் தொடங்கியது. முதல் நாளன்று மவுண்ட்ரோட்டில் எட்டு மாடிக் கட்டிடம் ஒன்றின் மேலே இருந்து குதிக்கச் சொன்னார் அண்ணாமலை.

''கீழே வலை பிடிக்கிறாங்களா?'' என்று கேட்டார் ஹீரோ.

''ஓ!''

ஆனால் ருக்மாங்கதன் குதித்த இடத்தில் வலை ஏதும் இல்லை. ருக்மாங்கதனின் மனைவியின் தாலி கெட்டிச் சரட்டில் கோக்கப்பட்டிருந்ததால் அப்போது அந்தப் பக்கமாக வைக்கோலைச் சுமந்து கொண்டு ஒரு லாரி வரவும், ருக்மாங்கதனின் தலை தப்பியது.



அடுத்த நாளும் அவுட்டோர்தான். ஒரு பெரிய குட்டையில் ஹீரோ நீச்சல் அடித்துக் கொண்டு வரவேண்டும் – வாயில் ஒரு காகிதச் சுருளைப் பற்றியபடி. (அதுதான் வில்லனின் ரகசிய தஸ்தாவேஜு). அந்தக் குளத்தில் முதலைகள் உண்டு என்ற சமாசாரத்தை அண்ணாமலை 'சென்ஸார்' செய்து விட்டார். எனவே, தைரியமாகக் குட்டையில் குதித்த ருக்மாங்கதன் மறு விநாடியே, ''ஆ! என் காலை யாரோ இழுக்கிறார்களே!'' என்று அலறினார்.

''அது தண்ணீரின் வேகம்தான்'' என்று கரையிலிருந்தபடியே சமாதானம் சொன்னார் அண்ணாமலை.

ருக்மாங்கதன் சட்டென்று திரும்பிப் பார்க்கவும் 'ஆ'வென்று வாயைப் பிளந்துகொண்டு ஆறு மாதப் பசியுடன் முதலை ஒன்று துரத்திக் கொண்டு வருவதை அறிந்து மளமளவென்று கரையேறி விட்டார்.

மூன்றாவது நாள் ஸ்டுடியோவிலேயே படப்பிடிப்பு. எரிகிற வீட்டுக்குள் நுழைந்து ருக்மாங்கதன் மாடிப் படிகளில் ஏறி, ஒரு கண்ணாடி முன்பு நின்று ஒரு பக்க வசனத்தை ஒப்பித்துவிட்டு வெளியே வரவேண்டும்.

''மாடிப் படி வேண்டுமானால் ஏறுகிறேன். வசனம் பேசுகிற விஷயமெல்லாம் நம்மாலே முடியாது. ஹீரோவுடைய மனச்சாட்சி ஏ. வி. அறையிலே உட்கார்ந்து கொண்டு அந்த வசனத்தைப் பேசுகிற மாதிரி இன்னொரு ஸீன் எடுத்துக்கலாம்!'' என்று மாற்று யோசனை தெரிவித்தார் ருக்மாங்கதன். சரியென்று சம்மதித்தார் அண்ணாமலை.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக ஹீரோ மாடிப் படிகளில் ஓடும் போது அந்த மாடிப்படியே தடதடவென்று சரிந்து விட்டது. ஹீரோவை அஸ்திக் கலசமாகத்தான் அனுப்பி வைக்கப் போகிறோம் என்று டைரக்டர் முதல் லைட்பாய் வரை நினைத்துக் கொண்டிருக்கும் போதே வழக்கமாக ஹீரோவுக்கு 'டூப்' போடுகிற ஆசாமி ஒருவன் பாய்ந்து சென்று தீயிலிருந்து ருக்மாங்கதனைக் காப்பாற்றி விட்டான்.

நான்காவது நாள் ருக்மாங்கதன், ''இன்னியோட நம்ம வேலை முடிஞ்சுடும் இல்லையா?'' என்று அண்ணாமலையிடம் கேட்டார்.

''முடிஞ்சாகணும்... இல்லாவிட்டால் உங்களை யார் விட்டார்கள்?'' என்று சிரிக்காமல் கூறினார் அண்ணாமலை.

அன்றையக் காட்சிப்படி ஹீரோ ஒரு மரத்தில் கட்டுண்டு கிடக்கிறான். அவனுக்கு எதிரில் – வில்லனின் சொற்படி – ஹீரோயின் கண்களைக் கட்டிக் கொண்டு நின்ற வண்ணம் ஹீரோவை நோக்கிக் கத்திகளை வீசி எறிய வேண்டும்....

''சார்! எனக்குக் கையெல்லாம் நடுங்குது. எப்படி சார் கத்தியை வீசறது?... குறி தவறி அண்ணன் மேலே கத்தி பட்டுடுச்சுன்னா என்ன செய்யறது?'' என்று அண்ணாமலையைக் கேட்டாள் கதாநாயகி ஜெயமுனியம்மா.

''அதெல்லாம் ஒண்ணும் படாது. கதையிலே சொல்லியிருக்கிற மாதிரி, கத்தியை

கீக; பலனைப் பற்றிக் கவலைப்படாதே!'' என்று அவனுக்கு உபதேசம் செய்தார் அண்ணாமலை.

படப்பிடிப்பு தொடங்கியது. ஜெய முனியம்மா தன் குல தெய்வமான காட்டேரி நாட்டேரி கன்னிகா அங்காளம்மனை மனத்தில் பிரார்த்தித்த வண்ணம் கத்திகளை வீசத் தொடங்கினாள். ஒன்று... இரண்டு...மூன்று. கத்திகள் 'சதக், சதக்' என்று மரத்தில் பாய்ந்து கொண்டிருந்தன. ஹீரோவுக்குப் பின்னால் நின்றபடி அண்ணாமலை படப்பிடிப்பைப் பார்த்துக் கொண்டிருந்த போது சர்ரென்று பாய்ந்து வந்த ஒரு கத்தி குறி விலகி அண்ணாமலையின் மார்பின் இடது புறத்தில் பாய்ந்து....

'ஐயோ' என்று ஒரு குரல் எழுப்பக் கூட நேரமின்றி அண்ணாமலை தரையில் சாய்ந்தார்.

மூன்று மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள்.

தரகர் ராஜாராம் இன்னொரு பட முதலாளியிடம் பெருமையடித்துக் கொண்டிருந்தார். ''இப்போ, 'ஒரு மசால்வடை....' மூன்று தியேட்டர்லே நாலுவது நாள் ஹவுஸ் புல்லாகச் சக்கைப் போடு போடுதே. அது யாராலே தெரியுமா?... நம்மாலேதான்!...''

''உமக்கும் அந்தப் படத்துக்கும் என்னய்யா சம்பந்தம்?'' என்று கேட்டார் அந்தப் படாதிபர்.

அண்ணாமலை தம் உதவியை நாடியதைக் கூறினார் ராஜாராம். '''படம் நல்லா போகணும்னு ஜனங்களுக்குப் படத்திலே நடிக்கிறவங்க மேல் அநுதாபம் ஏற்பட்டால் போதும்; அதுக்குச் சுலபமான வழி உங்க படத்திலே நடிக்கிற போது ஹீரோ மண்டையைப் போடுகிற மாதிரி ஏதாவது ஏற்பாடு பண்ணுங்க' என்று அவருக்கு நான் ஐடியா கொடுத்தேன். அவரும் அதன்படியே நாலு சீன் சேர்த்தாரு. ஆனா அவரோட துரதிருஷ்டம் பாருங்க, ஹீரோ தப்பிச்சிக்கிட்டாரு... நான் மண்டையைப் போடும்படி ஆயிடுத்து.. எப்படியானாலும் என்ன, ஹீரோவுக்குப் பதிலா, தயாரிப்பாளர் மேலேயே அநுதாபம் ஏற்பட்டுப் போச்சு ஜனங்களுக்கு... அதனாலேதான் படம் இப்படி ஓடுது!... எல்லாம் நம்ம ஐடியாவாலேதான்!''

நரகத்துக்குப் போகிற வழியில் அண்ணாமலையின் ஆவி ஒரு நிமிடம் நின்று ராஜாராமின் கழுத்தை நெரிப்பது போலப் பாவனை செய்து விட்டு அப்பால் போயிற்று!

சகிப்புக்கு ஒரு சம்பத்!

'ரோட் ரோலர்' என்று காலம் சென்ற அண்ணாதுரை அவர்களால், வீராவேசத்துக்குப் பாராட்டப்பட்ட திரு சம்பத், அமைதி நிறைந்த தர்க்கவாதப் பேச்சுக்காகச் 'சொல்லின் செல்வர்' என்ற பொது மக்கள் விருதையும் பிற்காலத்தில் பெற்றார். அவரைப் பற்றி காங்கிரஸ் செயற்குழு காரியதரிசிகளில் ஒருவரான திண்டிவனம் ராமமூர்த்தி கூறுகிறார்:



''1952ம் ஆண்டு என்று நினைக்கிறேன். திண்டிவனத்தில் நடந்த சமுதாய சீர்திருத்த மகாநாட்டில் 'சந்திரமோஹன்' நாடகம் நடந்தது. அதில் சம்பத் அவர்கள் சிவாஜி பாத்திரம் ஏற்று நடித்தார். அப்போதுதான் நான் அவரை முதல் தடவையாகப் பார்த்தேன். பிற்காலத்தில் அவரைப் பல கோணங்களிலிருந்து சிறந்த அரசியல்வாதியாகப் பார்த்துப் பழக நேர்ந்தாலும், அன்று ஒரு நல்ல கலை ரசனையுள்ளவர் என்று எழுந்த என் அபிப்பிராயம் அப்புறம் கலையவே இல்லை.

''சகிப்புத்தன்மைக்கு ஓர் 'உதாரணம். நான், தலைவர் மூப்பனார், திரு சம்பத் ஆகிய மூவரும் குமாரபாளையத்தில் சில நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள ரயிலில் போய்க் கொண்டிருந்தோம். இடையே, ரயில் ஜன்னல் கதவு எதிர்பாராமல் கீழே விழுந்து அவர் கைவிரலைப் பதம் பார்த்துவிட்டது. நாங்கள் பதற்றத்துடன் 'என்ன? என்ன?' என்று விசாரித்தோம். 'ஒன்றுமில்லை!' என்று சொல்லிவிட்டு அரசியல் சம்பாஷணையை விட்ட இடத்தில் தொடர்ந்து பேச ஆரம்பித்தார்.

''ரயில் நிலையத்தில் இறங்கும்போதுதான் கவனித்தோம். அவர் கை விரல்களிலெல்லாம் ஒரே ரத்தம்! நாங்கள் பதறினோம். அவர் கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளவில்லை. எங்களைப் போக வேண்டிய கிராமத்திற்கு வழியனுப்பி விட்டு ஒய்வெடுத்துக் கொள்ளச் சென்றார்.

''அந்த விரல்களில் ஏற்பட்ட காயம் குணமாக ஒரு மாத காலத்துக்கு மேலாயிற்று! அவ்வளவு பலத்த காயத்தை எவ்வளவு எளிதாகத் தாங்கிக் கொண்டார்!

''அவர் கடைசியாகக் கலந்து கொண்ட பொதுக்கூட்டம், அவர் மருத்துவமனையில் சேர்க்கப்படும் தினத்துக்கு முதல் நாள் இரவு சைதாப்பேட்டையில் நடந்தது. கூட்டணியின் சார்பில் அகில இந்திய அ.தி.மு.க ஏற்பாடு செய்திருந்த கூட்டம்.

''அவர் காங்கிரஸ் கமிட்டி காரியாலயத்துக்குத் திரும்பி வந்தபோது அங்கிருந்தவர் ஒருவர் விஷமப் புன்னகையுடன், அவர் தோளிலிருந்த புதுத் துண்டின் கரையை விரித்துப் பார்த்தார். அது கூட்டத்தில் அவருக்குப் போடப்பட்ட துண்டு.

''சம்பத் சிரித்தார். 'தைரியமாகப் பாருங்க! அதிலே கருப்பு சிவப்புக் கரை இல்லை! பிரவுன் கரை! அவங்களுக்கு அரசியல் நாகரிகம் தெரியும்' என்றார்!''

— கோமதி ஸ்வாமிநாதன்

மாயவரம்
பைனான்ஷியல் கார்ப்பரேஷன் லிட்.

பதிவு அலுவலகம் :

13-H, கச்சேரி ரோடு, மாயவரம் - 609001

நீண்டகால சீட்டுக்களின் பலன்கள்

1. ஐம்பது அல்லது நூறு மாதங்கள் என நீண்டகாலத்தில் எளிய தவணைகளில் பணத்தைச் செலுத்தி மொத்தமாக நிறைந்த தொகையைப் பெறுதல் சீட்டு முறைத் திட்டத்தால் ஏற்படும் நன்மையாகும். அது எல்லா நிலையினருக்கும் ஏற்றதாகும்.

2. ஏலம் எடுத்த தொகையை வியாபாரத்தில் முடக்கினால் / முதலீடு செய்தால் பெருமளவு லாபம் கிடைக்கும். அப்படிக் கிடைக்கும் லாபம் சீட்டுக்குரிய எஞ்சிய தவணைகளை எவ்வித சிரமமும் இன்றி எளிதில் கட்டவும் உதவியாக இருக்கும்.

3. சீட்டுக் கேள்விகளுக்கான வரையறை எல்லை இல்லை. எந்தக் கேள்விக்குத் தொகையளிக்கப்படலாம் என்பது முத்திரையிடப்பெற்ற உரிய ஒப்பந்தப் புள்ளிகளைக்கொண்டே முடிவு செய்யப்படுகிறது.

4. ஏலம் எடுத்த, எடுக்காத உறுப்பினர்களில் இடை நிறுத்தம் இல்லாமல் தொடர்ந்து கட்டிய அனைவரும் சீட்டின் பங்கீட்டு ஊதியத்தை அடைகிறார்கள்.

5. பகிர்வு ஊதியத்தில் இருபத்தி நான்கு சத விகிதம் உறுப்பினர்களுக்கென நிர்மாணிக்கப் பெற்றுப் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது.

6. ஏலம் பெறும் வாய்ப்பிழந்த உறுப்பினர்களில் இறுதிவரை தவணைகளை முறையாகச் செலுத்தியவர்கள் சீட்டு நிறைவு பெறும்போது முழுத் தொகையினைப் பெறுகிறார்கள்.

7. எளிய தவணைகளில் நீண்ட காலத்தில் கட்டக்கூடிய ஏலத் தொகையினைப் பெறுவதன் மூலம் திருமணங்கள், பிள்ளைகளின் மேற்படிப்பு வீடு கட்டுதல், பெருமளவில் பழுது பார்த்தல், நெடுங்காலமாகத் தங்கிவிட்ட அடமானங்களை மீட்டுக் கொள்ளுதல் போன்றவற்றை எளிதில் நிறைவேற்றிக் கொள்ளலாம்.

நடைபெறும் சீட்டுக்களின் விவரங்களுக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்

R. கல்யாணசுந்தரம்
மானேஜிங் டைரெக்டர்

தேடித் தேடி அலைந்தேன்!



தமிழ் நாட்டிலிருக்கும் பெண் எழுத்தாளர்களைப் பேட்டி கண்டு எழுதும்படி கட்டளையிட்டார் பத்திரிகாசிரியர்.

மேனகா ராமசாமி வீட்டுக் கதவைத் தட்டினேன். ராமசாமிதான் கதவைத் திறந்தார். வந்த காரியத்தைச் சொன்னேன். விழுந்து விழுந்து உபசரித்தார். பிறகு பின்வரும் 'சிதம்பர ரகசிய'த்தை வெளியிட்டார். மேனகா பெயரில் கதை கட்டுரைகள் எழுதுவது ராமசாமிதானாம்.

''எதற்காக மனைவி பெயருக்குப் பின்னால் ஒளிந்து கொண்டிருக்கிறீர்கள்? சொந்தப் பெயரில் எழுதினால் என்ன?''

''ஓ! அதுவா? நான் சர்க்காரில் எஞ்ஜினீராகப் பணியாற்றுகிறேன். சொந்தப் பெயரில் எழுதினால் தொந்தரவு. வேறு புனை பெயர்களிலும் அடியேன் எழுதுவதுண்டு. மஞ்சுளா மாடசாமி, குந்தளா குலோத்துங்கன் எல்லாம் யாரென்று நினைக்கிறீர்கள்? சாக்ஷாத் நான்தான்!'' என்றவர் பிரசுரிக்கக் கொடுத்த படம் அவர் மனைவி யுவதியாக இருந்தபோது எடுத்தது.

ஞானவி மதுரநாயகம் வீட்டிலும் வரவேற்பு பிரமாதமாக இருந்தது. ஞானவி அம்மாளேதான் வரவேற்றார்கள். முதிர்ந்த பருவம். வெள்ளை முடி. வெள்ளி பிரேம் மூக்குக் கண்ணாடி. பார்த்த உடனே எனக்கு அவரிடம் ஒரு மதிப்புத் தோன்றியது. பேட்டியைத் தொடங்கினேன். அம்மாள் என் பேச்சைக் கத்திரித்தார்கள்.

''அவர் ஆபீசுக்குப் போயிருக்கிறார். வரட்டும்.''

''உங்கள் கதைகளைப் பற்றி நீங்களே சொல்லலாமே!''

''என் கதைகளா? இலக்கியத்துக்கும் எனக்கும் காத தூரம். அந்தப் பைத்தியமெல்லாம் அவருக்குத்தான். எங்கே 'இன்கம் டாக்ஸ்' பேர்வழிகள் பிடித்துவிடுவார்களோ என்று அஞ்சி என் பெயரில் எழுதுகிறார்.''

'பீடு வேகம்' எழுத்தாளரான ஊர்மிளா [illegible] பார்க்கச் சென்ற இடத்தில் ஒரு '[illegible]' தான் தென்பட்டார். கால்களை மேஜை மீது தூக்கிப் போட்டுக் கொண்டு அலட்சியமாகப் புகை பிடித்துக் கொண்டிருந்தவர் என்னைக் கண்டதும், ''என்னவே, எங்கே வந்தீர்?'' என்று நெல்லைத் தமிழில் வினவினார்.

''ஊர்மிளா அம்மாளைப் பார்க்கணும்... அதாவது உங்கள் மனைவியை.''

''மனைவியா? அந்தத் தொல்லையெல்லாம் எனக்குக் கிடையாதுவே... நான் கட்டைப் பிரம்மச்சாரி.''

''ஊர்மிளா என்ற பெயரில் 'செக்ஸ்' கதைகள் எழுதுவது?''

''நான்தான்! இன்னுமா புரியலே? எதற்காகப் பெண் பெயரில் எழுதுகிறேன் என்று தானே கேட்கப் போகிறீர்? அதையும் சொல்லித் தொலைத்து விடுகிறேன். அந்தரங்கமான விஷயங்களை வாசகர்களுடன் ஒரு பெண் அப்பட்டமாகப் பகிர்ந்து கொண்டால் அதற்கு 'மவுசு' அதிகம் என்றார் பத்திரிகாசிரியர். உடனே சொக்கலிங்கமான நான் ஊர்மிளாவாக மாறிவிட்டேன். பேட்டி தருவதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் புகைப்படம் மட்டும் கேட்காதீர்.''

கோவிந்தம்மா நடராஜன் வீட்டில் தான் [illegible]. தயங்கவோ இல்லை. தோட்டத்தில் நின்



1925-ல் ஆரம்பிக்கப்பட்ட சிந்தாமணி என்ற பத்திரிகைதான் பெண்களுக்காக வந்த முதல் தமிழ் பத்திரிகை. பாலம்மாள் என்பவர் இதன் ஆசிரியராக இருந்தார்.

'பெமினா'— சரோஜா ராமச்சந்திரன்



திருந்தவர் நடராஜன் என்று தெரிந்ததும், பேட்டியைத் தொடங்கி விட்டேன்.

''ஐயையோ என்ன இது? நான் கதை எழுதும் குற்றம் பண்ணவில்லையே! என்னை ஏன் வதைக்கிறீர்?'' என்று அலறினார் அவர்.

நானா ஏமாந்து போவேன்?

''ஓய், எனக்கு எல்லாம் தெரியும். சர்க்கார் வேலையில் இருக்கும் நீர் மேலதிகாரிக்குப் பயந்து கொண்டு இரகசியமாக மனைவியின் பெயரில் எழுதுகிறீர். அல்லது 'இன்கம் டாக்ஸ்'காரனை டபாய்க்கப் பெண் வேஷம் போடுகிறீர்; அல்லது கட்டைப் பிரம்மசாரியான நீர் கதையில் கவர்ச்சி அம்சம் அதிகமாவதற்காக....'' என்று மேலே அடுக்கிக்கொண்டு போனேன்.

''யாரைப் பார்த்து ஐயா கட்டைப் பிரம்மச்சாரி என்று சொல்கிறீர், நான் குத்துக் கல்லாட்டம் பக்கத்தில் நிற்கையில்?'' என்ற ஒரு சிம்மக் குரல் ஒலித்தது. இருநூறு பவுன்டு பெண்மணி ஒருவர் பக்கத்தில் நின்று கொண்டிருந்தார்.

''நான்தான் கோவிந்தம்மா. நான்தான் அத்தனை கதைகளும் எழுதறேன். என் கணவருக்குத் தமிழ் எழுதவே தெரியாது!'' என்றார் அவர்.

ஒரு வழியாக பெண் எழுத்தாளரைக் கண்டுபிடித்து விட்டதில் மகிழ்ந்தேன்.

- விஜயா பாலகிருஷ்ணன்

பி. கு.: இது விஜயா பாலகிருஷ்ணன் எழுதின கதையா, இல்லை, அவர் கணவர் எழுதின கதையா என்று ஏன் மூளையை குழப்பிக்கொள்கிறீர்? யார் எழுதியிருந்தாலும் பணம் உமக்கு வரப்போவதில்லை.

உணவு வேளையின்போது பந்தியில் நிறைய ஈக்கள் படை எடுக்கின்றனவா? ஒரு கொத்து கறிவேப்பிலையைச் சிறிது கசக்கிப் பந்தியின் நடுவே வைத்து விடுங்கள். ஓர் ஈகூடத் தலைகாட்டாது!

- ராஜேஸ்வரி குப்புசாமி



பத்ரி டயரியில் ஒரு பக்கம்!

நல்ல குளிர். 'வெட வெட' என நடுக்கும் குளிர். ஒரு வழியாக 'ஜோஷிமட்' வந்து சேர்ந்துவிட்டோம்.

இதுவரை பன்னிரண்டு நாட்களாக எங்களுடன் யாத்திரை செய்த 'கண்டிவாலாக்கள்' (வழி காட்டிகள்) எல்லோருக்கும் பணம் கொடுத்து அனுப்பி வைத்தோம்.

அவர்கள் மலைப் பிரதேசத்து ஜனங்கள். நேபாளிகளும் கட்வாலிகளுமான அக் 'கண்டிவாலா'க்கள் இப்படி வருஷத்துக்கு ஆறு மாதம் வேலை செய்து தங்கள் ஊருக்குப் போய்க் குடும்பம் நடத்துவார்கள். அவர்கள் பரம சாதுக்கள். பொய், வஞ்சனை, திருட்டு என்பது என்ன என்பதே தெரியாதவர்கள். அவர்கள் எங்கள் சாமான்களைச் சுமந்தார்களே தவிர, மனத்தால்கூட எங்கள் பொருட்களுக்கு ஆசைப்படவில்லை. பயங்கரமான பாதைகளில், பள்ளம் மேடுகளில் எல்லாம் நம்மை ''மாஜீ!'' என்று அருமையாக விளித்து, ஒரு தாய் தன் குழந்தையை கைப் பிடித்து அழைத்துச் செல்வது போல ஏற்றங்களிலும் இறக்கங்களிலும் ரொம்பவும் ஜாக்கிரதையாக அழைத்துச் சென்றார்கள். ''பயப்படாதேம்மா! 'பத்ரி விசால் பாபா' பேரைச் சொல்லுங்கள் அம்மா!'' என்று நமக்குத் தைரியம் சொல்லுவார்கள். பட்டினி, பசி, குளிர், வெயில், மழை — இவ்வளவு கஷ்டங்களிலும் கண்ணியமுடன் நடந்துகொள்வார்கள். இவ்வளவு நல்ல ஜனங்கள் காடாறு மாதம் என்பது போல ஆறு மாதம் இவ்வாறு உழைத்து மறு ஆறு மாதம் கட்வாலில் குடும்பம் நடத்துகிறார்கள். இவர்களுக்கு நாம் எவ்வளவு கொடுத்தாலும் தகும். நாம் கொடுப்பதை முகமலர்ச்சியுடன் பெற்றுக் கொண்டு 'பாபுஜீ', 'மாதாஜீ' என்று பணிவுடன் வணங்கிக் கால் தொட்டுக் கும்பிட்டு விட்டுச் சென்றனர். உண்மையில் நாம்தான் அவர்களைக் கால் தொட்டுக் கும்பிட வேண்டும். இந்தப் பன்னிரண்டு நாட்களாக நம் உயிர், உடமை எல்லாவற்றையும் அவர்கள் கையில் அல்லவா ஒப்படைத்திருந்தோம்... இவர்களை என்றும் மறக்க முடியாது.''

—சாந்திமதி



சேரமான் காதலி

கண்ணதாசன்

அத்தியாயம் 15

அந்தக் கிளியும் வருகிறது!

தொழுகை மண்டபத்தில் கூடிய மகமதியர்களுக்குள் கடும் வாக்குவாதம் நடந்தது.

ஒவ்வொருவரும் தீவிர சிந்தனையில் ஈடுபட்டார்கள்.

தங்கள் மகம்மதியப் பெண்ணைச் சைவ மன்னர் காதலிப்பதை அவர்களில் பலர் கடுமையாக எதிர்த்தார்கள். 'இது கலவரத்துக்கு வித்தூன்றும் நடவடிக்கை' என்றார்கள்.

ஆனால் இருந்தவர்களிலேயே வயதான ஒரு முதியவர், எல்லோரையும் அமைதிப்படுத்தினார். ''இரண்டு உள்ளங்கள் பாலும் நீரும் கலந்தது போல் கலந்த பிற்பாடு அவர்களைப் பிரிப்பது சாதாரணமன்று. பிரிக்கின்ற முயற்சியில் ஈடுபடுவதை விட இரண்டு பேரும் இணைவதானால், நம்முடைய 'நிபந்தனை என்ன?' என்பதை முதலில் முடிவு கட்டுங்கள்'' என்றார் அவர்.

''நிபந்தனை என்ன? என்னதான் மன்னராக இருந்தாலும் அவருக்காகச் சலீமா மதம் மாறக் கூடாது'' என்றான் ஓர் இளைஞன்.

''மாறுவதானால் மன்னரே மதம் மாறவேண்டும்'' என்றான் மற்றொருவன்.

''திருமணம் பகிரங்கமாக நடைபெற வேண்டும்'' என்றார்கள் பலர்.

''பட்டத்து ராணியாகச் சலீமாவை அங்கீகரிக்க வேண்டும்'' என்றார்கள் சிலர்.

— இந்த விவாதம் உடனே யூதர் தெருவுக்குப் பரவிற்று; அவர்களும் தங்கள் ஒற்றுமையைக் காட்டத் தொடங்கினார்கள்.

திருவஞ்சைக் களத்திலேயே மிகப் பிரும்மாண்டமான மண்டபம் யூதர்களின் மண்டபம்தான். ஏறக்குறைய யூத ஜாதி முழுவதும் அங்கே கூடி விட்டது. ஆண், பெண், குழந்தைகள் அனைத்தும் அதில் பங்கு கொண்டனர்.

'மன்னர் மற்றொரு மணம் முடிப்பதாக இருந்தால், அவர் ஏற்கனவே கைவிட்ட யூஜியானாவையே அங்கீகரிக்க வேண்டும்' என்றும், 'அவளையும் பட்டத்து ராணியாக்க வேண்டும்' என்றும் 'யூஜியானாவின் பெண் குழந்தையை வாரிசாக்க வேண்டும்' என்றும் அவர்கள் முடிவு கட்டினார்கள்.

''சம்பந்தப்பட்டவர்களை இஸ்ரவேலில் வைத்துவிட்டு, இங்கே நாம் அவர்களுக்காகப் பரிந்துரையாடுவதில் அர்த்தம் என்ன?'' என்று கேட்டார் ஒருவர்.

''களத்திலே யூஜியானா இருந்தால்தான் காயை நகர்த்துவது சுலபம்'' என்றார் ஒரு பெரியவர்.

''அப்படியென்றால் இன்றே ஒரு கப்பலில் இருவரை அனுப்பி யூஜியானாவையும், அவள் தந்தை யோகோவாவையும் அழைத்து வரச் செய்வோம்'' என்றார் யூதர்களின் தலைவர்.

இஸ்ரவேலுக்குச் செல்வதற்காக அவர்கள் தேர்ந்தெடுத்த இருவர் ஜேகோபுவும், ஆஸ்வாவும். அவர்கள் இருவரும் யூத ஜாதியில் தீவிரவாதிகள். யூதர்கள் சம்பந்தப்பட்ட விழாக்கள் விருந்துகள் அனைத்தையும் அவர்களே கவனிப்பது வழக்கம்.

அன்றைய இரவே அவர்களது கப்பல் இஸ்ரவேலை நோக்கிப் புறப்பட்டது.

வஞ்சியில் நடக்கும் எந்தக் காரியத்தையும் கேளாதவர்களாய், இப்போது அழகான தனி மாளிகையில் குடியிருந்தார்கள் யூஜியானாவும், யோகோவாவும். கடல் வணிகர்கள் பலர் சேர நாட்டுக்குச் சென்று திரும்பி வரும்போதெல்லாம் அவர்களைப் பார்த்துச் செய்திகள் சொல்ல வருவது வழக்கம். ஆனால் எந்தச் செய்தியையும் காதிலே போட்டுக் கொள்ள அவர்கள் தயாராக இல்லை.

ஈன்றெடுத்த பெண் மகவின் இளம் முகத்தில் மன்னரைப் பார்த்தபடி வெளியுலகை மறந்திருந்தான் யூஜியானா. அலங்காரங்களைத் துறந்து விட்ட ஓர் இளம் விதவையின் நிலை; மரணத்தை

எப்போதும் தரிசிக்கவும் சிந்தமாகி விட்ட வைராக்கிய நிலை.

பூஞ்சிட்டுக் கன்னங்களில் பால் பொங்கி வழிய, புன்னகை செய்யும் பெண் மகவைப் பார்த்து அவள் பேசுவாள்: ''என் இனிய மகளே! கனவிலே நடந்த காதலில் கையிலே கிடைத்து விட்ட ஒரு பரிசுப் பொருள் நீ. என் கனவு கலைந்து போய் விட்டது. பரிசுப் பொருள் பாழாகாமல் பார்த்துக் கொள்வதே இனி என் கடமை. ஜெருசலத்து மணியோசையில் உன் மழலையையும் உன் மழலையில் தேவதையின் குரலோசையும் நான் கேட்கிறேன். உனக்கும் தேவனுக்குமே என் இரண்டு காதுகள். உன்னையும், அவனையும் காணவே என் இரண்டு கண்கள். உன்னை அணைக்கவும் அவனை வணங்கவுமே என் கைகள். உனக்காக வாழவும், அவனிடம் போகவுமே என் உயிர். என் ஆத்ம ராகமே! என்னைத் தனக்குள் அடக்கிக் கொண்டு விட்ட சின்னஞ்சிறு உலகமே! அந்த ஒரு சில இரவுகளின் இன்ப நினைவுகளைப் பாட்டாகப் பாடி உன்னைத் தூங்க வைக்கிறேன்.''

— யூஜியானு பாடுவாள்; குழந்தை தூங்கும்; அதன் பிறகு அவள் தூங்குவாள்; மகள் தூங்கியதைப் பார்த்த பிறகே யோகோவா தூங்குவார்.

அந்தத் தூக்கத்தைக் கலைக்கும் கப்பல், இஸ்ரவேலை ஒட்டியுள்ள கால்வாயில் தரை தட்டியது.

ஜேகோபுவும், ஆஸ்வாவும் கீழே இறங்கி, வழியில் சந்தித்த பழைய நண்பர்களின் முதுகிலெல்லாம் தட்டிச் சென்று யூஜியானுவின் புதிய மாளிகையைத் தேடிப் பிடித்தார்கள்.

சிறிய அரண்மனை போன்ற அந்த மாளிகையின் முன் பகுதியில் இரண்டு கேரளப் பெண்கள் உலாவிக் கொண்டிருந்தார்கள்; அவர்கள் யூஜியானுவோடு வந்து அங்கேயே தங்கி விட்டவர்கள்.



ஜேகோபுவுக்கு அவர்களில் ஒருத்தியைத் தெரியும். யூதர்களின் விருந்துகளுக்கெல்லாம் அவள் வருவாள். யூதர்களின் வார்த்தைகளைத் தட்டுத் தடுமாறிப் பேசுவாள்.

அவளைப் பார்த்ததும் 'ஹே' என்று குரல் கொடுத்தான் ஜேகோபு. அவள் ஓடி வந்த வேகத்திலேயே கேரளத்தைப் பற்றிக் கேள்விமேல் கேள்வி கேட்க ஆரம்பித்தாள்.

அவனோ, ''அதெல்லாம் பிறகு சொல்கிறேன்; யூஜியானு எங்கே?'' என்று கேட்டான்.

அவள் மேல் மாடத்தைக் கைகாட்டினாள். ஜேகோபுவும், ஆஸ்வாவும் வெகு வேகமாக வீட்டின் கீழ் கட்டுக்குள் நுழைந்தபோது, ஊஞ்சலில் அமர்ந்தபடி காய்ந்த சில இலைகளை உள்ளங்கையில் வைத்துப் பொடி செய்து கொண்டிருந்தார் யோகோவா. ஜேகோபுவும், ஆஸ்வாவும் ஓடி வந்து அவரைக் கட்டிக் கொண்டார்கள்.

அப்போது தான் அவர்களை நிமிர்ந்து பார்த்தார் யோகோவா.

''என்ன தாத்தா? என்ன பச்சிலை?'' என்று கேட்டான், ஜேகோபு.

''குழந்தைக்கு மருந்து தயாரிக்கிறேன்! ஆமாம், நீங்கள் எப்போது வந்தீர்கள்?'' என்று கேட்டார் யோகோவா.



''வந்து கொண்டேயிருக்கிறோம், தாத்தா!'' என்றான் ஆல்வா.

''நல்ல சேதி கொண்டு வந்திருக்கிறோம்!'' என்றான் ஜேகோபு.

''கேரளத்திலிருந்து எந்தச் சேதியும் எங்களுக்கு வேண்டாம்'' என்றார் யோகோவா.

''நீங்கள் 'வேண்டாம்' என்று சொன்னாலும் நமது சமூகம் விடுவதாக இல்லை'' என்றான் ஆல்வா.

''நமது சமூகத்திலிருந்துதான் நாங்கள் பிரிந்து நின்று தவறு செய்து விட்டோமே! அது இனி என்ன செய்யப் போகிறது?'' என்றார் யோகோவா.

''செய்த தவற்றுக்குப் பரிகாரம் தேடப் போகிறது. கேரளத்திலே யூத ஜாதி ஓர் அங்கமாகப் போகிறது. இஸ்ரவேலில் வாழ்ந்து கொண்டிருக்கும் யூதர்களுக்குக் கேரள தேசமும் உறவுள்ள நாடாகப் போகிறது'' என்றான். ஜேகோபு.

''எனக்குப் புரியவில்லையே அப்பா!'' என்றார் யோகோவா.

''மன்னவர் மூன்றும் சேரமான்பெருமான் இப்போது ஒரு மகம்மதியப் பெண்ணைக் காதலிக்கிறார். அவளை மணமகளாக்கி, மகாராணியாக்கவும் திட்டமிட்டிருக்கிறார். ஆனால் நாங்கள் அப்படி விட்டு விடுவோமா? யூத ரத்தத்தின் ஒவ்



புது மனைவி: 'சமைத்துப் பார்' என்ற புத்தகத்தைப் பார்த்துச் சமைத்தேன். எப்படி இருக்கு?
கணவன்: பார்க்க நன்னு இருக்கு. சாப்பிடச் சகிக்கலை. அடுத்த தடவை 'சமைத்தும் சாப்பிடு' என்ற புத்தகத்தைப் பார்த்துச் சமை. சாப்பிடலாம்.
-லலிதா செல்லப்பா

வோர் அணுவும் 'பேரம் பேசும்' அணு வல்லவா? பேரம் முடியாமல் அந்த அணு அழிவதில்லையே?'' என்றான் ஆஸ்வா.

''நீங்கள் நடத்துகிற பேரத்தில் நாங்கள் யார்?'' என்று கேட்டார் யோகோவா.

''நீங்கள் தங்கம். யூஜியானா வைரம்; அவள் குழந்தை மரகதம்! தாத்தா! நீங்கள் நவமணி வியாபாரியல்லவா? —இந்த மும்மணிகளை வைத்தே எங்கள் பேரம்'' என்றான் ஜேகோபு.

''இந்தச் சிக்கலில் எங்களை இழுக்காதீர்கள்'' என்று சொன்னபடியே மனஞ் சலித்து விட்டு எழுந்தார் யோகோவா.

''அப்பா!'' என்று இனிய குரல் கேட்டது.

அவரும், வந்த இருவரும் தலை நிமிர்ந்து பார்த்தார்கள்.

மாடிப்படியின் மேல் தளத்தில், நின்று கொண்டிருந்தாள் யூஜியானா.

யோகோவாவை முந்திக் கொண்டு ஜேகோபுவும், ஆஸ்வாவும் மாடிப் படிக்கட்டுகளில் ஓடினார்கள்.

''வணக்கம் மகாராணி!'' என்றான் ஜேகோபு.

''என்ன சின்ன அண்ணா! எப்போது வந்தீர்கள்?'' என்று கேட்டாள் யூஜியானா.

ஜேகோபுவை அவள் யூத மொழியில் 'சின்ன அண்ணா' என்றுதான் அழைப்பாள்.

''கப்பலை விட்டு இறங்கினோம். அப்படியே வந்து விட்டோம் மகாராணி!'' என்றான் ஆஸ்வா.

''மகாராணியா?'' என்று அலட்சியமாகச் சிரித்த யூஜியானா, ''அந்த மாலை நேரக் கனவு கலைந்து வருஷங்கள் மூன்றுக்கு மேல் ஆகி விட்டதே! தெரியாதா அண்ணா உனக்கு?'' என்றபடி படிக்கட்டுகளில் இறங்கினாள்.

ஜேகோபுவும், ஆஸ்வாவும் பின்னால் இறங்கிக் கொண்டே, ''கலைந்து போன கனவு மூன்று வருஷங்கள் கழித்துப் பலிக்கப் போகிறதே. என்ன செய்ய?'' என்றார்கள்.

''அந்தக் கனவு பலிப்பதை நான் இப்போது விரும்பவில்லையே?'' என்றாள் யூஜியானா.

இப்போது எல்லோரும் கீழ் தளத்தில் வந்து நின்றார்கள்.

''யூத ஜாதி விரும்புகிறது. 'பிற தேசத்துப் பெண் ஒருத்தியை மன்னர் மணப்பதாக இருந்தால், யூஜியானாவையே மணக்க வேண்டும்' என்று யூத சமயம் முடிவு செய்து விட்டது; தெரியுமா உனக்கு? மன்னவருக்கு ஒரு புதிய காதலி. மகம்மதியக் கிளி, அரேபியப் பறவை. உன்னிடம் கொண்டிருந்த காதலை விட ஒரு படி அதிக மயக்கம் மன்னருக்கு. அதற்காக உன்னை அவர் வெறுத்துவிடவில்லை. உன்னைத் தனியாக வைத்திருந்தார். அவளை மகாராணி ஆக்கவே போகிறார். ஆனால் நாங்கள் விடுவோமா? யூத தர்மப்படியோ, சைவ தர்மப்படியோ தனக்குப் பிறந்த குழந்தைக்கு ஒருவர் பதில் சொல்லியே ஆக வேண்டும். அவர் மன்னராயினும், மற்ற மனிதராயினும் ஒன்றே'' என்றான் ஜேகோபு.

'தனக்காக யூதர்கள் வாதாடுகிறார்கள் என்பதையோ, தனக்கு ஒரு வாழ்வைத் தேடுகிறார்கள் என்பதையோ அவள் இப்போது கவனிக்கவில்லை. 'இன்னொரு காதலி', 'இன்னொரு காதலி' என்ற வார்த்தையே அவள் நெஞ்சை இடித்தது.

ஜேகோபு ஒரு புறமும், ஆஸ்வா ஒரு புறமும் தர்க்க வாத, தத்துவங்களில் ஈடுபட்டார்கள். கரையாத யோகோவாவையும் கரைத்தார்கள்.

''இன்னொருத்தியை ஏற்றுக் கொள்ளும் கேரள நாடு உன்னை ஏற்றுக்கொள்ளாதா?'' என்று யூஜியானாவைக் கேட்டார்கள்.

''எந்தக் காரணத்துக்காக மன்னர் உன்னை இஸ்ரவேலுக்கு அனுப்பினாரோ, அந்தக் காரணம் இப்போது அறுபட்டுப் போய்விட்டது'' என்றார்கள்.

''கணவனைச் சேர்ந்து, மறுபடியும் வாழ்ந்து, எங்கள் கௌரவத்தையும், வாணிபத்தையும் காப்பாற்று'' என்று கெஞ்சினார்கள்.

நகராத கல்லாக இருந்த யூஜியானாவின் மனமும் யோகோவாவின் மனமும் மெதுவாக நகர்ந்தன.

மறுநாள் இஸ்ரவேலில் இருந்து சேர நாட்டை நோக்கி ஒரு கப்பல் நகர்ந்தது.

(தொடரும்)



Dr. S. K.

வாழ்க்கையில் வெற்றி பெறுங்கள்

தீய பழக்கங்களால் உடல் பலஹீனம் அடைந்து ரத்தக் குறைவு, சோர்வு, தலைவலி, உஷ்ணம், சோம்பல் கைகால் அசதி, உடல் மெலிவு, தூக்கக் குறைவு, ஆயாசம், களைப்பு, பீதி, வெட்கம், பலம், வெறுப்பு, தளர்ச்சி, வாழ்க்கையில் வெறுப்பு உண்டாகி குடும்ப வாழ்க்கையில் மன வேதனையும், அதிருப்தியும், சஞ்சலமும் நிம்மதியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். இப்படிப் பட்டவர்கள் நமது மருந்தை உபயோகிக்கும்போதே மேற்படி கஷ்டங்கள் நீங்கி மகிழ்ச்சிகரமான பலனைப் பெறலாம். வி. பி. பி.யில் பெற உடன் எழுதவும். போஸ்டேஜ் இலவசம். ஒரு மாத சிகிச்சை மருந்துகள் — மிக உயர்தரம் ரூ. 90, தங்கபஸ்பம் — சிட்டுக்குருவி லேகியம் 90 வேளை ரூ. 180, 60 வேளை ரூ. 120, 30 ,வேளை ரூ. 60.

கிளை : 41, நைனியப்பன் தெரு, மண்ணடி., சென்னை - 1 போன் : 21448

வைத்தியத் திலகம், வைத்திய ராஜ்

டாக்டர் S. காளிமுத்து, R. M. P. (IND) V. V. C. A., M. I. H.

பழனி சித்தர் வைத்தியசாலை (Regd.) பழனி-624601

பழைய தாராபுரம் ரோடு, பழனி. போன் : 316, 316A, 420. தந்தி : "சித்தர்"

ஸ்தாபிதம்: 1948

லலிதா பார்மஸி

போன் : 123

கும்பகோணம்

தமிழ்நாடு இந்திய வைத்திய மத்திய போர்டாரால் அங்கீகரிக்கப்பட்டது மத்திய அரசால் சட்டத் தொகைக்கு அனுமதியளிக்கப் பட்டுள்ளது.

எமது விசேஷத் தயாரிப்புக்கள் :

மேனி சதை, சரீர எடையை குறைக்க

1. இருப்திக்ஸக்வாதம்
2. இருபலாக்வாதம்
3. லொஜது
4. த்ரிபலாவடி

கீழ்க்கண்ட எமது பிராஞ்சுகளிலும் கிடைக்கும்

1. லலிதா பார்மஸி, 1989, மேல வீதி, தஞ்சாவூர் — போன் : 549
2. லலிதா பார்மஸி, 52, மஹாதானத் தெரு, மாயூரம் — போன் : 379
3. லலிதா பார்மஸி, 81, வடக்கு ரத வீதி, சிதம்பரம் — போன் : 472
4. லலிதா பார்மஸி, 6, ரெங்கநாதன் தெரு, தியாகராயநகர், சென்னை-600 017 — போன் : 441454-
5. லலிதா பார்மஸி, 60-ஐ, கச்சேரி ரோடு, மயிலாப்பூர், சென்னை-600 004 — போன் : 73007

மற்றும் சிறந்த ஆயுர்வேத மருந்துகள் யாவும் கிடைக்கும்

கிட்டத்தட்ட முப்பது வருடங்களுக்கு மேல் இத்தாலியில் இறக்குமதி — ஏற்றுமதி வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த **திரு M. V. ராஜன்** அவர்கள் சிறிது காலம் நோய்வாய்ப் பட்டிருந்து மிலானோவில் அவரது இல்லத்தில் 24-1-77 அன்று காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

Inserted by his sorrowing relatives.





ஹிந்தி திணிப்பா, ஊக்க போனஸா?

வட்ட மேஜை!



☐ 'சேஷசாயி தொழில்நுட்பக் கல்லூரி'யைப் பற்றிய விசேஷத் தொகுப்பில் அதன் இன்றைய முதல்வரும் அதன் வளர்ச்சிக்காகச் சிறப்பாகப் பணியாற்றிவருபவருமான திரு அனந்த நரசிம்மாச்சார் அவர்களைக் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

திருச்சி-16
5–2–77 ஆர். கிருஷ்ணமூர்த்தி

☐ 20-2-77 கல்கியில் ''உலக நீந்துபேரவை'' என்ற தலைப்புடன் கூடிய செய்தியில் ஒரு திருத்தம்: நடக்கப் போகும் மகாநாடு அகில உலக சர்வ சமய கலாசார தத்துவ மகாநாடு. தவிர்க்க முடியாத காரணங்களினால் இம்மகாநாடு மார்ச்சு 30-ந் தேதி முதல் ஆரம்பித்து நடைபெறும். இம்மகாநாட்டுக்குப் பொருளுதவி செய்ய விரும்புவோர், ப. சுந்தரம், ஸ்ரீவேங்கடம், பிளாட் நெ. 42, சாத்தமங்கலம், மதுரை-625020 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

மதுரை
17–2–77 வீ. சுந்தரம்

☐ திரு. சௌந்திரராஜன் அறுவையாக விளங்கிக் கொட்டாவி விடச் செய்த 'கமலி' என்ற டாக்குமெண்டரி படத்தைப் பற்றி வயிற்றெரிச்சல் பட்டிருந்தார். இதோ அதற்கு நெய் ஊற்றுகிறேன். அந்தப் படத்தைப் பற்றிய உங்கள் அபிப்பிராயங்களையும் (!) அது உங்கள் மனத்தில் ஏற்படுத்தும் எண்ணங்களையும் (?) எழுதி அனுப்பினால் தேர்ந்தெடுக்கப்படும் முதல் கட்டுரைக்கு ரூ. 200-ம், இரண்டாவது கட்டுரைக்கு ரூ. 100-ம் பரிசு உண்டாம். இப்போது புரிகிறதா ஏன் இந்தியில் மட்டும் காண்பித்தார்கள் என்று? இந்தி திணிப்பா, இல்லை இந்தி தெரிந்தவர்களுக்கான ஊக்க போனஸா?

கோவை
16–2–77 சிவ. சிதம்பரம்

☐ ''6 9 7 21 18 5 19 1 14 4
23 15 18 4 19 6 9 14 5''

18. 14. 18 1 10 1 14
20 21 20 9 3 15 18 9 14

☐ 9-1-77 'கல்கி' இதழில் வட்டமேஜைப் பகுதியில் 'ஹோட்டல்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டது. ஆனால், இட்டிலி, காப்பியைத் தவிர எல்லாப் பண்டங்களுக்கும் விலையை ஏற்றி விட்டார்கள். அதற்கு வரி வேறே!'' என்று ஓர் அன்பர் குறிப்பிட்டிருந்தார்.

ஹோட்டல்களின் முக்கியமான பண்டங்களுக்கு அரசால் விலை, எடை நிர்ணயம் செய்யப்பட்டது. இந்த விலைக்குப் பண்டங்களை விற்பனை செய்யக் கட்டுப்படி ஆகவில்லை என்றும், விலையைக் கூட்ட வேண்டும் என்றும் ஹோட்டல் உரிமையாளர்களால் அரசுக்குக் கோரிக்கை விடப்பட்டது. அந்தக் கோரிக்கையை ஏற்ற அரசு உடனே விலையைக் கூட்ட உத்தரவிடவில்லை. அரசு உயர் அதிகாரிகள் சிலரையும், இரண்டு ஹோட்டல் அதிபர்களையும் கொண்ட குழு ஒன்றை நியமித்து, தமிழகமெங்கும் சென்று ஹோட்டல்காரர்களின் சிரமத்தையும், நிலைமையையும் கேட்டறிந்தது. அந்தக் குழு சிபாரிசு செய்ததன் பேரில் வடை, தோசை ஆகிய பண்டங்களை மட்டும் ஐந்து காசு கூட்டி விற்கும்படி அரசு உத்தரவிட்டது.

இது ஹோட்டல்காரர்களின் கோரிக்கைகளில் மிகச் சிறிதளவே நிறைவேற்றப்பட்டதாகும்.

அரசு விலை நிர்ணயம் செய்தபோது இருந்ததை விட இன்று விலைவாசி மிக அதிகமாய் ஏறிவிட்டது. (உதாரணமாக அன்று கடலை எண்ணெய் ஒரு கிலோ ரூ. 4.10. இன்று ரூ. 8.00. அன்று உளுந்து கிலோ ரூ. 2.00, இன்று ரூ. 3.00. தேங்காய் ஒன்று அன்று 60 காசு; இன்று ரூ. 1.75.)

இந்த விலை ஏற்றத்திலும் ஹோட்டல் பண்டங்களின் விலை கூட்டப்படவில்லை. அரசுக்குக் கோரிக்கை விடப்பட்டுள்ளது. அரசு ஆவன செய்யும் என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

வரியைப் பொறுத்த வரை அது அரசுக்குச் செலுத்தப்படும் பணமாகும். விற்பனை வரி உள்ள எல்லாப் பொருள்களுக்கும் எல்லா வியாபாரிகளுக்கும் உள்ள நியதியே இது.

திருவாரூர்,
7–1–77 வெ. சுப்புராமன்

உணவுத்துறையில் முன்னேறும் தமிழ்நாடு

உற்பத்தியாளருக்கு உரிய விலை; உபயோகிப்போருக்கு உள நிறைவு

குடியரசுத் தலைவர் ஆட்சிக்குப் பிறகு, தமிழ்நாடு, உணவுத்துறையில் வியத்தகு முன்னேற்றத்தினை அடைந்துள்ளது.

கொள்முதலில் உயரிய சாதனை

தமிழ்நாடு உணவுப் பொருள் வாணிபக் கழகம் 1976ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் நாளிலிருந்து ஆறு வார காலத்திற்குள் 3.83 இலட்சம் டன் அரிசி கொள்முதல் செய்தது. அப்போது இக் கழகத்தின் கையிருப்பு, முன்னெப் போதுமில்லாத அளவுக்கு, 8.81 இலட்சம் டன்னை எட்டியது. அதற்குப்பிறகும், உற்பத்தியாளருக்கு ஆதரவளிக்கும் விலைத் திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்யப்பட்டது. 1976 செப்டம்பர் வரையில் மேலும் 1.43 இலட்சம் டன் கொள்முதல் செய்யப்பட்டது.

இந்தக் கொள்முதல் முழுவதுமே, தனிப்பட்ட வணிகர்களின் உதவியின்றி உணவுப் பொருள் வாணிபக் கழகத்தைச் சேர்ந்த 1100 நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மூலமாகச் செய்யப்பட்டது. இப்படிக்கொள்முதல் செய்யப்பட்ட நெல், தமிழ்நாடு உணவுப் பொருள் வாணிபக் கழகத்துக்குச் சொந்தமான 13 நவீன நெல் அரைவை ஆலைகளில் அரைக்கப் பட்டது. இப்பணியில் 800க்கும் மேற்பட்ட அரைவை ஆலை முகவர்கள் ஈடுபடுத்தப் பட்டனர்.

மாநில அரசு, மத்திய அரசிடமிருந்து பெற்ற 52,000டன் தாய்லாந்து அரிசியைத் திருப்பிக் கொடுத்ததுடன், மத்தியக் களஞ்சியத்திற்கு 62,000 டன் அரிசி வழங்கவும் முடிந்தது.

தங்கு தடையற்ற உணவுப் போக்குவரத்து

ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் அடங்கிய தெற்கு உணவு மண்டலம், 1976ஆம் ஆண்டு அக்டோபர் 15ஆம் நாளிலிருந்து செயல்படத் தொடங்கியது. இந்த உணவு மண்டலம் ஏற்படுத்தப்பட்டதையடுத்து, கேரள மாநிலத்தை அடுத்துள்ள எல்லையோரப் பகுதிகள் நீங்கலாக, மாநிலத்திற்குள் நெல்லும் அரிசியும் எடுத்துச் செல்ல விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் அனைத்தும் நீக்கப்பட்டுவிட்டன.

மொத்த வணிகர்கள், தங்கள் கொள் முதலில் 40 சதவீத அளவை லெவியாகக் கொடுத்த பிறகு, எஞ்சிய அளவை மாநிலத்திற்குள் விற்பனை செய்யலாம். அவர்களிடம் லெவியாகப்பெற்ற 40 சதவீத அளவு பொது விநியோக ஏற்பாட்டுக்குப் பயன்படுத்திக்கொள்ளப் படும். இந்தப் புதிய கொள்கை, உபரி மாவட்டங்களிலுள்ள உற்பத்தியாளர்கள் தங்கள் விளைபொருளுக்கு மேலும் கூடுதலான விலை பெற உதவியுள்ளது; பற்றுக்குறை மாவட்டங்களில் அரிசி விலை குறையவும் உதவிற்று. 1975ஆம் ஆண்டில் ரூ. 4/-க்கும் 1976ஆம் ஆண்டில் ரூ. 3.30க்கும் விற்ற நடுத்தரப் புழுங்கலரிசி இப்போது (கடலூரில்) ரூ. 1-55க்கும் (நாகர்கோவிலில்) ரூ. 2-15க்கும் விற்கிறது.

ஜனதா சாப்பாடு

1976ஆம் ஆண்டில் உணவு விடுதிகள் (உணவுப் பொருள்கள் விலை நிர்ணயம்-விலைப்பட்டியலைப் பார்வைக்கு வைத்தல்) ஆணையைத் தமிழ்நாடு அரசு பிறப்பித்தது; இந்த ஆணையின் மூலம், சாம்பார், ரசம், ஒரு காய்வகையுடன் 500 கிராம் எடையுள்ள அரிசிச்சோறு, ஜனதா சாப்பாடு என்ற பெயரில் ஒரு ரூபாய்க்கு வழங்கும் திட்டம் தொடங்கப் பட்டுள்ளது. கீழ்-நடுத்தர வர்க்கத்தினர், பாட்டாளி வர்க்கத்தினர் ஆகியோரது பொருளாதாரச் சுமையைக் குறைக்க வேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கம்.

மாணவர் விடுதிக்கு மலிவு விலையில் . . .

கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றுடன் இணைந்த மாணவர் விடுதிகளுக்கும் அரிசன நல, பிற்பட்ட வகுப்பினர் நலத்துறை நடத்தும் மாணவர் விடுதிகளுக்கும் கட்டுப் பாட்டு விலையில் அரிசி, கோதுமை, கோதுமைப் பொருள்கள், லெவி சர்க்கரை ஆகியவை வழங்கப் படுகின்றன.


1900 பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயில்கின்ற ஏறத்தாழ 2.4 இலட்சம் மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுகின்றனர். அதன் விளைவாக, ஒவ்வொரு மாணவரும் விடுதியணவுக்குச் செலுத்தவேண்டிய மாதக் கட்டணம் 5 ரூபாயிலிருந்து 20 ரூபாய் வரையில் குறைந்துள்ளது.


பொது விநியோக முறை

பொது விநியோக ஏற்பாட்டின் கீழ் 10,000 சில்லறைக்கடைகள் உள்ளன; இவற்றின் மூலம் அரிசி, கோதுமை, கோதுமைப் பொருட்கள், லெவி சர்க்கரை, மண்ணெண்ணெய், சமையல் எண்ணெய் ஆகியவை விற்பனை செய்யப்படுகின்றன.

தமிழ்நாடு அரசு பிறப்பித்த இன்றியமையாப் பண்டங்கள் (இருப்பு-விலைப்-பட்டியலைப் பார்வைக்கு வைத்தல், கணக்குகளைப் பேணி வருதல்) ஆணையின்படி, இம்மாநிலத்தில் உள்ள வணிகர்கள், ஒவ்வொருவரும் 24 பண்டங்களின் இருப்பு நிலைமை, அவற்றின் விலை குறித்த பட்டியலைக் கடையின் முன் வைக்கவேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது. 1976ஆம் ஆண்டில் இந்த ஆணையை மீறியது தொடர்பான 1433 வழக்குகள் கண்டு பிடிக்கப்பட்டு, நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.


நியாய விலையில் எல்லோருக்கும் உணவு











வெளியீடு:
இயக்குநர், செய்தி,
மக்கள் தொடர்புத் துறை,
தமிழ்நாடு அரசு,
சென்னை 600 009



ADWAVE DIPR 7072/77-4 A

கொலைஞர்கள் கோவலன் கையிலிருந்த சிலம்பை வாங்கி, அது கோப்பெருந்தேவியினுடையதுதானா என்று ஆய்ந்து பார்த்தனர்.

பொய் சொல்வதைத் தொழிலாகக் கொண்டவனான, கொல்லனானவன், கள்வனுக்கப்பட்டுள்ளவனிடமிருந்து பெற்ற சிலம்பின் வேலைப்பாடுகளை யெல்லாம் விவரித்துக் கூறி, அது அரசியினுடையதுதான் என்று கொலைஞர்கள் நம்பும்படி செய்ய முயல்கிறான்.

இந்நிலையில், அரசனால் ஏவப்பட்ட காவலர் இருவரிலே ஒருவன் உத்தமனுக்குரிய இலக்கணங்களை அறிந்தவன். அவன் தன்னுடன் வந்த மற்றொரு காவலனிடம்,

'' இலக்கண முறைமையின் இருந்தோன்,
சங்கிலன் கொலைப்படு மகனலன்''

'உத்தமனுக்குரிய இலக்கணங்களை யெல்லாம் பெற்றவனாக இவன் விளங்குகிறான். இவன் கொலைத் தண்டனைக்குரிய களவுத் தொழில் புரியும் இழிமகன் அல்லன்' என்று உறுதியாகக் கூறினான்.

காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்
கோவலன் பண்டை ஊழ்வினை உருத்து''

என்கிறார் இளங்கோ.

ஊழ்வினை வலிது என்பதனை மக்கள் சமுதாயத்துக்கு உணர்த்த கோவலன் கொலையுண்டதனையும், வளையாத செங்கோல் வளைந்ததனையும் எடுத்துக் காட்டி, அதில் உலகிற்கும் இளங்கோ அறிவுரை கூறுகிறார். அதற்கெனக் கொலைக் காதையின் இறுதியிலே தனியாக ஒரு வெண்பாவையும் படைத்துள்ளார்.

''நன்னும் இருவினையும்; நன்னுமின்கள்,
நல்அறமே
சன்னை — தன் கேள்வன் காரணத்தால்
மண்ணில்
வளையாத செங்கோல் வளைந்ததே; பண்டை
வினைவாகி வந்த வினை''

கோவலன் கொலையுண்ட பின்னர், கண்ணகி தங்கியிருந்த மாதரி இல்லத்திலே தீய குறிகள் காணப்படுகின்றன. குடத்தில் உறை யிட்ட பால் உறையவில்லை; உறியில் வைத்த வெண்ணெய் உருக்கியும் உருகவில்லை; ஆட்டுக் குட்டிகள் துள்ளி விளையாடவில்லை; காளை மாடுகள் கண்களிலிருந்து நீர் சொரிகின்றன; பசுக்களின் கழுத்திலுள்ள மணிகள் அறுப்பாரின்றியே அறுந்து நிலத்தில் வீழ்கின்றன. இத் தீய சகுனங்களைக் கண்ட மாதரி, தன் மகள் ஐயையைப் பார்த்து, ''ஏதோ தீங்கு நேர இருக்கிறது'' என்று கூறுகின்றாள். பின்னர், தன் மனத்தைத் தேற்றிக் கொண்டு, தன்னுடைய மகளையும் தேற்றுபவளாகி, குலதெய்வமாகிய திருமாலை வழிபடுவதற்கு ஆயர் சேரியிலுள்ள பெண்களை யெல்லாம் ஒருங்கு திரட்டினாள் மாதரி. அவர்களிலிருந்து திருமணமாகாத கன்னிப் பெண்களாக ஏழு



சிலம்புச் செல்வம்

பொற்கொல்லனுக்கு உள்ளூர உதைப்பு! ஆயினும், அதை வெளிக்குக் காட்டாமல், கோவலன் உத்தமன் என்று வாதாடிய காவலனை எள்ளி நகையாடினான். காவலன் கூற்றை மறுப்பவனாகி, கள்வனுக்குரிய இலக்கணங்களை யெல்லாம் விவரித்தான். தான் கூறும் இலக்கணத்துடன் கூடிய கள்வர்கள் அரண்மனையிலேயே நிகழ்த்திய களவுகளை நியாய புத்தி படைத்த காவலனுக்கு நினைவு படுத்தினான்.

இதற்குள் மற்றொரு காவலன் பொறுமை இழந்தவனாகி, தன் கையிலிருந்த கொலைவாளால் கோவலனை வெட்டிக் கொன்று விட்டான். இதனை,

'' கல்லாக் களிமகன் ஒருவன் கையில்
வெள்வாள் எறிந்தனன்; விலங்கூடு
அறுத்தது
புண்ணுமிழ் குருதி பொழிந்துடன் பரப்ப
மண்ணக மடந்தை வான்துயர் கூற

வரைத் தேர்ந்தெடுத்து, குரவைக் கூத்தின் முறைப்படி, அவர்களுக்குப் படைத்துப் பெயர் கொடுத்து, முறைப்படுத்தி நிறுத்தினாள். குரவைக் கூத்தில் முதியவளான மாதரி நேரடியாகப் பங்கு பெறவில்லை. ஆயினும் கூத்தின் முறையை அறிந்தவளாதலால், அவளே முன்னின்று நடத்தினாள்.

பொதுவாகத் திருமாலை வழிபடும் இந்தக் குரவைக் கூத்து கண்ணகியின் கதைக்கு நேரடியாகத் தொடர்பில்லாததாகும். ஆயினும் சிலப்பதிகாரம் நாடகக் காப்பியமாதலால், நாட்டு நடப்பை அதிலே காட்ட வேண்டியது ஆசிரியரின் கடமையாகிறது.

(தொடரும்)

(மயிலை இலக்கிய வட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து)

ம.பொ.சி

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600 031.
Managing Editor: T. Sadasivam. Associate Editor: K. Rajendran.

இப்போது !
ஃபாரெக்ஸ்®

(இந்தியாவின் உச்ச விற்பனையுடைய, முதல் திட உணவு)

புது, நவீன ரீஃபில் பெட்டியிலே !

ஃபாரெக்ஸ் இன்று புத்தம் புதுவித ரீஃபில் பெட்டியினுள் வருகிறது — சர்வதேச பேக்கிங் தொழில்நுட்பத்திலே அதி நூதனமான முறை இது.

சுகாதார பாதுகாப்பு அதிகம்–

சிறப்பான ஸீலிங் மூலம் மேம்பட்ட பாதுகாப்பு–





அதி முக்கியம்:



ஃபாரெக்ஸ்

3ம் மாதமுதல் உங்கள் பாப்பாவுக்கான முதல் திட உணவு.

LIL-GF-55-207 TM

Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேசிய காசு

